# அன்பர்களுக்கு எழுதிய தபால்கள்





பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# அன்பர்களுக்கு எழுதிய தபால்கள்

# பொருளடக்கம்


1. முகவுரை------------------------------------------------------------1

௨. நம்பினார் கெடுவதில்லை--------------------------------------------௨

௩. எடுப்பார் கைகுழந்தை---------------------------------------------16

௪. குரு சிஷ்ய அன்னங்கள்--------------------------------------------17

5. முடிவுரை-------------------------------------------------------------௩1

6. வேண்டியது வேண்டாதது-------------------------------------------௩௨

7. இல்லையென்ற தில்லையில் இல்லையென்பதும் இல்லையே----------௪௩

அ. ரிபுகீதை பாடல்கள் விளக்கம்-------------------------------௪௪

ஆ. வள்ளலார் பாடலின் விளக்கம்------------------------------௪௯

இ. வருவாயா ஸ்ரீரங்கா பாடலில் ஓர் நான்கு வரிகளுக்கு விளக்கம்-------57

8. பாடல்கள்.--------------------------------------------------------------60

௯. இயேசுவின் அமுத மொழிகள்--------------------------------------61

அ. கேளுங்கள் கொடுக்கப்படும்--------------------------------6௨

ஆ. தட்டுங்கள் திறக்கப்படும்----------------------------------66

இ. தேடுங்கள் கிடைக்கும்-------------------------------------68

ஈ. குரு, சத்குரு விளக்கம்-------------------------------------78

உ. பிதாவின் அன்புக்குரல்-------------------------------------8௪

ஊ. கர்த்தரின் வாசகம்-----------------------------------------௯0

10. இந்து, கிறிஸ்துவன் மற்றும் முகமதியன் விளக்கம்------------------௯1

11. ஸ்ரீசத்குருதேவரின் நான்கு மஹாவாக்கிய உபதேசம்--------------------௯7

1௨. பயிற்சியும், முயற்சியும்----------------------------------------------௯௯

1௩. பசு, பதி, ஈஸ்வரன்--------------------------------------------------10௩


எல்லாம் நீ!



ஸத்யம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

# அறிமுகம்

ஓ எம் ஞான அமுதங்களே!

உங்கள் அடக்கத்தினால் மனநிறைவும் ஆத்மசுகமும் பெற வாழ்த்துகிறோம். இந்த இதழில் மெய்யன்பர்கள் தபால் இரண்டை பணிவன்புடன் உங்கள் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கிறோம்.

ஒன்று எளிமைக்கு இறைவன் எப்படி கட்டுப்படுகிறான் என்றும், சதிபதியாகிய பக்தர்கள் எப்படி இயங்க வேண்டுமென்றும், அவர்கள் தூல இயக்கமும் மனோவேகமும் எப்படி அமைந்திருக்க வேண்டுமென்றும், அதற்கேற்றபடி இறைவனும் தன்னை எப்படி தயார் செய்து கொள்கிறான் என்றும், உள்ளம் கனிந்து, கசிந்து, உருகி கரைந்து பாகாகும் நிலையில் அமைந்திருக்கிறது.

மற்றொன்று இரண்டு அன்னங்களை சுட்டிக்காட்டி ஒன்றை பக்தியாகிய (சுயமரண) சிஷ்யனாகவும், மற்றொன்றை கூர்ந்த அறிவாகிய (ஸ்திரமான) குருவாகவும், சுட்டிக்காட்டி, எப்படி நம் சுயபுத்தியினால் மேலும் மேலும் பிறவிகள் தொடர்கிறதென்றும் உணர்த்தி, தம் கருணையினால் சகோதர அன்னம் (குரு) தம் இனமான சக அன்னத்தையும் (சிஷ்யனையும்) எப்படி இணைத்துக் கொள்கிறது என்பதையும் உணர்த்தி அமைந்திருக்கிறது.

குழந்தைகளே!

இவைகளை கதையாக படிக்காமல் கருத்தாக உணர்ந்து உங்களையும் அன்பு, பணிவு, கனிவினால் கரைந்து மெய்யாக்கவும், சுயம் சலனம் சந்தேகமென்ற சஞ்சல பேய்கள் உங்களைப் பிடிக்காவண்ணம் "நாம் அந்த ஒன்றே" என்ற பேருணர்வில் மெய்யாகும்படி உங்கள் பாதாரவிந்தங்களில் பணிந்து கேட்டுக் கொள்கிறோம்!

பாபா



ஸத்யம் பேசு. ஓம் தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

## “நம்பினோர் கெடுவதில்லை.”!!!

ஓம் அன்பின் குழந்தைகள்!

**“வசுதேவ்”! “தேவகி”! “கண்ணா”! “பல்ராம்”!**

உங்கள் நாவு அடக்கத்திலும், சென்ற காலம் வரும் கால கற்பனைகளை விரிக்காமல் இருந்தாலும், நடைபெறும் அனைத்தையும் அது **“நலமே”!** அது **“சுகமே”** என அமைதியின் ஆனந்தமாக இருந்தால் உங்கள் எண்ணமே பலிதமாகி, இகத்தில் துன்பம் தோன்றாமல் தெய்வீக வாழ்க்கையும், அதன் சாதனை முதிர்ச்சியில் ஆத்ம சாட்சாத்காரமும் பெற்று ஜீவன் முக்தி நிலை பெறுவீர்கள் எனக்கூறி ஆசி வழங்குகின்றோம்.

எம் அன்னையே தேவகி ஓர் கதை சொல்கிறோம் கருத்துடன் கேட்பாயாக!

அம்மா தேவகி!

பாண்டு, திருதராஷ்டிரன், விதுரன் இவர்கள் மூவரில் முதல் இருவரைப்பற்றி சொல்லத் தேவை இல்லை. ஆனால் இந்த விதுரன் சாஸ்திர வேத பண்டிதனாகவும், ஓரளவு சிறந்த ஞானியாகவும், உத்தியோகத்தில் மதி யூக மந்திரியாகவும் வாழ்ந்து வந்தான். இவன் க்ஷத்ரிய குலம். நம் கண்ணன் யாதவ (இடையர்) குலம்.

இந்த விதுரன் பால்யத்தில் கண்ணனுடைய லீலா விநோதங்களையும் உணர்ந்து கண்ணனைக் காண ஏக்கமும் துடிப்பும் கொண்டிருந்தான். கண்ணனை இறைவன் அவதாரம் எனவும் உணர்ந்திருந்தான். பலமுறை கண்ணனை தனியாகக் காண முயற்சி செய்தான். அது முடியவில்லை அவன் அனுமதி இல்லாமல் அவனை காண முடியாது தான். இருந்தாலும் ஜீவ முயற்சி செய்தால் தான் இறைவன் கருணையும் அங்கு கைகொடுக்கும். ஜீவன் எந்த முயற்சியும் செய்யாமல்



உ

அவன் பார்த்துப்பான் என்ற நம்பிக்கையுடன் இருந்தாலும்,
அவன் என்று சொல்லும் அந்த இறைவனைக் காண உள்ளத்
துடிப்புடன் இருந்தால் தான், ஏக்கத்துடன் இருந்தால் தான்,

**"உள் ஏக்கமும், அவன் கருணையும்!!!"**

ஓர் காலில் அது நிலை கூட்டி வைத்து ஸ்ரீ பகவானையும் பக்தனையும் இணைய வைக்கிறது. நன்றாக கவனித்தால் இதன் உண்மை புரியும். பக்தர்களும், பாகவதர்களும், நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும்,
ஸ்ரீ பகவான் பார்த்துக் கொள்வான் என்ற ஆழ நம்பிக்கையில் உடல், உறவு, உலகத் தொழில் மறந்தனர்!

**"ஆனால் அவனை மறக்கவில்லை"!!**

இங்கு அவனை மறக்கக் கூடிய அளவுக்கு உடல் உலகம் இந்த பக்தனை நெருக்கி கசக்கி பிழியும்!

"ஆனாலும் அயரமாட்டார்கள் கலங்கமாட்டார்கள்"
"ஆனால் அவனைக் காணாமல் சோர்வார்கள் கலங்குவார்கள்"
"உண்மையை காணத் துடிக்கும் மனம் பொய்மையை உதற வேண்டும்"
இங்கு அவன் பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையிலும்

**"அவன் நாமாவை பற்றுவர்"!!**

இதனால் உடல் உலக சிரமமும் நீங்குவர். அவன் இருப்பை இவர் உள் உணர்வால் உணர்வர்! இவர் வெளிக் காட்சியும் பெறுவர்! இவருக்கு ஏக காலத்தில் இவ்விரு நிலைகளையும் பெறுவர்!!

**"இது அவரவர் மனோபக்குவம்"!!!**

எம் செல்வக் குழந்தாய்!
தேவகி! இங்கு நம் விதுரன் கண்ணன் தரிசனத்திற்காக முதலில் துடித்தான். இவன் துடிப்பும் அவன் கருணையும் இணைந்தது. அதனால் பலமுறை தரிசனமும் கிடைத்தது. அதில் பேரானந்தம் அடைந்தான்.



## 2

அந்த கண்ணனின் திவ்விய காட்சியையும், அவன் மோஹன புன்னகையையும், சிலசமயம் கலகலகல் சிரிப்பொலியையும் விதவிதமாக அனுபவித்தான் இந்த விதுரன்.

### விதுரன் உணர்ந்த விதம்

கண்ணனின் சிரிப்பில் பல அர்த்த பாவனைகள் உண்டு. ஓர் காரியம் நடைபெறும் என்றாலும் ஓர் மாயச் சிரிப்பு சிரிப்பான். ஓர் காரியம் நடைபெறாது என்றாலும் ஓர் குறும் சிரிப்பு சிரிப்பான். பல முறை கண்ணன் தரிசனம் பெற்ற பிறகு அந்த அர்த்த பாவனையெல்லாம் விதுரன் உணர்ந்து கொண்டான்.

விதுரனைப்பற்றி இரண்டொரு வரிகள் சொல்ல வேண்டுமென்றால் அவன் ஓர் சக்ரவர்த்தியிடம் மந்திரி வேலை பார்த்தாலும் தாம் ஆடம்பரம் விரும்பாதவன். பிறர் புகழ்ச்சிகளை ஏற்காதவன். எதையும் விட்டுக் கொடுத்து விலகக் கூடியவன். தனக்கென எந்த பிடிப்பும் இல்லாதவன். ஆனால் ஹரி நாம பிடிப்பு ஒன்றை மட்டும் வைத்திருந்தான். எக்காலத்திலும் எந்நிலையிலும் உலகமே நிலை பெயரினும் தன் நிலை மாறாதவன். எளிமையையே தம் ஆபரணமாக கொண்டவன். விதுரன் தர்ம பத்னியும் தம் கணவனை ஒத்தே இருந்தாள்.

நம் கண்ணன் அஸ்தினாபுரிக்கு நான்குமுறை பாதசாரி (நடையாவனி) யாக தூது சென்றான். அந்த ராஜபாட்டையில் (ராஜ வீதியில்) இருபுறமும் மந்திரி, பிரதானிகள், சேனைத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் மாளிகைகள் பிரம்மாண்டமான முறையில் அமைந்திருந்தன. கண்ணன் தூது செல்லும் சமயம் அந்த ராஜ வீதியில் உள்ள துரியோதனன் தம்பிமார்களும் மற்றும் பிரமுகர்களும் கண்ணா, கண்ணா, கண்ணா, என அதிகாரத்திலும், படோடோபத்திலும், அஹங்காரத்திலும், அபிமான வகையிலும் பல விதமாக அழைத்து தம் இல்லத்திற்கு வருகை தரும்படி கெஞ்சியும் கொஞ்சியும், கபடமாகவும், ஏளனமாகவும் பரிகாசமாகவும் அழைப்பார்கள். அந்த மூன்று முறையும் எவர் இல்லத்திற்கும் சென்றதில்லை நம் கண்ணன்.



உ

இன்பமாக இருங்கள். இன்பமாக இருங்கள் என ஆனந்தமாக
சிரித்தவண்ணம் சொல்லிக்கொண்டே சென்றுவிடுவான். நூதன
மான கேட்டி டக்கலியோடு கூடிய வீடுகளைச் சற்று கூர்ந்து நோக்
குவான். இது யார் மாளிகையென்பான். உடன் வருபவர்கள் இது
இன்னார் மாளிகை. இது இன்னார் மாளிகையென்று அதன் உரிமை
யாளர்களின் நாமாவை சொல்லிவைப்பார்கள். அந்த மாளி
கைக்குரியவர்கள் உடன் இருந்தால் இது என்னுடைய மாளிகை
மார் தட்டிக் கூறுவர். உடனே கண்ணா! இங்கு உள்ளே சென்று
வரலாமே என்றால்? வெகு அழகு, வெகு அற்புதம், பலே ஜோர்,
என மகஜரையும் மட்டும் கூறிக்கொண்டே அப்புறம் பார்க்கு
வாம் எனச் சொல்லி நழுவி விடுவான் நம் கண்ணன். இவரிடம்
உம் இல்லத்தில் அந்த மஹாலக்ஷ்மியே குடியிருக்கிறாள் ஆகவே
இந்த இடையன் வரத்தகுதி இல்லையென்பான். இவரிடம் உம் இல்லத்
தில் அஷ்ட ஐஸ்வர்யத்தோடு அஷ்டலக்ஷ்மியே குடியிருக்கி
றாள். அங்கு இந்த மாடுகளை மேய்ப்பவன் வரத் தகுதி அற்றவன் என்
பான். இவரிடம் கலைகளுக்கெல்லாம் அதிபதியாகிய அந்த கலை
வாணியே குடியிருக்கிறாள் உங்கள் இல்லம் ஓர் கல்விக்கூடம்
அங்கு இந்த களவாணிப்பயல் (திருடன்) வரத் தகுதி அற்றவன்
என்பான். இவரிடம் உம் இல்லம் சக்தி இல்லமாகும் அங்கு
அம்பாள் உமா மகேஸ்வரி குடியிருக்கிறாள். அங்கு சும்மாவே
இருக்கும் இந்த உதவாக்கரை வரத் தகுதி அற்றவன் என்பான்.

ஆனால்??? **(ஏமாந்தவன்)**

உலகெங்கும் உபகாரியாக இருக்கும் அனைவரையும் தட்டிக்
கழித்துக்கொண்டே வந்தான்!

## தன் காரியத்திலேயே கண்ணாக இருந்தான்!

குழந்தாய்! தேவகி எம் வசுதேவ்!

நான்கு தினங்களும்
இவ்வாறே வந்த கண்ணன் முடிவில் அந்தெருவின் ஓர் சந்திலே
டே தாமாக திரும்பினான். ஒவ்வொரு சமயமும் நம் விதுரன் எம்
மொழியும் பேசாமல் மௌனமாகவே வந்தான். அந்த சந்தின்
வழியே திரும்பும் போது சரேலென கண்ணன் திருவடிகளில் வீழ்ந்து



உ

அவ்விரு பத்மபாதத்தையும் பற்றிக் கொண்டே விதுரன் சொல்லுவான், ஹே பரமாத்மா! இன்று பாதை மாறி இறந்தே காரணம் என்ன? என பணிந்து கனிந்து கேட்டான். எமதய்யனும் இன்று ஏனோ கால்கள் இந்த பாதையை நோக்கிச் செல்கின்றன, காரணம் யாம் அறியோம். இன்று இப்படித்தான் சென்று பார்ப்போமே? இதன் முடிவை அப்புறம் பார்ப்போம். என சூசகமாக சொன்னதை விதுரன் ஒருவனே உணர்ந்தான். ஏனையோர் அனைவரும் உணர முடியவில்லை. விதுரனைத் தவிர ஏனையோர் அனைவரும் பின் தங்கினர். பின்னர் கண்ணா! இனி நாளை சந்திப்போம் என வணங்கிச் சென்றுவிட்டனர்.

அந்த சந்தானது ஓர் வசதிகள் இல்லாத ஓர் சிறிய இல்லத்தில் போய் முடிந்தது. விதுரன் ஏனோ சற்று பின் தங்கியே சென்றான். அந்த வீட்டின் முகப்பில் ஓர் சிறிய போர்டு தொங்கிக் கொண்டிருந்தது. அந்த போர்டுக்கு ஓர் கதம்ப சரம் (கதம்பமாலை) போடப்பட்டிருந்தது. அதை கண்ணன் கூர்ந்து நோக்கினான்.

அந்த போர்டின் வாசகம் **“கண்ணன் குடில்”!**

இவ்வாசகத்தை கண்ணன் படித்துப் பார்த்தான்

எமக்கும் இங்கு ஓர் குடில் இருக்கிறதா???

என கேட்டுக் கொண்டே அக் குடிசையின் உள்ளே நுழைந்து விட்ட எமதய்யன். உள்ளே விதுரனின் மனைவி ஏதோ காரியமாக வேலை பார்த்துக் கொண்டிருந்தாள். முதலில் கண்ணனும் பின் தங்கிய நிலையில் தம் கணவனும் வருவதைக் கண்டாள் அத்தர்மபத்தினி! உடனே ஓர் செம்பில் ஜலம் கொண்டு வந்து தம் பதியின் பாதத்தை அலம்பினாள். துளசிமாடத்தில் இரண்டு துளசி தளம் (இலை) எடுத்து தம் கணவன் திருவடிகளில் போட்டாள். அவ்விரண்டையும் தானே எடுத்து தம் தலையில் ஒன்றை சூடிக் கொண்டாள். மற்றொன்றை தம் வாயில் போட்டுக்கொண்டாள் அம்மாதரசி. பின் கணவனை நோக்கினாள். அவனும் தம் தலையை அசைக்க கண்ணன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள். ஓர் தர்மபத்தினி தம் கணவன் அனுமதி இல்லாமல் எதுவும் செய்யக் கூடாது இது பதிவிரதா தர்மம்.



உ

## ஓர் முக்கியமான விஷயம்

விதுரன் ஓர் மந்திரி என்றுதான் பெயர். ஆனால் ஏழ்மையில் மேலான ஏழ்மையுடன் வாழ்ந்து வந்தான். தமக்கு வரும் வருமானத்தையெல்லாம் அதிதிகளுக்கு தானம் செய்து விடுவான். அப்போதைக்கப்போது தேவையை மட்டும் வைத்துக் கொள்வான். "சேமிப்பு அவஸ்யம் இல்லை". வீட்டினுள் பசும் சாணமிட்டு மெழுகிய மண் தரை. அமரவோ படுக்கவோ சில கோரைப்பாய்கள். ஓர் ஆசனமும் கிடையாது. ஆனால் தர்ப்பாசனம் சில இருந்தன. சிலமாதங்கள் அமருவதற்கு மட்டும் அத்தர்ப்பாசனத்தை உபயோகப்படுத்துவான். அந்த ஏழ்மையிலும் இல்லையென்ற வார்த்தையே அவனிடம் இல்லாதிருந்தது. இறைவன் திருமையினால் அனைத்திலும் வளைந்து, நெகிழ்ந்து, பணிந்து கனிந்து தம் வாழ்க்கை சக்கரத்தை ஓட்டி வந்தான்.

இன்று கண்ணன் வந்ததும் தம் வீட்டினுள் இடிந்து போன ஓர் சுவர் சற்று உயரமாக இருந்தது அதை ஆசனமாகவும் அமரும் இடமாகவும் பயன்படுத்தி அதில் தர்ப்பையை விரித்து கண்ணனை அமரச்செய்து விதுரனும் அவன் தர்மபத்தினியும் இணைந்து பாத பூஜையை முடித்துக் கொண்டனர்.

விதுரன் :- ஹேமாதவா! கேசவா! இருடிகேசா! கோபாலா! கோவிந்தா! எம் கண்ணின் கண்ணே! இவ்வேழையின் குடிசை உனக்கு ஞாபகம் இருக்கிறதா?

கண்ணன் :- அன்பா விதுரா! "வசதியான வாழ்வை விட அசதியான (ஏழ்மையான) வாழ்வே எமக்குகந்தது. ஆனால் இங்கு அசதி வாழ்வுக்கே தவிர உள்ளத்திற்கல்ல. உள்ளம் எந்த விநாடியும் இறை கருணையால் நனையப்பட்டு ஆனந்தம் என்னும் வசதியோடுதான் இருக்கும்.

விதுரன் :- உண்மைதான் கோபாலா! வாழ்க்கையில் நாட்டம் உண்டாகும் போது தேட்டம் (தேவை) உண்டாகிறது. அந்த தேட்டத்தை இறைநாட்டத்தால் பெறுவதற்கு ஓர் சந்தர்ப்பம் கிடைக்கிறது. தானே தேட்டத்தை (தேவையை) தேடிக் கொள்ளும் போது அவன் மேலும் மேலும் பாபத்தைத்தான் தேடிக் கொள்கிறான். அதே தேட்டத்தை (தேவையை) இறைநாமா யோகம் அதனால் கிடைக்கும் கருணையோகம் பெற்றுக் கொண்டால்



உ

வாழ்க்கை ஒழுக்கம் நிறைந்த வாழ்வாகவும் இருக்கும். அங்கு பாப தேட்டம் (சம்பாத்யம்) வரவும் செய்யாது. மேலும் தேவைக்கு அதிகமான பொருளோ பொன்னோ இருந்தால் தேவை எண்ணம் விட்டுப் போகும். அந்த பொன் பொருளின் போகத்தில் மூழ்கி விடும்போது நாம் அனுபவிக்கும் சுவைக்குத் தக்கபடி (பாப) சுமையையும் ஏற்றுக் கொள்கிறோம்.

கண்ணன் :— ஹே விதுரா! தர்மத்தைப்பற்றியும் நீதிவாக்கியங்களைப் பற்றியும் நீ பேசிக் கொண்டே போனால் நீ காலத்தையும் மறந்து விடுவாய். மேலும் எந்த காலங்களில் என்ன செய்யவேண்டுமென்பதையும் மறந்து விடுவாய். இப்போது பார் யாம் உன் விருந்தினராக வந்திருக்கிறோம். எம் பசியைப் போக்காமல் தர்மத்தை பேசிக் கொண்டிருந்தால் எம் பசி நிவாரணமாகுமோ? அம்மா புண்ணியவதி! உன் கணவன் செய்வதைப் பார்த்தாயா நீதான் அன்னபூரணி! ஏதேனும் உணவு கொண்டு வா சாப்பிட்டுவிட்டு அப்புறம் பேசலாம் என அவ்விருவரையும் துரிதப் படுத்தினான் எம் கண்ணன்.

விதுரனும் அவன் மனைவியும் அடுத்த அறையில் போய் ஏதோ குசு குசு என்று பேசிக் கொண்டார்கள். விதுரன் மனைவிடம் கேட்டான் வராதவிருந்தினராக நம் கண்ணனே வந்து விட்டான். அவன் பசியாற என்ன வைத்திருக்கிறாய் என்றான். அவன் நாயகியும் ஸ்வாமி எமக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை நம் வீட்டில் இன்று ஒன்றும் இல்லையே என்ன செய்வது? என்றாள். நேற்று ராகி களி கிண்டியிருந்தாயே அது என்ன ஆயிற்று என விதுரன் கேட்டான். ஸ்வாமி இன்று காலையில் தான் ஓர் அடியாருக்கு அந்த இரண்டு களியும் போட்டு விட்டோம். அடியில் கொஞ்சம் ஒட்டியிருக்கிறது. அதை கொடுக்கலாம் என்றால் வந்த விருந்தாளியோ "துவாரகாதீசன்" ஓர் சக்ரவர்த்திக்கு அதைக் கொடுத்தால் பொருந்தாது என பேசிக் கொண்டிருக்கும் போதே எம் கண்ணன் குரல் கொடுத்தான். அங்கு என்ன முணு முணுப்பு? எம் பசியைப் போக்க உங்களால் ஆகாது என்றால் அங்கே அந்த போர்டு (கண்ணன் குடில்) ஏன் போட்டிருக்கிறீர்கள். அந்த போர்டை கழற்றித்தூர எறியுங்கள். விதுரா மனமும் திரியாயிற்றே இன்று நமக்கு வசமான உணவு கிடைக்கும் என நம்பி இங்கு தேடி வந்தோமே? வசமான ஆகாரம் கிடைக்கா விட்டாலும் எம் பசிக்கு ஏதேனும் இருந்தால் கொடுக்கலாமே என அரிதப்படுத்தினான் எம் இறைவன்.



## உ

விதுரன் மனைவி கேட்கிறாள் எம்பிரானை நேசா! நேற்று நம் வீட்டு அடுத்த வாழைத்தோட்டத்தில் ஓர் வாழைக்குலை பழுத்த நிலையில் இருந்தது அதை சீக்கிரமாக அறுத்து வாருங்கள் எனத் துரிதப்படுத்தினாள் அத்தருணத்தில். விதுரனும் ஒருகத்தியுடன் கொல்லைப்புறம் வழியாக வெளியே ஓடினான். ஓடிச் சென்றவன் ஓர் பழத்தாருடன் (பழக்குலை) வந்தான்.

விதுரன் :- கண்ணா! கண்ணா! என்னை மன்னித்துவிடு! எங்கள் நிலை அப்படி அதை நீ அறியாதவனா? இதோ பார் ஒருகுலை வாழைப்பழம், உனக்கு தேவையானதை உரித்து சாப்பிடு, அப்புறம் மற்றதைப் பேசிக் கொள்ளலாம்!

கண்ணன் :- என் அன்பான விதுரா! எனக்காக எத்தனை சிரமம் உனக்கு எனக்கு பசியென வந்தால் மற்றவர்களையும் ஓர் ஆட்டு ஆட்டி வைத்துவிடுவோம். என்னை மன்னித்துவிடு. ஐயா விதுர தேவனே! என் பசி இருக்கும் வேகத்தில் இப்பழக்குலையிலிருந்து பழத்தைப் பிய்த்து, அதை உரித்து சாப்பிடும் அளவுக்கு எனக்கு பொறுமை காணாது. ஆகவே நீயே உன் கைபட உரித்து பழத்தை மட்டும் என் வாயில் போட்டு விடேன்? உன் மனைவி குலையின் பழத்தைப் பிய்த்து உன்னிடம் கொடுப்பாளாம். நீ அதை உரித்து என் வாயில் போட்டு விடுவாயாம். நானும் சுவைத்து ருசித்து என் பசி உள்ளமட்டும் சாப்பிடுவேனாம் என்ன சம்மதமா? என அகடவிகடமாக எம்மையன் கேட்கிறான்.

எம் அன்புச் செல்வமே!

தேவகி! எம் கண்ணன் அமர்ந்திருந்த கோலத்தையும் காண்கிறோம். ஓர் பக்கத்தில் விதுரன் நின்ற கோலத்தையும் காண்கின்றோம். ஓர் பக்கம் விதுர பத்தினி பழம் பிய்த்து கொடுக்கும் காட்சியையும் காண்கின்றோம் "அம்மா" - எம் செவிகளில் ஒலிக்கிறது.

---

தேவகி! எம் கண்ணனின் உண்மைதாயே! எம் கண்ணனின் ஒரு மயில்பீலியும் எம்பக்தன் விதுரனுக்கு நேராக அசைந்து அசைந்து வெண்சாமரம் வீசுகிறது. அவன் நெற்றியில் உள்ள கோபி கலியாவண்ணம் வியர்வைத்துளி சிறுசிறு முத்துக்களாக நிற்கின்றன.



உ

எம் கண்ணன் கருவிழிகள் அன்பும் கருணையும் கொண்டு எம் விதுரனையும் அவன் தர்மபத்தினியையும் ஆனந்தத்தால் வசீகரிக்கின்றன. அவன் வலக்காதின் பக்கம் தொங்கும் நவரத்ன குஞ்சம் அசைந்து அசைந்து நலம் பெறுவீர்கள் என சொல்லாமல் சொல்கிறது. அவன் சிங்கார நாசி (மூக்கு) அப்பழத்தின் இயற்கை மணத்தை சுருங்கவும் விரியவும், சுருங்கவும் விரியவும் செய்து சுகந்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அவன் கொவ்வைச் செவ்வாய் (சிவந்த பவளம் போன்ற வாய்) விதுரன் கொடுப்பதை சுவைத்து சுவைத்து ஏற்றுக் கொள்கிறது. கண்ணன் தாடை (நாடி) அசைவும் அவன் நாவு சுழலும் விதமும் காணும் எம்மையே மெய் சிலிர்க்க வைத்து உணர்ச்சியற்ற கட்டையாக்கி விட்டது ------------------------- அத்துடன் ???

கண்ணன் ராதையாகிய புல்லாங்குழலுடன் அவன் வலக்கரம் **"ரக்ஷித்தோம்"** என அபய கரம் காட்டுகிறது !!!

இவைகளை கண்டு உணரும் கண்ணும் கரமும் எழுதுகோலும் தம் பணியை மறந்து செயலற்று விட்டன. சற்று பொறுக்கவும்.

ஓ எம் செல்வம் புதல்வனின் தர்மபத்தினியாய் இந்த ஜன்மாவில் அமைந்த எம் குழந்தாய்! **தேவகி...!!!**
அங்கு உள்ள நிலையை இனி உணராய் -------- ???

எம் விதுரனின் தர்மபத்தினி அந்த வாழைக்குலையிலிருந்து ஒவ்வொரு பழமாக பிய்த்து தம் நாதனின் கரத்தில் கொடுக்கிறாள். கரம் தம் பணியை ஒழுங்காகச் செய்கிறது. ஆனால் அவர் கண்கள் உ **கண்ணனின் கண்ணிலேயே!** லயித்து நின்று விட்டது. விதுரனும் அம்பழங்களை மனைவியிடம் இருந்து வாங்கி தோலை உரிக்கிறான். பழங்களை கீழே போடுகிறான். தோலியை கண்ணன் பவள வாயில் ஊட்டுகிறான். ஆனால் விதுரனின் கண்களும் **கண்ணனின் கண்ணிலேயே!** லயித்து நின்று விட்டது.



## 2

அம்மா எம்மை ஈன்ற தாயே!

தேவகி! இங்கு நிலை மாறுகிறது. கர்மங்கள் மாறுகின்றது. தர்மங்கள் மாறுகின்றது. ஏன் காலத்தின் சுழற்சியே மாறுகின்றது!!

**"எம்பிரபு தோலைச் சுவைக்கிறான்"!!!**

பேரானந்தபரவசத்தில் திளைக்கிறான்! எம் விதுரனே கண்ணன் சுவைத்து சுவைத்து உண்ணும் நிலையைகண்டு பேரானந்தத்தில் கண்ணன் என்ற உணர்வுடனே ஒன்றி விடுகிறான். அவன் தர்மபத்தினியோ தம் கணவன் ஊட்டும் அழகையும், அதைச்சுவைத்துமகிழும் கண்ணனின் திருமுகமண்டலத்தையும், உள்உணர்வால் உணர்ந்து பரம்பாகவத சேவையில் தம்மையே மறந்து நிற்கிறாள்!

ஓர் குலை வாழைப்பழங்களும் காலி! கண்ணையும் பாவமாக ஏப்பம் விடுகிறான். எம் விதுரன் என் கண்ணா உன்பசி தீர்ந்து விட்டதா? என கனிவுடன் கேட்கிறான். எம் தய்யனும் யாம் இதுகால பரியந்தம் இப்படி சுவைத்து உண்டதே இல்லை. அன்பு கனிந்த இரு உள்ளங்கள், பரிவுடன் பரிமாற்றம். எவருக்கு கிடைக்கும் இப்படி விருந்துவை என போற்றிப் புகழ்ந்தான் எம் தய்யன்.

உலக நிலை உணர்வு வந்த தன்மையால் அம் மூவரும் தெய்வாதீனமாக கீழே நோக்குகின்றனர் ஓர் ஆச்சர்யம் கீழே விழுந்த பழங்களின் தோலிகள் போன்ற சில பறவைகளும், சில அணில்களும் வானர கூட்டங்களும் எந்த சப்தமும் போடாமல், சண்டையிடாமல் பேதமில்லா தன்மையில் அமைதியாக ஆனந்தமாக சுவைத்து உண்டு தங்கள் பசியை ஆற்றிக் கொண்டிருந்தன.

மூவரும் ஆச்சர்யமும் இருவர் அதிர்ச்சியும் அடைந்தனர். விதுரன் முதலில் அலறினான் :- எம்பிரபோ! கண்ணா! இது என்ன கோலம்? பழத்தை கீழே போட்டுவிட்டு வெறும் தோலியை உன் வாயில் ஊட்டியிருக்கிறேனே? இம் மடமதியை என்னவென்பது? எத்தகைய அபசாரம் நடந்திருக்கிறது? இந்த தோலிகளையும் எத்தனை அருமையாக சுவைத்து மகிழ்ந்திருக்கிறாய்?



## 2

எம் செயலுக்கு மன்னிப்பே கிடையாது! எம்பிரபுவே! இக்குற்றத்தை நீ மன்னிப்பாயா? என கண்ணன் திருவடியில் விழுந்தான் விதுரன். அவன் மனைவியும் கதறி பதறி கண்ணன் திருவடியில் விழுந்தாள். எம் கண்ணனும் ஓர் ஆனந்தமான உரத்த சிரிப்புடன் அவ்விருவரையும் எழச் செய்து, தம் பீதாம்பரத்தால் அவ்விருவரின் கண்ணீரைத் துடைத்து உடலையும் தடவிக் கொடுத்து விதுரனை மட்டும் ஆரத் தழுவி உச்சி மோந்து முத்தமிட்டு ஆறுதலாக இவ்வார்த்தைகள் சொன்னான்.

### கண்ணன் வாசகம்!

ஓ எம் அன்பான விதுரா! அம்மா குலமகளே! வருந்தற்க! அஞ்சற்க! சோரற்க! இது எம் நாடகமாகும் நீங்கள் இருவரும் பதுமைகள் தானே? உங்கள் வினையின்படி யாம் ஆட்டுவிக்கிறோம். நீங்கள் ஆடினீர்கள். இதில் உங்கள் குற்றம் என்ன இருக்கிறது?

களங்கம் இல்லா நிலையென்றும், பாரபட்சம் அற்ற நிலையென்றும், அபேத திருஷ்டி யென்றும், சர்வ சதா ஆனந்த நிலையென்றும்,

**“ஓரியல்பாயிருக்கும் எம் நிலை”!!!**

இதுதான்!!!

இங்கு அபசாரமோ, அனாச்சாரமோ, அசூசையோ, களங்கமோ அவசியம் இராது. மேலும் எம் மெய்யன்பர்கள் எதைச் செய்தாலும் என்ன சொன்னாலும் அதை அப்படியே புரிவோம் ஏற்றுக் கொள்ளுவோம். இங்கு தராதரம் ஏற்றத்தாழ்வு யாம் பார்ப்பதில்லை.

அனைத்தும் நலமே அது சுகமே!!!

இந்த அணில்களும், வானரங்களும், பறவை இனங்களும் “உன்னைப் பிரசாதமாகவும், எம் உச்சிஷ்டமாகவும்” பெற வெகு காலம் காத்திருந்தார்கள். அது அதன் கருணையினால் இன்று நிறைவேறியது அவ்வளவுதான். எது நடந்தாலும் அது நலமே நடக்கிறது என்ற உள்ளுணர்வைப் பெறுங்கள். அங்கு அவசியம் குற்றம் குறைகள் தோன்றாது என கனிய கனிய மொழிந்தான் எம் கண்ணன்.



## உ

விதுரனும் அவன் மனைவியும் ஒருவாறு சாந்தி அடைந்தனர். இருந்தாலும் கண்ணன் பசியாற உண்ணவில்லையென்ற குறை விதுரன் மனதைவிட்டுப் போகவில்லை. விதுரன் சொன்னான் எப்படியோ எங்களை சமாதானப்படுத்திவிட்டாய். இருந்தாலும் எங்கள் திருப்திக்காக ஏதேனும் உனக்கு நாங்கள் கொடுத்தே ஆகவேண்டும். அதை நீயும் ஏற்றே ஆகவேண்டும்.

எம் மெய்யான தாயே!

தேவகி! (இங்கு எம் கண்ணன் கபடமாகச் சிரித்தான் தனக்குள் பேசிக்கொண்டான் அதாவது "நீங்கள் திருப்திப்படுத்தும் நிலையில் எம்மை சங்கடப்படுத்தி அதிலும் ஓர் பேரானந்தம் அனுபவிக்க "அதன் முடிவு" உங்கள் இருவரின் மூலமாக வருகிறது போலும்?)

"என உணர்ந்தவனாய் அடுத்த நிகழ்ச்சிக்கு தம்மை தயார் செய்து கொண்டான்"

கண்ணன் கேட்டான்:- அருந்து என்ன வைத்திருக்கிறீர்கள்? எதைக் கொடுக்கப் போகிறீர்கள்? நடக்கட்டும் என்றான். விதுரன் சொன்னான்:- ஹே தயாநிதி! இந்த ஏழையிடம் வேறு என்ன இருக்கப் போகிறது? நேற்று கிண்டி வைத்த "ராகி களி" கொஞ்சம் இருக்கிறது அதைச் சாப்பிட்டால் போதும் நாங்கள் திருப்தியுறுவோம் என்றான். கண்ணனும் சம்மதித்தான். உடனே கீழே தரையில் ஓர் தர்ப்பாசனத்தை போட்டான் அதில் அமர்ந்து கொண்டான். பாத்திரத்தில் (சொம்பில்) கொடுக்கலாம் என விதுரன் மனைவி சொன்னாள். விதுரன் அதை மறுத்து விருந்தினர்களுக்கு நம் எச்சில் பாத்திரத்தில் கொடுப்பது தகாது. அந்த வாழைத் தோட்டத்தில் சென்று ஓர் பெரிய இலையாக அறுத்து வந்து அந்த இலையில் இந்த ராகி களியைக் கொடுக்கலாம் என முடிவு செய்தான் விதுரன். அதன்படி ஓர் இலையும் கொணர்ந்தான்.



## உ

எம் இருகண்மணிகளான!

தேவகி/வசுதேவ்! கண்ணன்முன் இலை போடப்பட்டது. ஓர் சொம்பில் ஜலமும் வைக்கப்பட்டது. நம் கண்ணனும் அவ்விலையில் தீர்த்தம் புரோட்சித்துக் கொண்டான். விதுரன்மனைவியும் அந்த ராகிகளியை சற்று இளகு படுத்தி (கட்டியாக களைத்து) இலையில் இட்டாள்.

தரை சற்று மேடும் பள்ளமுமாக இருந்ததாலும்

**"அச்சதிபதிகள் அன்பின் பெருக்கினாலும்"!**
**"உன்னதமான பாகவத தர்மத்தினாலும்"!**
**"இறை உணர்வில் தம்மை கரைத்துக்"** கொண்டதனாலும்!
எம்கண்ணன் **"எளிமைக்கும் எளிமையாக"** இருப்பதனாலும்!
**"பக்தாளின் பக்தவாத்ஸல்யத்தினாலும்"**

அந்தராகிகூழ் இலையைவிட்டு வெளியே ஓடத் தலைப்பட்டது. உடனே கண்ணன் இருகரம் கொண்டு இருபுறமும் இலையை தாங்கிப்பிடித்தான். சாப்பிட கரம் வேண்டுமே? கண்ணன் சிரித்தான் ஓர் கரம் புதிதாக தோன்றியது. அக்கரம் கொண்டு கூழை எடுக்கப்போனான். இலையின் மற்றோர் பக்கம் கூழ் இலையை விட்டு ஓடப்பார்த்தது. சாப்பிடப்போன கரம் இலையைத்தாங்கிப்பிடித்தது. மற்றோர் கரம் வந்தது. மற்றோர் பக்கம் கூழ் ஓடியது. மற்றோர் கரம் வந்தது. மற்றோர் பக்கம் கூழ் ஓடியது. மற்றோர் கரம் வந்தது. மற்றோர் பக்கம் கூழ் ஓடியது. மற்றோர் கரம் வந்தது. மற்றோர் பக்கம் கூழ் ஓடியது. <u>இதை காண்கின்ற எமக்கு எந்த கரமும் ஓடவில்லை. எழுத நேரமும் எழுத முடியவில்லை. சற்று பொறுமையாக எப்படியோ எழுதினேன்.</u>

இப்படியாக அந்த நேரம் எம் கண்ணனுக்கு எத்தனை கரம் தான் வந்ததோ? விதுரனும், அவன் தர்மபத்தினியும் அடியோமும் அக்காட்சியை கண்டு கொண்டிருக்கிறோம்!



உ

எம் ஸத்ய சொரூபமான அம்மா!

தேவகி! மேலே எழுத எழுத்தும் வரவில்லை; எழுதுகோலும் இயங்கவில்லை; காரணம்

## "மௌனாநந்தமே"!!!

எம் கண்ணன் சோர்ந்தானா? அயர்ந்தானா? மயங்கினானா? தயங்கினானா? கெஞ்சினானா? கொஞ்சினானா? விண்ணப்பித்தானா? ஆணையிட்டானா? (ஆனால் இந்த ஓர் வாசகம் கண்ணன் வாய் மொழியாக வந்தது) எம் கண்ணன் வாக்கியம்.

எம் அன்பான விதுரா!

எம்மை சாப்பிட அனுமதிக்கமாட்டாயா? யாம் படும்பாடு கண்டு உன் மனம் இரங்கவில்லையா? ஓர் எலியை ஓர் பூனை விரட்டிப் பிடித்த போது **"பூனைக்கு கொண்டாட்டம்"!!**

**"அந்த எலிக்கு திண்டாட்டம்"!!!**

அந்நிலையே எம் நிலையும். நன்றாக கவனி!

**உன்னை (அன்பை) சாப்பிட யாம் வர!**

**எம்மை (மாயையை) நீ சாப்பிட்டுவிட்டாயே?**

உள் கருத்து:- பகவானிடம் அன்பைக் கொடுத்தான் அத்தன்மையினால் பகவானின் மாயையை தான் சாப்பிட்டுவிட்டான்

அம்மா! அம்மா! அம்மா! அம்மா! அம்மா **தேவகி!!!**

இவைகளை உணர்ந்து அனுபவித்துக் காணும் யாம் அப்படியே இருந்து விட்டால் இதை முடிக்க வேண்டாமே? முடிக்கத் தெரியவில்லையா? முடியவே இல்லையா? முடிக்க முடியவில்லையா? என்னவென்றே எமக்குத் தோன்றவில்லை? கண்ணன் சாப்பிட்டானா? போனானா? எமக்குச் சொல்ல இயலவில்லை. நீயோ வசுதேவரோ இதன் முடிவை முடிக்கும்படி உங்கள் இருவரின் பொற்பாதங்களை பற்றி உங்கள் திருவடி தாளிணைய சிரமேல் தாங்கிக் கொள்ளும் ஓர் வைத்தியம்.

பாபா

# எடுப்பார் கைக்குழந்தை.



**ஓம்**

சத்யம் பேசு!
தர்மம் செய்!!
மௌனம் நிலைக்க!!!

குழந்தைகளே!

ஸ்ரீபரமாத்மா (ஸ்ரீபரம்பொருள்) எடுப்பார் கைக்குழந்தையாகும்! அதற்கு அனந்த கோடி ரூபம் உண்டென்றும், அளவற்ற மகிமைகளும், மஹத்தான வல்லப சக்திகளும் உண்டென்றும் கற்பனையை விரித்து பயம், கலக்கம், சந்தேகம் கொள்ளாதீர்! அது ஒரு வயது குழந்தையின் நிலை போன்றதாகும்.

**இருக்கும் இடத்தில் இருந்துகொண்டு**
**அழைக்கும் விதத்தில் அழைத்தால்**
**அது உங்களிடம் தாவி வருமே!**
**இது உண்மை உறுதி!**
**ஆனால்???**

நீங்கள் அதை சிற்பமாகவும், சித்திரமாகவும், விசித்திர மனதுடன் நோக்குவதால், நீங்கள் உங்களை மாற்றிக் கொள்வதும் இல்லை! அதை குழந்தையாக உணர்வதும் இல்லை!

**இருக்கும் இடத்தில்:**

மண்ணையும் (ஸ்தலம்), ஜலத்தையும் (தீர்த்தம்), அக்கினியையும் (மூர்த்தி) சுற்றிச் சுற்றி வருகிறீர்களே தவிர

**உடலுக்குள் நீ நின்று**
**உலாவியதைக் காணாமல்**
**காடு மலை தோறும் திரிந்து**
**கால் அலுத்தேன் பூரணமே!**

என்றபடி என்று ஓர் இடத்தில்

**அனைத்தும் சிவமே! அது நலமே!! அது யாமே!!!**

என அமரப் போகின்றீர்கள்?

**அழைக்கும் விதத்தில்:**

உடல், உலக சிந்தனையிலிருந்து மனதை விடுத்து, அதாவது காண்பனவற்றிலும் கேட்பனவற்றிலும் மனதை புகுத்தி, கற்பனையின் நிலையில், மனதைப் பந்தப்படுத்தாமல், நீட்டி, நிமிர்ந்து, விழுந்தபடி

**எல்லாம் நீ!**

என்று பரிபூரண சரணாகதியில் உன்னைக் கொடுத்து அதை அழைத்தால்

**அதுவாகவே நீ ஆகமுடியும்!**



**ஸத்யம் பேசு. ஓம் தர்மம் செய்.**

**நாவை அடக்கு. ஓம் கருணையோடிரு.**

சங்கல்பமே உலகம்!
எண்ணமே வாழ்க்கை!

ஓம் எம் அன்பு மழலைச் செல்வங்களாய் அமைந்த,

**"அர்த்ரி! அனுசூயா! அமிர்தம்! ஆனந்தம்!"**

உங்கள் நாவடக்கத்தினாலும், வருவதையும் போவதையும் பற்றி எண்ணாத் தன்மையினாலும், மனோபலமும் ஆத்மசுகமும் பெற்று, இவ் இகவாழ்வை வென்று பரநிலை (ஜீவன்முக்தி) பெறுவீர்கள் என வாழ்த்துக்கள் கூறி, ஆசி வழங்குகின்றோம். நீங்கள் கதை கேட்கும் குழந்தைகள் ஆகவே உங்களுக்கு சில உண்மையின் தத்துவங்களை கதா ரூபமாகச் சொல்லி எம் நினைவுக்கு இட்டுச் செல்கிறோம்!

## "ஜோடி அன்னம்."

எம்முள் அன்புமயமாயும், உண்மையின் சொரூபமாயும், அமைந்த **அர்த்ரி! அனுசூயா!!**

இமயமலை சிகரத்தில் கைலாய கிரியின் தாள்வரையில் **"மானஸரோவர்"** என்ற ஓர் ஏரியில் ஒரு ஜோடி அன்னம் (பக்ஷி) வாசம் செய்து வந்தது. அவ்விரண்டும் தெய்வீகமானது. சம அந்தஸ்து உள்ளது. அங்கு ஆண் இனம் பெண் இனம் என்ற பேதம் கிடையாது. எந்த விநாடியும் பேரானந்தத்தில் திளைத்து நீந்தி வரும். ஆனால் அவைகள் கரைக்கு வருவதில்லை. ஜலத்திலேயே அவைகளுக்கு சகலமும் தேடி வரும் பாக்யம் பெற்றிருந்தது. ஆகவே அவைகள் கரைக்குவர தேவையில்லை. எந்த விநாடியும் இறை உணர்வோடிருந்ததால் அவைகளுக்கு இரையைத் தேடும் அவஸ்யம் இல்லாதிருந்தது போலும்;



உ

# ஓர் நாள்!!!

ஓர் அன்னம் தம் சகோதர அன்னத்திடம் கேட்டது. நண்பா! இன்றொரு நாள் மட்டும் சற்று கரையோரம் சென்று சில இயற்கை காட்சிகளை கண்டு வருவோமே என சின்ன (சுயம) ஆசையுடன் அழைத்தது.

எம் குழந்தைகளே அர்த்திரி! அனுசூயா!

விதியின் வழியே தான் மதி (மனம்) செல்லும் உண்மை தான். எந்த விதியும் அந்த மதி (மனம்) யை இறைநாம உணர்வில் வைத்திருந்தால்

விதிக்கப்பட்ட விதிப்படி ஒழுங்காகச் செல்லும்! விதிக்கு அப்பால் உள்ள ஆசை வசப்பட்ட கர்மாவில் அந்த மதி (மனம்) செல்வாதும். இங்கு இறைவுணர்வு அதை கட்டுப்படுத்திக் கொள்ளும். ஆகவே இங்கு புதிய கர்மா தொடர்பு ஏற்பட வாய்ப்பில்லை.

இறைவுணர்வு வலுவாக இருந்தால் அங்கு ஆசைகள் வராது ஆசையின் உணர்வு அதிகமாக இருந்தால் இறைவுணர்வு மறைபடும்! எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அது நிலைத்து நிற்கும்!

இங்கு இந்த ஓர் அன்னம் தம் சகோதர அன்னத்தை அழைக்க கரைவரை செல்வோம் அதற்கப்பாலும் செல்லக்கூடாது என திடப்படுத்தியே இரண்டும் கரையோரமாக வந்து விட்டது. இயற்கையின் சூழ்நிலை இரண்டையுமே கவர்ந்து விட்டதால் கரையோரமாகவே சற்று தூரம் காலார நடந்து வந்தன. அங்கு ஓர் பள்ளத்தாக்கு இருந்தது. அப்பள்ளத்தின் தாழ்வரையில் ஓர் கும்பலாக ராஜபரிவாரங்கள் போய்க் கொண்டிருந்தன. அங்கு சூழ்நிலை எப்படி என்றால்? ஓர் அழகான இளவரசி தம் பரிவாரங்களுடன் தன் ராஜ்யத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறாள். சேனை வீரர்கள் புடைசூழ சென்று கொண்டிருக்கிறாள். இக்காட்சியை இரண்டு அன்னங்களும் கண்டன.

சுயமான (சின்ன ஆசையுடன்) எண்ணத்துடன் இருந்த அன்னம் அங்கு கூர்ந்து நோக்கியது.

சகோதர அன்னம் ஓர் பார்வையுடன் இது ஓர் மாயா காட்சி என உணர்ந்து எந்த எண்ணமும் இல்லாமல் தன் பார்வையை திருப்பிக் கொண்டது.



உ

சுபல அன்னம் அக்கூட்டத்தின் மேல் "**பெருங்காம**" கற்பனையை விரிய விட்டது!

சகோதர அன்னம் தம் கற்பனையை விரிய விடாமல் இக்காட்சி "**இயற்கையில் தோன்றிய செயற்கை**" என அமைதியுற்று அடங்கிக் கொண்டது.

சுபல அன்னம் அக்கூட்டங்கள் யார்? பெண்ணும் ஆணுமாக தோன்றுகிறதே? அப்பெண்ணிடம் இனக்கவர்ச்சி (அது எலிப்பொறி) தோன்றுகிறதே காரணமென்ன? அதன் ஆடம்பரமான ஆடை அணிகளும் இன்பம் நிறைந்த (அங்கு கடின துன்பமும் உண்டு) ஓர் மோகமும் (அநுபவம்) தோற்றுகிறதே காரணமென்ன? அங்கு எத்தனை ஆண்டுகாலமானாலும் (நீர்மேல் குமிழியின் காலம்) சுகித்து இன்புறலாமே (முடிவு துன்பமே) என எண்ணற்ற கற்பனையை வளர்த்து கற்பனை உலகத்திலேயே சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தது (இதற்கு முடிவே இல்லை)

சகோதர அன்னமும் அக்கூட்டத்தை ஓர் கணம் நோக்கியது மறுகணம் தம் பார்வையை உள் இழுத்துக் கொண்டது இவையனைத்தும் மண் பதுமைகள் தானே? அவர்கள் ஆடை அணிகலன் அனைத்தும் மண்ணையன்றி அன்னியமில்லை. அவைகள் புண்ணிய பாப வினையால் கூடப்பட்டதால் ஆடிக் களிக்கின்றன. நாம் புண்ணிய பாப வினை தேவையற்றதால் "**கண்டோம்** உடனே **கழித்தோம்**" என மௌனநிலை பெற்றுவிட்டது.

அறிவுரை என்ற வாக்கியத்திற்காக அந்த சகோதர அன்னம் கூறியது:- நண்பா! உன் பார்வையே சரியில்லை.

சுபல அன்னம்:- நான் என்ன செய்து விட்டேன்? அவர்களுடன் சேர்ந்து விட்டேனா என்ன? சற்று வேடிக்கை பார்க்கிறேன் அவ்வளவுதான்!

சகோதர அன்னம்:- நீ வேடிக்கையாக அவைகளைப் பார்க்கவில்லை வெகு ஊன்றியமாக (வினைக்காக) பார்க்கிறாய்.

**நம் நிலை வேறு. அவைகள் நிலை வேறு**

நினைவோடு உருகுகிறாயல்லவா?

சுபல அன்னம்:- நீ வேண்டுமானால் போ. யாம் சற்று வேடிக்கை பார்த்துவிட்டு அப்புறம் வருகிறேன் என்றது.



௨

எம் செல்வமழலையே!

அனுசூயா! அந்த சகோதர அன்னம் இனியும் அங்கு நின்றால் "அவ்வியாதி" நம்மையும் பற்றிக்கொள்ளும் என உணர்ந்து ஒரே ஓட்டமாக ஓடி நம் பிரம்மானந்த ஏரியில் சரணடைந்தது.

ஓம் ஐயாவே! அர்த்திரி! இவைகளிலிருந்து நீங்கள் இருவரும் உணர்வதாவது

1. உலக நடப்புகளையும், நிகழ்ச்சிகளையும், அதன் ஒலி அலை (வார்த்தை)களையும் கூர்ந்து நோக்காதீர்.
2. அவை உங்களையும் அறியாமல் அசைக்கும் என்றால் அவைகளுக்கு ஆதாரமான "ஜெயராம்" என்ற வெற்றி மந்திரத்தை ஸ்மரியுங்கள்.
3. ஸ்ரீ குருதேவா! அனைத்தும் நீயே என சரணடையுங்கள்.
4. மேலே சொன்னவைகளில் எந்த வருங்கால, சென்றகால, நிகழ்கால கற்பனையும் பண்ண வேண்டாம்.
5. இது இறைவனின் மாயா காரியம். நம் வினையை வைத்து இவ்வாறு இறைவன் விளையாடுகிறான். அவன் விளையாடி விட்டுப்போகட்டும். அதைத் தடுக்க யாம் யார்? யாம் நித்திய ஆனந்த சொரூபமே என அமைதியும் ஆனந்தமும் அடையுங்கள்.
6. அங்கு நிற்கக்கூடவில்லை நாமும் மயங்கி விடுவோம் எனத் தோன்றினால் அந்த க்ஷணமே அவ்விடத்தை விட்டு அகலுங்கள்.
7. அந்த நேரம் அங்கு சாந்தி சமாதான வார்த்தைகள் தேவை இல்லை. அவை பலன் அளிக்கவும் செய்யாது.
8. சிறிது காலம் தள்ளி (நிமிஷமோ, மணியோ, நாட்களோ) அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டு இறை குருநாமஸ்மரணையுடன் அதை ஆரம்பியுங்கள். அவை இறையருளால் நலமாக நடைபெறும் இது உறுதி.



௨

ஓம் அன்னையே! அனுசூயா! இனி கதையைக் கேள்!

கரையின் மேலே நின்று கீழே அக்கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அச் சபல அன்னம் விஷய ஆசையால் கிரீடிக்கப் பட்டு கீழே இறங்கிவிட்டது. அந்த யௌவனமான அழகு சுந்தரியைப் பார்த்ததும் தாம் மோஹவலைப்பட்டது. அது காமமாக வடிவெடுத்தது. இந்த அழகியை வேறு எவரும் கவர்ந்து போய் விடக்கூடாதென்று லோபம் பிறந்தது. அவள் எனக்கே உரியவள் என்ற மதம் உண்டானது. இவள் நமக்குக் கிடைப்பாளா கிடைக்கமாட்டாளா என்ற சந்தேகம் உண்டான உடனே, தான் ஓர் அழகான அரசிளங் குமாரனை வடிவெடுத்து அச் சுந்தரியின் பக்கத்தில் சென்றது அந்த சபல அன்னம். இனி அது சபல அன்னமில்லை அப்படி இனி அதை அழைக்க வேண்டாம் இனி அரசகுமாரன் என்றே அழைப்போம்.

மேலே கண்ட ஆறு குணங்களுமே ஜீவனின் அடிப்படை. அதாவது அச் ஜீவபோர்வை. இப்போது இந்த அரசகுமாரனை அவ் விளவரசி கண்டாள். காதல் கொண்டாள். முறைப்படி திருமணமும் செய்து கொண்டாள்.

இங்கு சபல அன்னத்தை காணோம். காம அரசகுமாரன் தான் இருக்கிறான். ஆஸ்தி போகம். உணவு போகம். ஆடம்பர ஆடை அணிகல போகம். ஸ்திரீ போகம். காமம் (உடலின்பம்) மோஹம் (போக காமத்தில் தணிக்க முடியாத ஓர் வெறி) இவற்றுள் சிக்குண்ட அந்த இளவரசன் (அன்னம்) பற்பல குழந்தைகளுக்குத் தந்தையானான். இவன் போக இன்பங்களை அனுபவிப்பதைவிட காம இன்பங்களை அதிகமாக சுவைத்தவனான். அதனால் இவனும் வயோதிகனானான் ஆனால் அவள் அழகு குறையாமலேயே இருந்தாள் (அது தான் மாயை) ஓர் நாள் அவள் விதிவசத்தால் மரணம் எய்தினாள். இந்த அரசகுமாரனும் குய்யோ முறையோ என கதறி பதறி அலறி அழுது அழுது அந்த மோஹத்தால் இவனும் (அன்னம்) உயிர் துறந்தான். இதுவும் விதிவசமே!



## ௨

எம் அன்னையே! அனுசூயா! இவள் (அன்னம்) பெண் "**மோஹத்தால்**" எண்ணி எண்ணி அதிலேயே தம் பிராணனை விட்டதாலும், நீசத்தனமான கேவலமான கொடிய ஆசையை வைத்திருந்ததாலும் மறுஜன்மத்தில் ஓர் ஸௌம்யமான தேச பகுதியில் ஒருவனுக்கு பெண் ஜன்மாவாக பிறந்தாள் (அன்னம்) இவள் மேலேயே அதிக பிரியமுள்ள அந்த அரசகுமாரி (மாயை) அதே தேசத்தில் ஓர் ஆடவனாக பிறந்தாள். முன்ஜன்ம தொடர்பு இப்போதும் விட்டுப்போகவில்லை. அவ்விருவருக்கும் வயது வந்ததும் அவ்விருவருமே விரும்பியதால் திருமணம் செய்து கொண்டனர். இங்கு!!

"சுபல அன்னம் பெண், அரசகுமாரி ஆண்"

இங்கும் விதிவசத்தால் அந்த பெண் (அன்னம்) கொடிய காமம் உடையவளாக இருந்தாள். இங்கும் அனேக குழந்தைகள். இங்கு ஓர் கொள்ளை நோய் ஏற்பட்டது. அதனால் அரசகுமாரியாகிய ஆண் இறந்து போனான். இந்த பெண் (அன்னம்) தம் போகம் (காமம்) முடிவு பெறும் தன்மையினால் கதறி கதறி பதறி குய்யோ முறையோ என ஒப்பாரி வைத்து அழுது முடிவில் தன் கணவன் சிதையில் தான் உடன் கட்டை ஏறுவதற்காக அழுதவண்ணம் அச்சிதையை சுற்றி வந்து கொண்டிருக்கிறாள் இப்பெண் (அன்னம்)

ஓம் ஐயனே அத்ரி! அன்னையே அனுசூயா! இனி சற்று கவனமாக சிந்தித்து கதை கேட்கவும்.

சிதையை சுற்றி வந்து அச்சிதையில் தன் பிராணனையும் விடக் காத்திருக்கிறாள் இப்பெண்ணாகிய சுபல அன்னம். பர கருணை சற்று இரங்கி தெய்வ அம்சமாகிய அந்த சகோதர அன்னமாக மாறி சற்று தூரத்தில் அந்தரமாக நின்று கொண்டு

சகோதர அன்னம்:— ஹே பெண்ணே நீ யார்? என கேட்டது. இவள் எதையும் காண முடியவில்லை. எதையும் உணரவும் முடியவில்லை. சுற்றும் முற்றும் பார்க்கிறாள் எந்த தோற்றமும் தோற்றவில்லை.



உ

அந்த சப்தம் எங்கிருந்து வருகிறதென உமையும் குடியவிக்கி திகைப்புடன் நாலாபுறமும் பார்க்கிறாள். ஒன்றும் தோற்றுத் தன்மையினால் தாம் சிதையை சுற்றுவதையும் நிறுத்திவிட்டு மேலும் மேலும் பார்க்கிறாள் கூப்பிட்டது யார் எனக் கேட்டாள்?

சகோதர அன்னம்:— எம்மை யார் என உனக்கு இப்போதிருக்கும் நிலையில் தெரியாது. தெரியவும் முடியாது. நீ யார் என்பதையட்டும் "உள் ஆழ்ந்து" சிந்தித்துச் சொல்?

சபல அன்னம் (பெண்): நான் ஓர் பெண். இந்த இனத்தைச் சேர்ந்தவள் இது தான் எனக்குத் தெரிகிறது.

சகோதர அன்னம்:— இச்சிதையில் கிடப்பவன் யார்? அவனுக்கும் உனக்கும் என்ன உறவு?

சபல அன்னம் (பெண்) இச்சிதையில் எரிந்து கொண்டிருப்பவர் என் கணவன். நான் அவர் மனைவி. அவர் விதிவசத்தால் இறந்து போனார். ஆகையால் நானும் அவருடன் உடன் கட்டையேறப் போகிறேன். இக்கடைசி நேரத்தில் வந்து என்னை யார் என விசாரிக்கும் நீ யார்?

சகோதர அன்னம்:— எம்மைப் பற்றி விசாரிப்பதை விடு பார்க்கலாம் உன்னை நீ யார் என உணர்ந்தால் தான் நீ எம்மைப் பற்றி உணர முடியும்.

சபல அன்னம் (பெண்):— இதோ இச்சிதையில் எரிந்து கொண்டிருக்கும் இவர் என்னை தொட்டு தாலி கட்டிய கணவன். நான் இவர் மனைவி இது தான் இப்போது எனக்குத் தெரியும்.

சகோதர அன்னம்:— நீ இந்த நீச ஜாதியில் பெண்ணாக பிறப்பதற்கு முன் எங்கு இருந்தாய்? எப்படி இருந்தாய்? என்ன செய்து கொண்டிருந்தாய்?

சபல அன்னம் (பெண்) (இங்கு தெய்வ கிருபை கை கூடியது. தம் (சகோதர அன்னம்) குருவும் கூட இருந்ததால்) உள் ஆழ்ந்து சிந்தித்தாள். உரைப்படியவில்லையே சற்றே தயை செய்வாய் என இரங்குதலும் ஏங்குதலும் இணைந்து கேட்டனள்?

இரங்குதல்:— பொறுமையுடன் உள் ஆழ்தல்.

ஏங்குதல்:— உண்மையை உணர இறைகுரு உணர்வுடன் கூடிய துடிப்பு.



௨

சகோதர அன்னம் :— உளம் .... உளம் ——— உளம் இன்னமும் கொஞ்சம் உள்நோக்கிப்போம்.

சபல அன்னம் (பெண்) : இறைகிருபையிருவும் அந்த சகோதர (குரு) அன்னத்தின் ஊக்கத்திறனும் ——— சற்று சிந்தித்து
ஆமாம் நான் இந்த பெண்ணல்ல, இது எம் காம உணர்வினால் வந்த தாபம். இதற்கு முன் நான் ஓர் அரசகுமாரனாக இருந்தேனே? அந்த ஜன்மாவில் என் [illegible] பந்த பாசப்பட்ட ஜீவனே இந்த ஆடவன். இவன் முன் என் காமக்கிழத்தியாக இருந்தாளே. சீ சீ சீ இது என்ன மோசமான உறவு?

சகோதர அன்னம் :— நண்பா! அந்த அரசகுமாரனும் நீ இல்லை. அதற்கு முன் எங்கிருந்தாய்? என்ன செய்தாய்? இப்படி எப்படி ஆனாய்? இன்னமும் உள் நோக்கிச் செல் என ஊக்கமும் ஆக்கமும் தந்து உதவியது அந்த சகோதர அன்னம்.

சபல அன்னம் (அரசகுமாரன்) :— மேலும் மேலும் அடி ஆழமாகச் சிந்தித்தது. அங்கு இறைகிருபையும் குருகருணையும் கைகொடுத்தது. அதற்கு பூரண நிறைவு வந்துவிட்டது.

**ஆமாம்! ஆமாம்!! ஓ கோ, கோ!**
**எம் பூரணப் பொலிவே!**
**எம் ஸத்திய சொரூபமே!!**

எம் உண்மையின் அம்சத்தை எமக்கு உணர்த்தி எம்மை ஆட்கொள்வாயாக (எம்மை ஆண்டு கொண்டு எம் வஞ்சனைகளை தொலைப்பாயாக) என உருகிப்பிரார்த்தித்தது. அடுத்த கணம் பூரணப்பொலிவுடன் தம் சகோதர அன்னத்தை கண்டு உணர்ந்தது. (தோற்றத்தை கண்டது அது நாம் என உணர்ந்தது) உடனே அந்த க்ஷணமே **சீ, சீ, சீ. விலையின் சுமையால் வந்த** மாம்ஸ பிண்டமே தொலைந்து போ என அந்த ஆசையின் விலைக் கூட்டை அப்படியே உதறிவிட்டு தம் யதாஸ்தானத்துடன் இணைந்து ஆனந்தமும் அமைதியும் அடைந்து **அது ஆனது!!!**



உ

ஓ எம் அம்சமாயும், சத்யத்தின் இருப்பிடமாயும், அமைந்த எம் செல்வங்களே!

**அத்ரி, அனுசூயா!**

கதை எப்படியோ முடிவடைந்தது. அதன் கருத்தை உணர்வீர்! நாமும் ஈசனும் ஒன்றே. நாம் இருவருமே இச்ஜகத்தை நம் யோக மாயையால் உண்டு பண்ணினோம். நம்மால் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகை விளையாட்டாகவே பார்த்தோம். அது சமயம் நம் இருவரின் நிழல் நம்மை ஒட்டியே நின்றிருந்தது. ஈசன் தன் நிழலை யோகமாயையாக்கி அதை தாம் வைத்துக்கொண்டான். ஆனால் நாம் நம் நிழலை ஓர் நண்பனாக்கி (மனமாக்கி) அதன் மூலமாக இச்ஜகத்தை "நான் எனது என்னுடைய" என அனுபவிக்க ஆரம்பித்தோம். நம் நண்பன் நமக்கு எஜமானாகி விட்டான். நாம் அப்பொருள்களை அம்மனதின் மூலமாக புசிக்கும் போக்தர்களாகி விட்டோம். ஆனால் ஈசனோ அவன் நிழலான யோகமாயையை வைத்துக்கொண்டு தன்னைப் பற்றப்படாமல் ஆனந்தமாக இருக்கிறான்

**அவன் நிழல் அவனுக்கு உதவும் மாயை!**

**நம் நிழல் நாம் விரும்பி நம்மை ஆட்டும் மனம்!!**

அதைப்போலவே?

இந்த அன்னம் இரண்டும் ஒரே அம்சம். ஒரே சக்தி. அனைத்திலும் ஒன்றே. ஆனால் ஒரு அன்னம் தன் நிழல் மாறாமல் அமைதியின் ஆனந்தமாக எந்த விடியும் இருந்தது.

மற்றோர் அன்னம் தம் நிழலை (மனதை) பின்பற்றியதால் தோஷ குணங்களுக்கு ஆளாகி அவைகளை அனுபவிப்பதற்காகவே பற்பல பிறவி எடுக்கிறது. அந்த அன்னத்திற்கு ஆர்வ புண்ணியமும் இறை அருளையும் குரு (அடுத்த அன்னம்) கருணையும் கிடைத்ததும் குணம் தம் ஸ்தானத்தை அடைந்து விட்டது

அதுபோல்?

மனதின் வசப்பட்ட நீங்கள் எப்படியோ அறிந்தோ அறியாமலோ எத்தனை பிறவிகள் எடுத்தீர்களோ அதை நீங்கள் அறிவீர். அதை



உ

அறியவும் தேவை இல்லை, அது முடிந்து போன கதை. இனி அது தொடராது. ஆனால் தற்காலிகமாக அனுபவிப்பதில் சற்று சிரத்தையாக இருந்தால் அது முக்தியைத் தரும். உங்களுக்கும் பக்தி தான் மிகவும் முக்கியம். அதில் ஞானமும் இணைந்தே இருக்கலாம். பக்தி வேறு ஞானம் வேறல்ல

**"விஷயங்களை நாடாமல் விரும்புவது பக்தி!"**

**"ஸ்திதப்ரக்ஞனாம் நாம் ஈசனே!!"**

**"நாம் ஈசனால், ஈசனும், நாமும், பரமும் ஒன்றே!!!"**

**"பக்தியின் நிமித்தம் ஜெயராம் ஸ்மரிக்கவும்!"**

ஆணோ பெண்ணோ பொன்னோ பொருளோ ஒருபொருளை உற்று நோக்கினால் அப்பொருளின் குணம் மெதுவில் உன்னை நோக்கி வருகிறதென உணர்.

உற்று நோக்கும் அதே பொருளை இறைவனுடைய தாகவோ, இறைவனே என்றோ நோக்கிவிட்டால் அக்குணமும் உன்னைச் சாராது. நாமரூபமும் பயன் அற்றுப் போகும்.

அப்பொருளின் குணம் அப்பொருள்களில் இல்லவே இல்லை. அது உன் மனமே மயக்கற்பனை. அதுவே விரிவடைந்து உன் மனதைப் பிடிக்கிறது.

இறைவன் ஏகுணம் (ஸத்வகுணம்) உள்ளவன். ஆகவே எந்தப் பொருள்களையும் இறைவனாகவோ இறைவனுடைய தாகவோ, பார்க்கப் பழகிக் கொண்டால் உன் மனமும் ஸத்வகுணமாகி விடும்.

துர்க்குணங்களுக்கு நீயே (உன் மனமே) பொறுப்பேதவிர இறைவனோ மற்றும் ஜீவர்களும் பொறுப்பாகமாட்டார்கள்.

தானும் எந்த பொருள்களும் வெறும் ஜடமே. அதை கூர்ந்து கற்பனை பண்ணும் உன் மனதில் தான் அப்பொருள்களின் குணம் இருக்கிறது.

அப்பொருள்கள் உன்னிடம் வர ஆசைபடுகிறதா? அல்லது நான் உன்னுடையது தான் என சொல்கிறதா இல்லவே இல்லை உன் மனமே ஆசைவசப்பட்டு அவைகளை (அதன் குணங்களை) என்னுடையது என்ற ஆசையை வளர்த்து, அப்பொருள்களின் குணங்களையும் நீயே வலிய ஏற்று அவஸ்தைப் படுகிறாய்.



உ

ஓம் அன்பின் குழந்தைகளே!

அர்த்தி! அனுசூயா!

எதை பாவனை பண்ணுகின்றோமோ அந்த வடிவமும், அதற்குகந்த வினையும், அதை ஏற்று நடத்தும் மனமும் அமைகிறது. இங்கு வினையும் சூட்சமம்; மனமும் சூட்சமம். ஆனால் அவைகளினால் இயங்கும் பஞ்சீகிர்தம் பண்ணப்பட்ட உடல் மட்டும் தூலம். இதை எப்படி நீங்கள் உணரவேண்டுமென்றால்? ஸ்விட்ச் போர்டு மின்சாரம் கண்களுக்குத் தெரிவதில்லை, ஸ்விட்ச் போர்டு கண்களுக்குத் தெரிகிறது. அதில் இயங்கும் மின்சாரம் கண்களுக்குத் தெரிவதில்லை. அதேபோல் கிரைண்டர் கண்களுக்குத் தெரிகிறது. அதை இயக்கும் மின்சாரம் கண்களுக்குத் தெரிவதில்லை. இதை கருத்தூன்றி விசாரித்தால் வினையும் (புண்ணிய பாபமும்) அதை இயக்கும் மனமும் எப்படி என்பதை தெள்ளத் தெளிவாக உணர முடியும்.

அதாவது!

மின்சாரம் = இறைவன்.

ஸ்விட்ச் போர்டு = மனதின் இருப்பிடம்.

கிரைண்டர் = நம் தூலம்.

அரிசி = நம் புண்ணிய பாப வினையாகும்.

இங்கு மின்சாரம் தனியாக இருந்தாலும் பிரயோஜனமில்லை. ஸ்விச் போர்டு மட்டும் தனியாக இருந்தாலும் பிரயோஜனமில்லை. கிரைண்டர் மட்டும் தனியாக இருந்தாலும் பிரயோஜனமில்லை. "**அரிசி**" (புண்ணிய பாபம்) இருந்தால் தான் மேலே கூறிய மூன்றிலும் பிரயோஜனம் உண்டு.

ஒவ்வொரு ஜன்மாவிலும் புண்ணிய பாபவினையாகிய அரிசியை சேகரித்துக் கொள்கிறோம். விதவிதமான கிரைண்டர் என்ற தூலத்தையும் எடுத்துக் கொள்கிறோம். எண்ணம் என்ற



உ

ஸ்விச் போர்டில் மனம் என்ற வயரின் வழியாக (மாயை மூலமாக) இறைவன் என்ற மின்சாரத்தையும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஒழுங்காக ஒவ்வொரு பிறவியிலும் அந்த வினையாகிய அரிசியை அரைத்து இட்லி, தோசை, ஊத்தப்பம், ரோஸ்ட், மசாலா தோசை, என பல பல விதமாக விற்று வியாபாரம் செய்து தான் பார்க்கிறோம்.

நம் வியாபாரத்திற்கும் ஓர் முடிவில்லாமல் போய் விட்டது. வியாபாரத்தை நிறுத்த வேண்டுமா? அரிசியை சேகரியாதே. இந்த அரிசியின் சேகரிப்பு என சொல்வது

## "நான், என்னால், என்னுடையது"

என இம்மூன்றுமே. ஆகவே???

1 நான் என்னால் என்னுடையது என்ற இம்மூன்றையும் விடுங்கள்.
௨. சென்ற காலத்தையும், வருங் காலத்தையும் நினைக்குமாற்றும் கற்பனையை விடுங்கள்.
௩. இறைசிந்தனையும் குருநாமாவையும் மறவாமல் இருங்கள்.
௪. நடப்பது அனைத்தும் "நலமே" என நிறைவு கொள்ளுங்கள்.
௫. நம் இறைவனும் நாமும் ஒன்றே என "திட உணர்வு" கொள்ளுங்கள்.

## "எல்லாம் நீயே" என்ற "சர்வார்ப்பணமே"!

உங்கள் லட்சியம்.

ஓம் செல்வங்களான!

அர்த்ரி! அனுசூயா!

உங்களுக்காகவே ஓர் பாடல் ஞாபகம் வருகிறது. அதாவது
"ஆட்டம் ஒன்றும் இல்லாமல், அசைவு ஒன்றும் காணாமல்,
தேட்டமற்றுவான் பொருளை தேடுவது எக்காலம்????"



உ

ஆட்டம் ஒன்றும் இல்லாமல் :- இங்கு மன ஆட்டத்தைக் குறிக்கிறார். "ஆட்டம் இல்லையானால் மனம் இல்லை"
"மனம் இல்லையானால் ஆட்டம் இல்லை"

ஓர் நிகழ்ச்சியையோ ஓர் காட்சியையோ, ஓர் ஓசை(வார்த்தை)யையோ பார்த்த கேட்டமாத்திரத்தில் மன அதிர்வினால் இன்பம் ஏற்படுவதும் உண்டு, துன்பம் ஏற்படுவதும் உண்டு! அவைகளை செயற்கை ஆக்கினால் தான் அவ்விதம் நிகழும். அதாவது நாமரூப குணதோஷங்களாக நோக்கினால் தான் மனம் ஆட்டம் காணும்.
அவைகளை இயற்கையாகவே உணரத்தலைப்பட்டால் அவஸ்யம் எந்த ஆட்டமும் தோற்றாது. அதாவது நாமரூபங்களை இயற்கையாகவே அதாவது புதுமைகளாகவோ மண்ணாகவோ இயற்கையின் நிலையில் உணர்ந்தால் அங்கு ஆட்டம் இராது.

அசைவு ஒன்றும் காணாமல் :- ஆட்டம் உள்முக சம்பந்தம் உடையது. அசைவு வெளித்தோற்ற சம்பந்தம் உடையது. இதை நன்கு கவனித்தால் உண்மை புரியும் அதாவது கண்ணில் காணக்கூடிய ஜகத்தின் பொருள்கள் அனைத்தும் தோற்றம், இருப்பு, மாற்றம், மறைவு இந்த நான்கிலும் சம்பந்தம் கொண்டது. இந்த நான்கையும் உள்முகமாக திருப்பினால் தான் உண்மை புரியும் ஓர் மேஜை இருக்கிறது என வைத்துக்கொள்ளுங்கள். அது எதால் ஆனது பலகையால் ஆனது. பலகை எதிலிருந்து வந்தது மரத்திலிருந்து வந்தது. மரம் எங்கு தோன்றியது மண்ணில் தோன்றியது. மண் எதால் ஆனது அணுக்களால் ஆனது. அணுக்கள் எங்கே தோன்றின. ஆகாயமாகிய வெட்ட வெளியில் தோன்றியது. ஆகாயமாகிய வெட்ட வெளி எங்கே தோன்றியது மூலமாயையாகிய யோகமாயையில் தோன்றியது. யோகமாயை எங்கே தோன்றியது பராபரத்தின் நிழலில் தோன்றியது. பராபரத்தின் இருப்பு என்ன அது எங்கே எப்படி இருக்கிறது எனப்பார்த்தால் அது
"**இருப்பில்லாதது**". ஆனால் மேலே கூறிய அனைத்திற்கும் இருப்பைக் கொடுக்கும் ஆதாரமானது ஆனால் அது இல்லை, ஆனால் அது உண்டு.



உ

ஓம் ஞானக்குழந்தைகளே! இப்படி இந்த அகில புவனத்திற்கும் ஆதாரமாக இருப்பது
இல்லையென்ற இடத்தில், ஸத்யமாய் தாம் நாமாய் இருப்பதான

**ஸ்வயமான ஞானாதீத ஒன்றே!!!**

நாமும் அதுவே. இப்படி நாம் தாமாய் இருக்கும் ஒன்றை அதில் பிரதிபலித்த மனதைக் கொண்டு கற்பனைகள் பற்பல செய்தும் வந்தது என்றும், இருந்தது என்றும், மாறியது என்றும், மறைந்தது என மன ஆட்டத்தையும் நாமரூப அசைவுகளை கொடுத்துக் கொண்டு வீண் காலம் செலுத்துகிறோமே? இந்த அவலநிலை மாற வேண்டாமா? அதற்காகவே இதை தருகிறோம்.
தேட்டமற்று வான் பொருளை தேடுவது என்பது? :— அதாவது இங்கு எந்த தேட்டம் என்றும் எந்த தேடுதலும் இல்லாமல் அந்த ஒன்றை மட்டும் (அதை தேடமுடியாது) தாமாக்கி உணர்ந்து அனுபவித்து அதுவாக வேண்டும். குறிப்பாக இந்த ஜகத்தில் நாமரூப குணங்களில் எதையும் தேடாமல் அதாவது எண்ணாமல் அதாவது நம் கற்பனையை ஷிரிக்காமல்

**"அது நாமே! நாமே அது"**

என நமக்குள் நாம் அடங்கி இருப்பதே அந்த ஒன்றைத் தேடுவதாகும், அந்த ஒன்றாய் ஆவதாகும்!

**விடுவதை விட்டால், தொடுவதை தொடலாம்!**
**தொடுவதை தொட்டாலும் படுவது** (உலகம்)
**பட்டுப்போகும்.** இதுவே பிரமாணை உண்மை!
எம் அர்த்தி அனுஜியா! **அது நீயே! நீயே அது!!!**

ஸ்ரீ ... பாபா.



உ

# முடிவுரை.

அன்பும், கருணையும், பணிவும், கனிவும், எளிமையும், இனிமையும் நிறைந்த அன்பு உள்ளங்களே!

இந்த மடலில் கொடுத்த இரு இதழ்களும் இரண்டு அன்பர்களின் குடும்பங்களுக்கு கொடுத்தவைதான். இதில் “**நாம, ரூப, குணம், குறி,**” எவைகளையும் காணாமல் “இது நமக்கே” என உணர்வுபூர்வமாக உணர்ந்து உங்களுக்குள் அனுபவிக்க வேணுமாய் கேட்டுக்கொள்கிறேன். நாமரூபம் தற்காலிகமாக இப்பிறவியில் வினையின் காரணமாக போட்டுவந்த ஒன்றுதான். அது உங்களுக்கு நிரந்தரமுமல்ல. உங்களுடையதும் அல்ல. நீங்கள் “அந்த காலாதீத ஒன்றே”

இந்த வைத்தியம் ஒருவருடைய மனநிலையை அனுசரித்து அவைகளை பக்குவப்படுத்தவும். வினைகளை நீக்கி கண்டு அழிக்கவும் இப்படி கதைகள் ஓதுவதுண்டு. அவைகளை சிந்தை பக்குவப்படாதவைகள் படித்து உணர்ந்து அவசியம் பக்குவப்பட்டு பயன் பெறுவர். இது உறுதி!

“இங்கு “போட்டி பொறாமையே” நமது சத்ரு ஆகும்”!

“இங்கு “இணைப்பும் பொறுமையுமே” நமது மித்ரு ஆகும்”!!

இதை “மறை ஓத மறைபொருள்” என்றும் சொல்லவாம் ஒருவருக்குச் சொல்வதைப்போல சொல்லி மற்றையோருக்கும் “மறைவாக சொல்லும் பொருளாகும்” இதில் குற்றம் குறை தோன்றின் இவ்வைத்தியத்தை மன்னித்து அருளும்படி உங்கள் பாதாரவிந்தங்களில் கெஞ்சி கெஞ்சி கேட்டுக்கொள்கிறது.

பாபா.



# வேண்டியது, வேண்டாதது:-

ஓம் அன்புக் குழந்தைகளே!

ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம் ஓம்.

இவை முழுமையாக உணர்ந்து அனுபவித்துவிட்டால் நீங்கள் அதை அடைந்துவிட்டீர்கள் என்றே பொருள்கொள்ள வேண்டும். அந்த காலா தீத ஒன்று சென்றடையும் இடமும் இல்லை. அதற்காக நடக்கவோ, எவரும் கூட்டிச் செல்லவோ, அல்லது அது உங்களை நாடி வந்து உங்களை ஆட்படுத்துவதோ இல்லவே இல்லை. இதன் முழுமையான உண்மை யென்னவென்றால் நீங்கள் முக்காலமும் எக்காலமும் எந்தநொடியும் அதுவாகவே இருக்கிறீர்கள் "இதுவே ஸத்யம்".

ஆனால் ???

ஜீவன் என்ற போர்வையை நீங்களாகவே உங்களை மூடிக் கொண்ட தன்மையினால் "நாம் அது ஆக இல்லை" ஜீவனாகவே இருக்கிறோம். இந்த ஜீவ போர்வையை விலக்குவது என்றால் சில வழிமுறைகளை அருள்கிறோம் உணர்வீர். பலமுறை சொன்ன கருத்துக்களே. அதை "எறும்பு ஊர கல்லும் தேயும்" என்றபடி திரும்ப திரும்ப உங்களுக்கு சொன்னால் தான் அந்த ஜீவ போர்வை விலகும்.

யாம் திரும்ப திரும்ப விலக்குகிறோம்!
(சோர்வு, அயர்வு, சந்தேகம் பயம் இல்லாமல்)
நீங்களும் திரும்ப திரும்ப மூடிக் கொள்கிறீர்கள்!!
(நாம் மூடிக்கொள்கிறோம் என்ற உணர்வு இல்லாமல்)

உங்கள் திரையை நீக்கினாலன்றி யாம் வந்த காரியம் முடியாது. நீங்கள் திரையை விலக்கினாலன்றி உங்கள் பிறவிப்பிணி நீங்காது!! திரையை நீக்கும் விதத்தை கற்றுக் கொடுப்போம். அதை நீங்கள் தானே நீக்க வேண்டும்? அல்லது யாம் நீக்கும் போது எமக்கு அனுகூலமாக இருந்தால் அது போதும் யாம் நீக்கிவிடுவோம். அதாவது யாம்



உ

நீக்கும் போது அதை உங்கள் இருகரங்களாலும் இறுகப் பற்றிக்
கொண்டால் யாரால் எப்படி நீக்க முடியும்?
ஒன்று நீங்கள் செய்ய வேண்டும், அல்லது எம் வசம் விட்டுவிட வேண்டும்
உங்கள் இருகரம் என யாம் சொன்னது:-

1. நான் என்றால் என்னுடையது என்ற அஹங்கார அபிமானம்.
2. என்ன ஆகுமோ? எப்படி முடியுமோ? மானம் போனால் வாழ்வில்லையே
என இல்லாத வாழ்க்கையைப் பற்றிய சந்தேகமும் பயமும்.

நீந்தினால் தான் அக்கரை செல்ல முடியும்? ஜலத்தில் விழுந்தவுடன் நீந்தி விட முடியாது தான். ஜலத்தில் இறங்காமலும் நீச்சல் கற்றுக் கொள்ள முடியாது. ஜலத்தில் இறங்கினால் தான் நீந்தக் கற்றுக் கொள்ள முடியும். ஜலத்தில் விழுந்தவுடன் நம்மை அறியாமலேயே கைகளால் அடித்தும் கால்களால் உதைத்தும் காரியம் தானே நடைபெறும். பா, ப்பா, பா, ப்பா, பா, ப்பா என்றோ மா, ம்மா மா, ம்மா, மா, ம்மா என்றோ (கண்ணா, குருதேவா) என வாய் அலறும். அது சமயம் அம்மாவோ, அப்பாவோ (குருதேவரோ கண்ணனோ) அங்கு உடனே வரமாட்டார்கள். திறந்த வாயில் ஜலம் தான் போகும். காற்று போகும் ஓட்டையிலும் (நாசியிலும்) மூச்சுக் காற்றுக்குப் பதிலாக ஜலம் தான் போகும். இருபுறமும் ஜலம் போவதால் வயிறு தான் நிறையும். அந்த பரதவிப்பை காணும்போது மிகுந்த துக்கமாகவும், கவலையாகவும் தான் இருக்கும். என்ன செய்வது நம் குழந்தை நீந்தக் கற்றுக் கொள்கிறதே என்ற சந்தோஷம் மிகுதியாக இருக்கும்.

“ஆனால் தந்தை மூழ்க விடமாட்டார்” !!

இனி அது தாங்காது என்றால் உடனே அந்த சேயை வெளியே எடுத்துப் போட்டுவிடுவார். இந்நிகழ்ச்சியினால் குழந்தையை அவர் கொல்லமாட்டார். ஆனால் அதன் “சந்தேகத்தையும் பயத்தையும்” அவஸ்யம் கொன்றுவிடுவார். அதாவது நமக்கு மரணம் உண்டென்று எண்ணும் மரண பயத்தையும். நாம் அற்ப ஜீவன் தானே நாம் எப்படி இறைவனாகவும், முடிவில் பராபரமாகவும் ஆக முடியும் என்ற சந்தேக கலக்கத்தையும் கொன்று விடுவார்.



௨

௧. போர்வை நீக்கம் என்ற தன்மையில் பலவந்தமாக (ஆனால் நீ நோகாமல்) போர்வையைப் பிடுங்கி எறிந்து விடுவார்.

௨. பலமுறை ஜலத்தில் மூழ்கினாலும் கவனமுடன் காலம் அறிந்து வெளியில் தூக்கி போட்டு சிஸ்ருஷை செய்து நீந்தக் கற்றுக்கொடுத்துவிடுவார்.

ஆகவேதான்

இறைவனையும் ஸத்குருவையும் கருணையே வடிவானவர் எனச் சொன்னோம். இனி உங்களுக்கு வேண்டியது எது? வேண்டாதது எது? என சற்று விளக்கி இம்மடலை முடிக்கிறேன்.

1. **வேண்டியது**:- அன்பு, தர்மம், கருணை, பொறுமை, அடக்கம், இனிமை, எளிமை, பக்தி, உறுதி, சிரத்தை ஆகிய இந்த பத்தும் அவசியம் தேவை.

௧. அன்பு:- உடல் சம்பந்தமாக பிரியம் வைப்பது பாசமாகும். அது உறவைக் குறிக்கும்; அது பிறவியைக் கொடுக்கும். ஆருயிர் அனைத்திலும் அதாவது எறும்பு முதல் யானை பரியந்தம் இறைவன் திருவடியே என்றும் இறைவனே என்றும் சமமாக பேதம் இல்லாமல் பார்ப்பதும் பழகுவதும் அன்பாகும்.

௨. தர்மம்:- கைகளால் பொருள்களை கொடுப்பது புண்ணியமாகும். அதே பொருள்களை கொடுப்பவனும் உணராமல், வாங்குபவனையும் உணராமல், கொடுக்கும் பொருளையும் உணராமல் ஸ்ரீ பகவத் அர்ப்பணமாக கொடுப்பது இரண்டாந்தர தர்மமாகும்.
நிலங்கண்டு இடம் கண்டு பொருள்பட (இறை உண்மை போதிக்கிற) ஒரு ஜீவனுக்குப் போதிப்பது முதல்தர தர்மமாகும். முந்தையதற்கு மாண்ட பிறவியாயும், உயர்ந்த பிறவியாயும் ஓர் பக்தனையும் பிறக்க வாய்ப்புண்டு. பிந்தையதற்கு பிறவா நிலை அதாவது ஜீவன் முக்தி நிலைக்கு அஸ்திவாரமாகும் (ஜீவன் முக்தியை கொடாது அதற்கு அடிப்படையாக அமையும்)

௩. கருணை:- ஓர் ஜீவனுக்கு கருணையோடு உள்ளம் கசிவதும், பிரயத்தனப்படி தான் உபகாரம் செய்தாலும் ஈஸ்வரார்ப்பணமாக செய்தாலும்; தனக்கு பிராப்தி இல்லையாயின், இறைவா இந்த ஜீவனுக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய், அனைத்து ஜீவ கோடிகளும் அனைத்துப் பொருள்களும் உன்னுடையதே அதன் இயக்கமும் உனதே என சர்வார்ப்பண நிலையில் உள்ளக் கனிவோடு இறை உணர்வில் ஒன்றுவதாகும்.



உ

D. பொறுமை:- "சிறியோர் செய்த பெரும் பிழையாயினும் பெரியோர் ஆயினும் பொறுப்பது கடன்" என்ற எம் வள்ளுவன் வாக்கிற்கிணங்க எவர் எந்த குற்றம் குறைகள் செய்தாலும் சொல்லாலும், செயலாலும் அவரைப் புண்படுத்தாதிருப்பது பொறுமையாகும். அதைப்போல தன் குடும்பத்தில் உடலாலோ, உறவாலோ பொருளாலோ ஓர் கடினமான துன்பம் வந்தாலும் "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்ற நியதிப்படி அதை தலைவணங்கி ஏற்றுக்கொண்டு இறைஅன்பில் அமைதி காத்தலும் பொறுமையாகும்.

E. அடக்கம்:- இது முதலில் நாவடக்கத்தைக் குறிக்கும். சுடும் சொல், கடும் சொல், கபடச்சொல் நாம் எக்காரணம் கொண்டும் பேசலாகாது என நம் நாவைக் காப்பது முதலாவது அடக்கம். அறிந்தோ அறியாமலோ பிறர் நம்மைப் பேசினாலோ ஏதோ ஓர் தீங்கான காரியம் செய்தாலும் இதன் முன் விளைவு பின் விளைவு இறைவன் ஒருவனுக்குத்தான் தெரியும் "அவன் பார்த்துப்பான்" என அவன் (இறைவன்) மேல் பாரத்தைப் போட்டு நாம் அடங்கியும், முடிந்தால் ஆனந்தமாக இருப்பது அடக்கமாகும்.

F. இனிமை:- நம் வாயிலிருந்து சுடும் சுடும் கபடச் சொல் வராமல் அதிசிரத்தையுடன் கண்காணித்து எவரிடம் பேசினாலும் சிரித்த (புன்முறுவல்) முகத்துடன் அவர்கள் மனம் புண்படாதபடி இனிமையாக பேசுவது முதல்தரமாகும். இரண்டாவதாக ஜீவர்களை தராதரம் காணமல் இறைவன் குழந்தைகளாக உணர்ந்து எண்ணம், சொல், செயலிலும் பிறருக்கு நன்மையும் இனிமையும் தரத்தக்க ஓர் காரியமாவோ, வார்த்தையாவோ செய்து அவர்களை திருப்திப் படுத்துவது இரண்டாந்தர இனிமையாகும். முதல்தர இனிமையில் மனம் பாதிப்படையாது. இரண்டாந்தர இனிமையில் வினைகள் சேராது.

G. எளிமை:- இங்கு உணவு, உடை, இருப்பிடத்தைக் குறிக்கும். அவன் விதவிதமாக உண்கிறானே என்றோ, அவன் விதவிதமாக ஆடம்பரமாக அணிகிறானே என்றோ, அவன் அடுக்குமெத்தை வீட்டில் A.C. என்றும் T.V. என்றும் வசதியான கார்களுடனே ஆடம்பரமாக பங்களா வாசியாக வாழ்கிறானே என்றோ உன்மனதை ஆடம்பர போகத்திற்கு அலைய விடாமல், உனக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட உணவு, உடை, இருப்பிடத்தில் எளிமையாக இருந்து



அவனிலும் நம்மை உயர்த்தி
நலமாக வைத்திருப்பதை உணர்ந்து
கொண்டு உன் நிலைக்குக் கீழ் நிலையில் இருக்கும் அன்பனைப் பார்த்து இறைவா! அவனை உயர்த்தி வாழவை. அவன் நலமாக இருந்தால் யாவரும் சுகமாக இருப்போம். என இதமான எண்ணத்துடன் உன் எளிய வாழ்க்கையை அமைத்துக் கொள்வாயாக.

H. பக்தி:— இங்கு ஆடம்பர பக்தி, வியாபார பக்தி, விளம்பர பக்தி பண்ணாமல் உனக்காக உன் உள்ளம் உருக பக்தியை வளர்ப்பாயாக. இந்த பக்தியினால் உன் உள்ளத்தில் இருக்கும் ஆணவம், கன்மம் மாயை ஆகிய மும்மலங்களையும் சுட்டெரித்து சாம்பலாக்கி தூய்மையான உள்ளத்தில் உன் இறைவனை அமரச் செய்து (அதுவே அவன் ஆலயம்) உள்ளப்பிரகாரத்திற்காகவும் அவனை அகத்தில் தரிசிப்பதற்காகவும் உருகி உருகி அழுது அழுது உன் கண்ணீரை அவனுக்குக் காணிக்கையாகக் கொடுப்பாயாக. மற்றும் பொன்னோ, பொருளோ, விதவிதப்பிரசாதங்களோ அத்தனையும் மண்ணே! அது அவன் சிருஷ்டியே அது அவனுக்குத் தேவையில்லை. உன் உள்ளமும், உன் உருக்கமுமே அவனுக்குத் தேவை. அதுவே உன் உயர்ந்த பக்தியும், உணர்ந்த பக்தியும் ஆகும்.

I. உறுதி:— உலக நிலையில் தாழ்ந்தாலும் வறுமையால் உன் நிதி உன்னை வாட்டினாலும், உடற்பிணியால் நலிவுற்றாலும், உறவு சுற்றம் அனைத்தையும் இழந்தாலும் உன் சத்தியத்தின் பிடிப்பை மட்டும் தளரவிடாதே. மேலும் உலகமே நிலைபெயரினும் உன் உடலே சிதைவுற்றாலும் பக்தியாக இருந்தால் யாமும் இறைவன் கைக்குழந்தையன்றோ; இறைவன் கைப்பதுமையன்றோ "அவன் வசம் கொடுத்த" நிலையில் உள்ளத்துறுதியுடனும்; ஞானம் உனக்கு சாத்தியமானால் "நாமும், இறைவனும், அதுவும்" "ஒன்றே" என் உன் உள்ள வைராக்கியமே உறுதியாகும்.

J. சிரத்தை:— இதன் வேதாந்த வாக்கியம் சொல்வதாவது சிரத்தையே ருது; உபதேசமே விந்து; ஞானமே கர்ப்பம்; ஆனந்தமே குழந்தை யென்பதைப் போல். சிரத்தை இல்லாதவனுக்கு ஞானம் வழிக்காது என்பதைப் போல். சிரவணம், மனனம், நிதித்யாசனம் அதாவது இந்த மூன்றிலும் சிரத்தை வெளிப்படுகிறது. மேலும் வசிஷ்டர் வாசிஷ்டத்தில் ஸ்ரீ ராமனுக்கு சொல்வதாவது,



2

குழந்தாய் ராமா! ஓர் பக்குவப்பட்ட ஆன்மாவுக்கு

1. ஸ்ரீ பகவான் தரிசனமும், ஸ்ரீ பகவத் கிருபையும் பரிபூரணமாக இருந்தாலும்.

2. பற்பல ஸ்ரீ மஹான்களை தரிசித்து பணிவிடைகள் பற்பல செய்து அவர்கள் ஆசிகள் நிறைந்திருந்தாலும்.

3. ஓர் ஸத்குருதேவரை அடைந்து அவருக்கு மூன்று சேவைகளும் முறைப்படி செய்து அவர் ஆசிகள் பெற்றிருந்தாலும்.

தான் ஜீவன் முக்தனாக வேண்டுமென்ற அதிவிவேகசிரத்தை இல்லையானால் அவனுக்கு ஞானம் சித்திக்காது!! இதுவே வேத வேதாந்தங்களின் கருத்தாக இருந்தாலும், உபநிஷத்துக்களின் உண்மைக் கருத்துக்களாக இருந்தாலும்,

இந்த வைத்தியம் உங்கள் அனைவரின் திருவடிகளைப் பற்றி உங்கள் திருவடி தூளி எம் சிரமேல் தாங்கி பிரமாணமாகச் சொல்வது:

"இவை மூன்றும் அதிவிவேகசிரத்தையை கொடுத்துத் தான் பின் வரும்"!!!

என உறுதியாகச் சொல்லுவோம்.

எம் குழந்தைகளே! இதன் காரணத்தை உணர்வீர். எப்படியென்றால்?

**சர்வார்ப்பணம்!** (பக்தியாகும்)

**எல்லாம் நீயே!** (அனுபவ ஞானமாகும்)

கலிதோஷத்தில் சிக்கி, கோர குணங்களின் வாயில் அகப்பட்டு விளம்பரம், வியாபாரம், ஆடம்பரம், ஆகிய "போகபக்தியில்" சிக்கி கரையேறுவதற்கு ஓர் துறைகாணாது மயங்கி தயங்கி அயர்ந்து சோர்ந்து "மரணத் தருவாயில்" சிக்கித் தவிக்கும் இந்த ஜீவர்களுக்கு கடினபயிற்சியை கொடுத்தால் அது முடியாத காரியமாகி விடும். யாம் சொன்ன இரண்டை மட்டும் "**தூய சிரத்தையுடன்**" செய்வாறிருந்தால் போதும். உயர்ந்த உணர்ந்த பக்தியும் சாத்தியமாகும். அதனால் அனுபவ ஞானமும் சாத்தியமாகும். அவ்விரண்டுமே சிரத்தைக்குப் போதுமானதாகும். "இது உறுதி."



உ

**வேண்டாதது:-** காமம், குரோதம், விரோதம், வஞ்சனம், மோஹம், லோபம், சந்தேகம், போட்டி, பொறாமை, பேராசை, அஹங்காரம், அபிமானம், மதம், பழிபாவம், சோம்பல், தற்பெருமை, ஆகியவை ஆகும். உலக கலைகள் அதாவது ஆய கலைகள் 64 ஐயும் சுருக்கினால் 16 கலைகளாகும். இந்த வேண்டாததுர்க்குணங்களையும் 16 ஆக பிரித்தார்கள் நம் முன்னோராகிய ஸ்ரீ மஹான்கள். இனி இவற்றின் தராதரத்தை பிரித்துப் பார்ப்போம்.

A. காமம்:- இரண்டு மான்கள் போகத்தில் ஈடுபட்டிருக்கும் போது மரண தேவனை புலி எதிரில் நிற்பதும் தெரியாது. அதன் பின்னால் காலதேவனாகிய ஓர் வேடுவன் அதற்கு குறிபார்த்து நிற்பதும் தெரியாது. இதைப்போலவே குறிப்பிட்டு என சொல்லப்பட்ட இரண்டு பேடுகளும் போகம் அனுபவிக்கும் போது எவரும் அப்படியே பிடித்துத் தாக்கினாலும் அது அந்த போகத்தை விடுவதில்லை. இப்படி போகமாகிய காமத்தில் அதிகமாக ஈடுபட்டால் காலதேவன் அதி சீக்கிரமாக வந்து விடுவான். காமம் வேகம் வேண்டாம்.

B. குரோதம்:- ஒருவர் ஒருவரை சில கூடான சகிக்க முடியாத வார்த்தை பேசினாலோ, அறிந்தோ அறியாமலோ சில தவறுகளைச் செய்து விட்டாலோ, அதை மறக்கமுடியாமல் தானும் தம் மனதைப் புண்படுத்திக் கொண்டும், சமய சந்தர்ப்பம் கண்டு அவர்கள் மனதையும் புண்படுத்தி அதில் ஓர் ஆனந்தம் அனுபவித்துக் கொண்டும் இருப்பது குரோதமாகும்.

C. விரோதம்:- எப்போதோ, எக்காலத்தோ, எந்நிலையிலோ அறிந்தோ அறியாமலோ செய்த குற்றம் குறைகளை மறக்காமல் மறக்கமுடியாமல், திரும்ப பழி வாங்க நினைப்பதும், அண்ணன் தம்பிமார்கள் உறவுப்பகை குடும்பப்பகையாகி, அதுவே ஊர்ப்பகையாகி அழிவுப்பாதையில் செல்வது விரோதமாகும்.

D. வஞ்சனம்:- இதை வஞ்சகம் என்றும் சொல்லலாம். இதுவும் விரோதத்தை யொட்டியே இருக்கும். ஆனால் சமய சந்தர்ப்பம் பார்த்து அந்த நபரையே தீர்த்துக்கட்டுவதாயும், இதனால் தொல்லைகள் மிகுதியாக ஏற்படும். பல கொலைகள் விழுந்தாலும் இது நிற்கப்போவதில்லை மேலும் மேலும் அது விரோதத்தை வளர்க்கும் இந்த வஞ்சகம்.



உ

E. மோஹம் :- இது தீராத ஓர் வெறிச்செயலாகும். அதாவது உண்பதிலும், உடுத்துவதிலும், அணிவதிலும், போகத்திலும் எத்தனைதான் (நாம்) அனுபவித்தாலும் மேலும் மேலும் தேவையையும் வேகத்தையும் வளர்த்து நம்மை பிறவிகளுக்கும், சண்டாள மார்க்கத்திற்கு வழிவகுத்துக் கொடுக்கும் இந்த மோஹம்.

F. லோபம் :- தன்னிடம் உணவோ, உடையோ, பணமோ தேவைக்கு அதிகமாக இருந்தாலும் மிருகங்களுக்கோ, பறவையினங்களுக்கோ, மனித இனங்களுக்கோ கிஞ்சித்தும் கொடுக்கமாட்டான். எதுவும் வீணாக கெட்டுப் போனாலும் அவைகளை கீழே இறைப்பானே தவிர ஒரு ஜீவனுக்கு "ஐயோ பாவம்" என கொடுத்துதவமாட்டான் இதுவே லோபம்.

G. சந்தேகம் :- இது கொடிய நச்சரவமாகும். கேட்டால் சந்தேகம், சொன்னால் சந்தேகம், கொடுத்தால் சந்தேகம், வாங்கினால் சந்தேகம், பார்த்தால் சந்தேகம், தொட்டால் சந்தேகம், பழகினால் சந்தேகம், விலகினால் சந்தேகம், உறவினால் சந்தேகம், பிரிவினால் சந்தேகம், தன் குடும்பத்தில் சந்தேகம், தன் உறவுமுறைகளில் சந்தேகம். இப்படி இன்னலும் எழுதிக் கொண்டே போகலாம். "இது ஒன்றுபடாத இரண்டுபட்ட தன்மையாகும்" அதாவது பிளவுபட்ட நூல் எப்படி ஓர் ஊசி துவாரத்தில் நுழையாதோ அதேபோல் இது லோகத்திற்கும் ஆகாது, தெய்வீகத்திற்கும் ஆகாது இந்த சந்தேகம்.

H. போட்டி :- ஒருவர் வாழ்க்கையிலோ, சாதனையிலோ உயர்ந்து ஆனந்தப்படுகிறார் என்றால் அவருக்கு முன் நிலையில் நாம் இருக்க வேண்டுமென்று எத்துறையிலும் போட்டி போடக்கூடாது. நாமும் நற்கதி அடைய வேணுமென்ற கடின உழைப்பு வேண்டும். போட்டியும் பொறாமையும் ஓர் நிலையில் ஒத்து வரும். ஒருவர் நற்செயலைக் கண்டோ நலமான வாழ்க்கையைக் கண்டோ, ஒருவர் ஆன்மசாதனையைக் கண்டோ வயிறெரிவது பொறாமையாகும். அவர் தாழ்ந்து அவர் நிலைக்கு, தான் உயர வேண்டும், அதாவது உழைப்பில்லாமலேயே உயர வேண்டுமென எண்ணுவது போட்டியாகும்.



உ

I. பொறாமை:— இது பொறுக்க இயலாமை; அதாவது பொறுமை இல்லாமை. ஒருவர் வாழ்வையோ சாதனையையோ கண்டு அவனுக்கு எப்படி இப்படி வாழ்வு கிடைக்கலாம்; அவன் நம்மிலும் தாழ்ந்தவன் தானே என்றோ; நமக்குப் பின் சாதனை செய்ய வந்தவன் தானே அவன் எப்படி சாதனையில் உயரலாம்; நாம் கீழ் நிலையில் இருக்கும் போது அவன் மட்டும் எப்படி உயர்நிலைக்குப் போகலாம்? என்ற பொறுக்க இயலாமையே பொறாமையாகும்.

J. பேராசை:— ஆசைகளில் வெறியாம் பெரிய ஆசை; சகிக்க முடியாத ஆசை; தாங்க முடியாத ஆசை; வேகத்தோடு கூடிய ஆசை! இதுவும் பொறாமையை ஒத்தே இருக்கும். இறைவன் ஒருவனுக்கு விதிவசத்தால் பிரசன்னமாகி பக்தா! உனக்கு என்ன வேண்டுமோ கேள் தருகிறேன். ஆனால் உனக்குக் கொடுப்பதைவிட உன் அடுத்த வீட்டுக்காரனுக்கு இரண்டு பங்கு கொடுப்பேன் என்றானாம்! அந்த பக்தன் அதிக ஆசைப்பட்ட தன்மையினால் ஸ்வாமி எனக்கு ஒரு கண் குருடாகட்டும்; அடுத்த வீட்டுக்காரனுக்கு இரண்டு கண்களும் குருடாக வேண்டும் என்றானாம். இச்சம்பவத்தை பொறாமைக்கும் எடுக்கலாம் பேராசைக்கும் எடுக்கலாம்.

K. அஹங்காரம்:— உலகமோ, அதன் பொருள்களோ, அதன் இயக்கமோ அதன் பலனோ, அனைத்தும் சர்வ வல்லமையுள்ள இறைவனுடையதாக இருக்க, இச்ஜீவன் "நான்" என்றும் "என்னால்" என்றும் மார்தட்டிக்கொண்டு முடியும் கர்மாவை முடிய விடாமல் தானே வலிய ஏற்றுக்கொண்டு அஹங்கார சொரூபியாய் சராசரி ஜன்மாவும் ஞான ஜன்மாவும் எடுக்க தானே வழி வகுத்துக் கொள்கிறான்.

L. அபிமானம்:— மேலே கூறியபடி அனைத்தும் இறைவனுடையதாக இருக்க தம் கவனக் குறைவினால் போட்டி, பொறாமை, பேராசை, மோகம் இவைகளில் தம் மனதை சிக்க வைத்து, என்னுடையது என்றும் என் தகப்பனுடையது என்றும்; என் பாட்டன் முப்பாட்டன் தேடிய சொத்தென்றும் "வேலிக்குப் போகும் ஓணானை எடுத்து தம் தலை மேல் இட்டுக்கொண்டதைப்போல்" இறைவனுடையதைத் தன்னுடையதாக வலிய கர்மாவை ஏற்று இந்த அபிமானத்தாலும் ஆணவத்தாலும் பிறப்பிறப்பை தமக்குத்தானே ஏற்றுக் கொள்கிறான்.



## 2

M. மதம்:— மேலே கூறிய அஹங்காரத்தையும் இப் பொருள் குறிக்கும். "இன வெறி மத வெறியையும்" இது குறிக்கும். இன்றைய கலியில் அழிவுக்கே இந்த இரண்டும் தான் காரணமாக இருக்கிறது. ஒன்று ஜாதி வெறி, ஒன்று மத வெறி. இவை அனைத்தும் ஒரே இனம் என்றும் ஒரே மதம் என்றும் ஆகிவிட்டால் இனச் சண்டை, மொழிச் சண்டை, மதச் சண்டைகள் முறையும் இல்லாமலே போகும். ஆக இந்த உலகிற்கு அழிவுக்குக் காரணமான மதம் என்ற வெறியாட்டம் கூடவே கூடாது!

N. பழி பாவம்:— இங்கு இரண்டு வார்த்தைகள் இணைகின்றன. இதற்கு இரண்டு பழமொழிகளையும் நம் சான்றோர் சொல்வார்கள். "பழி ஓரிடம் பாவம் ஓரிடம்" என்றும் "எய்தவன் (பழி) ஒருவன் இருக்க அம்பை (பாபம்) நோவானேன்"? இன்றைக்கும் சொல்வதுண்டு, அதாவது "காலன் (பாபம் செய்வான் ஆனால்) பழி ஏற்க மாட்டான்" என இன்னமும் சில சொல்லலாம். இதை விதியின் (பழி) வழியே மதி செல்லும் (பாபம் சம்பவிக்கும்) மேலே கூறிய இவை அனைத்தும் "இயற்கையின் நியதி" இதுவே உண்மை. ஆனால் இன்றைய ஜீவன் இவ்விரண்டையும் "நான்" என்றும் "என்னால்" என்றும் "என்னுடையது" என்றும் தன் ஜீவத்தை போட்டுக் கொண்டு அந்த பழி பாவத்தை வேண்டுமென்றே தன் தலையில் போட்டுக் கொள்கிறார்கள்.

O. சோம்பல்:— குடும்ப சாதனைகளையும், பக்தி சாதனைகளையும், யோக சாதனைகளையும், ஞான சாதனைகளையும் முழுமையாக அழிக்கும் கொடிய நோய்! இதற்கு தேவையற்ற தூக்கமும் பயன்படும். சோம்பல் தூக்கம் இவ்விரண்டும் இணைந்தாலே அனைத்தும் நிர்மூலமாகி விடும். பிறகு பார்ப்போம், நாளை பார்ப்போம்! பிறகு செய்யலாம், நாளை செய்யலாம், இப்போ ஒன்றும் அவசரமில்லை, என காலத்தையும், வேலையையும், சாதனைகளையும் "அசிரத்தையுடன் தள்ளிப் போடுவதாகும்" பிறகு என்றே நாளை என்றே தள்ளிப் போட்டால் அந்த நேரம் நீ இருப்பாயா? அந்த வேலை தான் நடைபெறுமா? வேண்டிய பொருள் தான் இருக்குமா? ஆகவே ஜீவனை அழிக்கும் நோய் சோம்பலாகும். ஒன்று செய், நன்று செய், அன்றே செய் என்றார்கள் மேலோர்கள்.



௨

P. நற்பெருமை :– இது தனக்குத் தானே மரணக் குழி பறிப்ப
தாகும். ஒருவன் ஒருவனைப் புகழ்ந்தாலே இவன் அவனுக்கு
அவன் அறியாமலேயே பின்புறம் குழி தோண்டுகிறான் எனப்
பொருள்படும். தன்னைத் தானே புகழ்வதால் தனக்குத் தானே
மரணக்குழி தோண்டுகிறான் எனப்பொருள்படும். இதை தப்பாகவும்
அர்த்தம் கொள்ளக் கூடாது. அதாவது ஒருவன் ஓர் நல்ல
காரியம் ஒருவனுக்குச் செய்தால் அதை வாயால் புகழாமல்
நன்றிக் கடனாக தாகும் அவன் மகிழ்ந்தக்க ஓர் பிரயோஜன
மான காரியத்தை அவனுக்குச் செய்வதே நன்றிக் கடனாகும்.

அன்புச் செல்வங்களே!

இதுவரையும் உங்களுக்கு
வேண்டியது எது? வேண்டாதது எது? என்பதை சற்று
கோடிட்டுக் காட்டினேன். இவைகளை உள்ளத்தால் உணர்ந்து,
உணர்வால் தெளிந்து, அனுபவத்தால் முதிர்ந்து ஸ்வய
ஞானானுபவம் பெறுவீர்களாக. ஜலத்தில் மூழ்கும் போது
எப்படி மூச்சு முட்டி (மூச்சு திணறி) மூக்கிலும் வாயிலும் ஜலம்
புகுந்து உங்களை அவஸ்தைப் படுத்தினாலும் சில காலத்தில்
நீச்சல் கற்றுக் கொண்டீர்களானால் நதி என்ன சமுத்திரத்
தையே நீந்திக் கரை யேறிவிடுவீர்கள் (கரையேறி விட்டீர்கள்.) இது பிரமாண உண்மை.

ஆனால் எம் அன்புச் செல்வங்கள் அனைவருக்குமே
பெரும்பாலும் நீச்சல் கலை முடிவு பெற்றது. ஆனால் இன்னமும்
ஒருசிலர் தம் கோர குணங்களை விட முடியாத் தன்மையினால்
வாயிலும் நாசியிலும் ஜலம் போய்க் கொண்டிருக்கிறது.
இதை யாம் ஒருவனே உணர முடியும்.

## "அவர்களுக்கே இப்பாடம்"!!!

மூக்கில் ஜலம் புகுதல் :– நம்மை முழுமையாக அர்ப்பணம் செய்ய
முடியாமல் **"அபிமானம்"!!**

வாயில் ஜலம் புகுதல் :– நாவடக்கம் இல்லாத் தன்மையினால்
**அஹங்காரம்** முழுமையாக அழியாத் தன்மை.

குழந்தை பாபா.



இல்லையென்றதில்லையில்லை இல்லையென்பதும் இல்லையே!

ஓஎம் ஞானமழலைகளே! இந்த அத்வைதஞானத்தில்

ஓர் உண்மைக் கருத்துஎன்னவென்றால் ஸ்ரீமத் ரிபுகீதை பாடும் பொதும் உங்கள் நாவு ஸ்மரிக்கும் போதும் அது தானே நிகழ்கிறது. அதையும் யாம் உணர்கிறோம். அதாவது

பாடல் 95.

மாயை இல்லை. மருவும் அஹங்காரம் இல்லை,
மனமும் இல்லை, புத்தி இல்லை, சித்தம் இல்லை,
காயம் இல்லை, கருமம் இல்லை, கர்த்தா இல்லை,
காண்கின்ற பொறிகள் இல்லை, புலன்கள் இல்லை,
ஆயபல உயிர்கள் இல்லை, அமரர் இல்லை,
ஹயனும் இல்லை, ஹரியும் இல்லை, ஹரனும் இல்லை,
நேயபொருள் எவையுமில்லை, எல்லாம் என்றும்

**ஏகபரிபூரணமாம் பிரம்மரூபம்!!!**

பாடல் 100.

வானமுதல் பூதமில்லை, புவனமில்லை,
(இதை) வகுக்கின்ற ஈசனில்லை, ஜீவனில்லை,
(நானும்) நானும் இல்லை, நீயும் இல்லை, யாரும் இல்லை,
நாமமில்லை ரூபமில்லை, என்றும் எல்லாம்,
ஞானகனமான பரம்பிரம்மமென்றே

**ஞானநிலை பெறும் வரை நிச்சயம் செய்!**

இந்நிலை!

**"ஸத்குருவாக்கியார்த்த சிரத்தையினாலும்,**
**அகண்டசிவம் கருணையினாலும்"**

"உங்களுடைய திட நம்பிக்கையும், மிகுந்த பொறுமையினாலும், உறுதியான வைராக்கியத்தினாலும் சித்திக்கும்"!



உ

எம் அன்புச் செல்வங்களே!

மேலே கூறிய பாடல்களை ஸ்மரிக்கும் போது யாம் தரும் இந்த உண்மையை உணர்ந்து கொண்டு அநுபவ நிலையில் ஸ்மரிக்கவும்.

"இல்லை" என்பதன் பொருள் என்ன?

இருப்பதைத்தான் இல்லையென மறுக்க முடியும். ஒன்றுமே இல்லை என்றால் இல்லை என்ற சொல்லே வேண்டாம். அது அர்த்தமற்ற சொல்லாகி விடும். அப்படியானால் ஏதோ ஒன்று இருந்தால் தான் "அது இது இல்லை, அது இதுதான்"

என மறுப்புக் கூறவோ. அது மறைந்து அழிந்துவிட்டாலும் அது இதுவரை இருந்தது இப்போது தான் இல்லையெனச் சொல்லவோ முடியும்.

"எதுவுமே இல்லாதிருந்தால் இல்லை என்ற சொல்லுக்கு மதிப்பே இல்லை"!!!

அப்படியானால்???

முன் கூறிய பாடல்களை ஸ்மரிக்கும் போது முறையாக மாயை இல்லை, அஹங்காரம் இல்லை, மனம் இல்லை, புத்தி இல்லை, சித்தம் இல்லை, நானும் இல்லை, அவற்றை இயக்கும் கர்மா இல்லை, ஞானேந்திரியம் கர்மேந்திரியம் இல்லை, 84 லட்சம் ஜீவ கோடிகளும் இல்லை, அவற்றை ஆளுகின்ற தேவர்கள் இல்லை, சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் செய்யும் திரிகர்த்தாக்களும் இல்லை, ஐம்பூதங்களும் இல்லை, கோடானு கோடி அண்டங்களும் இல்லை, இவை அனைத்திற்கும் அதீதமான மஹேசன் சதாசிவம் இல்லை, முடிந்த முடிவாக இவை அனைத்தையும் முறையாக போதிக்கும் (ஸத்குரு) யானும் இல்லை, இவை அனைத்தையும் சிரத்தையுடன் கேட்டுக் கொண்டிருந்த (ஸத்சிஷ்யன்) நீயும் இல்லை, எந்த நாமரூபமும் இல்லவே இல்லை எனச் சொன்னால், இவைகளை எப்படி மனமுவந்து ஒப்புக்கொள்ள முடியும்?

மேலே கூறியவைகளில் அனைத்து அண்டரண்ட பிரம்மாண்டங்களும், அனைத்து ஜீவகோடிகளும், ஐந்து பூதங்களும், அனைத்து நாமரூபங்களும், சொல்லும் யானும் கேட்கும் நீயும் முழு மண்டமாக



உ

தோன்றுவதை எப்படி இல்லையென மறுக்க முடியும்?
கண்ணுக்குத் தெரியாத ஈஸ்வராதிகளையோ அந்தக்கரணங்களையோ
மற்றும் மாயையையோ இல்லையென்றால் அதுவும் இருந்தும் என எண்ணுகிறாயா?
ஜலத்தில் மறைந்திருக்கும் உப்பை இல்லையெனச் சொல்ல முடியுமா?
மேலே சொன்னவைகள்
1. தூலக்கண்களுக்குத் தோற்றுதான்!
கற்பனையின் மனக் கண்ணுக்கு உண்டு என்றே சொல்லமுடியும்!!
அறிவு கூர்ந்து அவைகளை உணர்ந்தால் இல்லையென்றாகிவிடும்!!!
இதை உணர்!

தொட்டு தாலி கட்டிய கணவனையோ, கைப்பிடித்த மனைவியையோ,
பெற்றெடுத்த பிள்ளையையோ, நீ தேடிய பணத்தையோ,
நீ கட்டிய மாடமாளிகையையோ, நீ தொட்டுப் பழகும் அனைத்து
பொருள்களையோ, ஆசையினால் சேகரித்த அனைத்து ஆஸ்திகளையோ
இல்லையென்றால் அவை உன்னை சும்மா விடுமா???
அவஸ்யம் அவைகள் உன்னை இல்லாமல் செய்துவிடும்!!!
ஈஸ்வராதிகளையும், தேவகணங்களையும், அந்தகரணங்களையும்
நீ இல்லை என்றவுடன் அது இல்லாமல் போவதும் இல்லை!
அவைகள் உன்னிடம் வாதாடவோ, சண்டை செய்யவோ
தர்க்கம் செய்யவோ வராது என்றதைரியத்தில் இல்லை
யென்கிறாய்!
அதற்காக ஜகம், அதன் பொருள்கள், உயிரினங்கள்,
கணவன், மனைவி, குழந்தை, உறவு சுற்றம், உன் பணம், உன்பொருள் இவைகளை
முதலில் பக்தி நிலையில் இறைவனுடையதாக உணர்!
அடுத்த ஞான நிலையில் அனைத்தும் மண்ணாக உணர்!!
ஞானமய முதிர்ச்சி நிலையில் அனைத்து நாமரூபங்களும்
நம் மனோமய கற்பனை வடிவமே தவிர உண்மை இல்லை
யென உணர். முடிந்த முடிவாக அவை நானே, நானே அவைகள்
என ஒன்றுபடுத்தி உணர்வாயாக. இங்கு கணக்கு முடிந்துவிடும்!



உ

அனைத்தும் பொய்யென்றாலும் ஞான விசாரணையுடன் பொய் யென உறுதி செய். அதன் குணங்களும் அதனால் நிகழும் இன்ப துன்பங்களும் உன் மனதை பாதிக்கும் நிலைமாறி, எந்த ஒரு உணர்ச்சிகளுக்கும் அடிமையாகாமல் ஜகத்தை ஈசன் நிலையில் அதாவது சாட்சி நிலையில் உணரும் பரியந்தம் அனைத்தும் உண்டு என உன் வாய்ஞானத்தில் வைத்திருப்பாயாக.

உன் அனுபவ ஞானத்தில் இறைவனுடையது என்றோ, மாயையால் ஆனது என்றோ, அனைத்தும் மண்ணிற்கும் ஜலத்திற்கும் அன்னியமில்லை ஆகவே அனைத்தும் "**மண்ணே**" என சர்வ சதா உறுதி நிச்சயம் செய்வாயாக!

"கோடி வந்தாலும், கோடி போனாலும், அனைத்தும் ஓடிப்போன கனவு என எந்த நொடியும் உறுதி நிச்சயம் செய்!!

தோற்றத்திலும், மாற்றத்திலும், மறைவிலும், பல காலம் உண்டு உண்டு உண்டு என நம்பி அதிலேயே ஆழ்ந்த மனமாக இருப்பதால் சாமான்யமாக சமாதானம் அடையாதுதான்.

## மனித மனம்தானே??

சில நிமிஷங்களோ, சில மணிகளோ, ஓரிரு நாட்களோ நடந்த அல்லது கேட்ட சம்பவங்களின் கோரதன்மையை அனுசரித்து உன் உள்ளத்தில் தங்க வைக்கலாம். அடுத்த நிமிஷத்தில் அவஸ்யம் சாந்தி சமாதானம் செய்யப்பழகிக் கொள்ள வேண்டும்.

"அவைகளை எண்ணிக்கொண்டே இருந்தால் அது வாழ்க்கை!

"அவைகளை மறக்கப் பழகிக் கொண்டால் அது சாதனை!!

இதை இப்படி சமாதானம் சாந்தி செய்யேன்!! அனைத்தும் பாவைக் கூத்து அங்கு உடல், பொருள், உலகம் ஆகிய அனைத்தும் நடிக்கின்றன என உன் உதட்டளவில் நடித்துக் கொண்டு, உள்ளத்தை நாம் இறைவன் செல்வக் குழந்தையென்றோ, இறைவன் அம்சம் என்றோ, நாம் தாவாதிதன் என்றோ சர்வ சதா ஸ்மரித்துக் கொண்டிருந்தால் "யத்பாவம் தத்பவதி" என்ற நிலையில் நீ பாவனை செய்து கொண்டிருந்தால், உன் உண்மையான பாவனை, அனைத்து பாவங்களையும் சாம்பலாக்கி உன்னைப் பாவனமாக்கிவிடும், இது உறுதி!



உ

ஓம் அன்புச் செல்வங்களே! இந்த ஓர் பாடலையும் அதி சிரத்தையுடன் உணர்வீர்களாக.

பாடல்

அகம் பிரம்மம் என்று உணரும் ஆத்மஞானம்
(உன்) "அதி திடமாம்" "விவேகத்தால்" ஜனிப்பதாகும்!
அகம் பிரம்மம் என்று உணரும் ஆத்மஞானம்
(உன்) "ஆசிரியன் கருணையினால்" கிடைப்பதாகும்!
அகம் பிரம்மம் என்று உணரும் ஆத்மஞானம்
(உன்) "அனவரதம் பழக்கத்தால்" உரப்பதாகும்!
அகம் பிரம்மம் என்று உணரும் ஆத்மஞானம்
(எம்) "அகண்ட சிவம் கருணையினால்" நிலைப்பதாகும்!

குழந்தைகளே! இப்பாடலைப் பாடும் போதே அதன் ஆழ்ந்த கருத்து உங்கள் உள்ளத்தில் பதிந்திருக்கும். நன்றாக கவனிக்கவும். எப்படி வரிசைப்படுத்தி அழுத்தம் திருத்தமாக சொல்கிறார் பாருங்கள்???

1. ஓர் ஜீவனுக்கு (பக்குவ ஆன்மாவுக்கு) தான் முக்தியை அடைய வேண்டுமென்ற வேட்கை அதிகமாக இருக்கவேண்டும். அதுவே ஞானவிதை ஊன்ற பக்குவமான நிலம்.
2. அந்தகாலாதீத ஒன்றே ஸத்குருவாய் வந்து முறைப்படி அந்த விதையை அங்கு ஊன்றுகிறார். அவர் அந்த விதையை ஊன்றும்போதே "ஆத்மஞானம்" கிடைத்துவிட்டதென்றே உணரவேண்டும்.
3. அவ்விதையை ஊன்றிவிட்டும் போதாது அஞ்ஞானம் என்னும் களைகளைப் பிடுங்கி எறிந்துவிட்டு குணதோஷங்கள் என்னும் மாடுகள் வந்து அதை பாழ்படுத்திவிடாமல் பாதுகாத்து எந்நொடியும் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.
4. இவன் சிரத்தையும் குருகருணையும் இருக்கும் போது அந்த காலாதீத ஒன்றே இறைசொரூபமாகவும், குருசொரூபமாகவும், பரசொரூபமாகவும் இருந்து அந்த பலனை அனுபவிக்கிறது.

இவை அனைத்தையும் ஓர் குழந்தை சிரத்தையுடன் கேட்டுக்கொண்டே வந்தது. அது தந்தையைப் பார்த்துக் கேட்டது அப்பா! பலபல வருஷங்களாக இந்த ஞானபாடம் அனுபவரீதியாக



உ

புகட்டிக் கொண்டே வருகிறீர்கள். நாங்களும் கதை கேட்கும் குழந்தையாகத் தான் இருக்கிறோமே தவிர கருத்தை உணர்ந்து அது ஆன நிலையாக எங்களுக்குத் தோன்றவில்லையே அதன் காரணம் என்ன? ஆனால் எங்கள் மனோநிலையும், விதியின் விளையாட்டும் தாங்கள் அறிவீர்கள். தாங்களோ வள்ளலார் பாடலொன்றை பாடுகிறீர்கள். அதையும் நாங்கள் ஆனந்தமாக கேட்போம் அந்நிலை என்று பெறுவோம் என ஏங்குவதுண்டு. அந்நிலையை எங்களுக்கும் கொஞ்சம் உணரும்படி நிலை கூட்டினால் என்ன? அது ஒன்றும் உங்களுக்கு ஆகாத காரியம் இல்லையே? தயவு செய்து கொஞ்சம் கருணை காட்டுங்களேன் என கண்களில் ஆனந்த பாஷ்பம் ஓட ஓர் அன்புக் குழந்தை கேட்டது.

அப்பா:- உன் உருக்கமான உள்ளமும் உரிய பண்பும் எம்மையே உருக்கி விட்டது குழந்தாய். நல்ல சத்தாகவும் இருக்கிறாய் ஆனாலும் அறியாமையென்னும் திரை கொண்டும் மூடி இருக்கிறாய். திரை விலகிய மறுக்ஷணம் அதுவாகத் தான் இருக்கப் போகிறாய். இப்பவும் நீ அது தான். திரையை நீயே உன் கைகளால் பிடித்துக் கொண்டு என் நிலை என்ன எனக் கேட்டால் யாம் எப்படி பதில் சொல்ல முடியும்?

குழந்தை:- திரை திரை யென்கிறீர்களே! அது என்ன மாயத் திரையோ? அது என்று அகலுமோ? யாம் அதை விலக்குவதா? அல்லது அதை தாங்கள் விலக்குவதா? ஒன்றும் புரியவில்லையே! வாழ் நாள் எல்லாம் வீணே போவது போலல்லவா தோன்றுகிறது. (என சலித்துக் கொண்டது அக்குழந்தை)

அப்பா:- அதன் கண்ணீரைத் துடைத்து, அதன் உடலையும் தடவிக் கொடுத்தவண்ணம் சலிப்பு கூடாது குழந்தாய் சாந்தியும் அதனால் சமாதானம் வேண்டும்; சாதுர்யம் வேண்டும் சாதனையும் வேண்டும்.

குழந்தை:- என்ன தான் சாந்தி சமாதானம் செய்தாலும் காலம் வீணாக போவதாகத் தான் தெரிகிறதே தவிர எம் கலக்கம் நீங்கியபாடில்லையே? வருவாயா ஸ்ரீ ரங்கா என்ற பாடலைத் தாங்களே கண்ணன் முன் நின்று உருகிப் பாடும் போது உங்கள் பாடல் எப்படி அமைந்திருக்கிறது?



உ

"மனதின் நிலையும் விதியின் சதியும்" உணராதவனா நீ?
அப்படியானால் இதன் பொருள் என்ன? எம்மனமும் சூட்சமம்
எம் வினையும் சூட்சமம் இதை தெரிந்த தலைவன் நீ ஒருவன்
தானே? எம்மனமும் எம் வினையும் நீ அறியாததா? ஏன்
இந்த வீண் காலம்?

அப்பா:— குழந்தாய்! உண்மை தான் அன்புமாயுமே. அதை நான்
திரை நீக்கம் என குறிப்பிடுகிறேனே. இதை நீ உணரவில்லையா?

**"மனதின் திரை நான்"** என்ற அகங்காரம்!

**"வினையின் திரை எனது"** என்ற அபிமானம்!!

இவ்விரண்டையும் வார்த்தை அளவில் விட்டுவிடுகிறாய்
ஆனால் செயல் அளவில் அனுபவம் காணுமோ?

குழந்தை:— அப்பா! இந்த சமாதானம் பேச்செல்லாம் எமக்கு வேண்டாம்
அப்படியானால் வள்ளலார் பாடலில் இப்படி பாடக்காரணம்
என்ன? அதாவது?

"தனக்கு நிகர் இங்கில்லாத உயர்ந்த ஸ்தம்பம் ஒன்றதே.
அதைத் தாவிப்போக யோக நூலின் தரத்தில் நின்றதே.
தனகத்திகைப்புற்று யாவும் தவங்கி வருந்தவே - எம்
**"கலக்கம் நீக்கி தூக்கிவைத்தாய் நீ பொருந்தவே"**

எம் ஐயாவே! இதன் உண்மைப் பொருள் என்னவாம்?
இதில் ஓர் பெரிய ரகசியமே அடங்கியிருக்கிறது
இதில் உள்ளதை ஒளிக்காமல் அப்படியே சொல்லுங்
கள் எம் ஐயாவே! என எம் திருவடியை பற்றி உள்ளத்
தவிப்புடன் கேட்டது அக்குழந்தை!

அப்பா:— ஓ எம் செல்வமே! எம் கனிரசமே! இதன் உட்பொருள்
நீ உணர்ந்த விதம் எவ்விதம்? நீ உணர்ந்ததை பாதி
சொன்னால் மீதியை யாம் சொல்கிறோம்? உன் ஆர்வத்
தை யாம் மெச்சுகிறோம். ஓர் நிலையில் அதி சமர்த்தனாகவும்
இருக்கிறாய்! ஓர் நிலையில் சபலனாகவும் இருக்கிறாய் எங்கே
சொல் பார்ப்போம்?



உ

குழந்தை! எம் ஐயாவே! உம் குழந்தை ஒருபோதும் சபலனாகாது
தந்தை எப்படியோ அப்படியே தனயனும் இருப்பான்
இது உறுதி! உம் வாய்ப் பேச்சில் எல்லாம் யாம் மயங்க
மாட்டோம். நாங்கள் இப்படியும் பேசுவீர்கள். அப்படி
யும் பேசுவீர்கள். நீர் ஓர் கபட நாடகன் தான் ஆனாலும்
எம் நிலையில் அப்படி ஆக மாட்டீர், ஆகக் கூடாது. சரி
யாம் உணர்ந்ததை சொல்கிறோம்.
ஐயா! (இந்த வார்த்தையை சொல்லும் போது தேம்பித்
தேம்பி அழுது விட்டது அந்த வாத்ஸல்யக் குழந்தை)
"தாங்கள் தந்தையாயின் யாம் உம் சேயே!"
"தாங்கள் இறைவன் ஆயின் யாம் உம் பக்தனே!"
"தாங்கள் ஸத்குரு ஆயின் யாம் உம் ஸத்சிஷ்யனே!"
"தாங்கள் பரம் ஆயின் யாம் உம் யோக மாயையே!"
எதுவாயிருந்தாலும் எம் வார்த்தைகளை கண்டு குற்றம்
குறை காணாமல் நிறைவைக் காண வேண்டுமென்று எம்
திருவடிகளில் பணிந்தெழுந்தது அப்பண்புள்ள குழந்தை
(அதை ஆரத் தழுவி முத்தமிட்டோம்) அக்குழந்தை
சொன்னதாவது :- மேலே கூறிய நான்கு நிலைகளில் தாங்களை
ஸத்குரு ஸ்தானத்தில் வைத்தே யாம் உங்கள் ஸத்சிஷ்யனாக இருந்தே
பதில் தருகிறோம். ஸ்ரீ குருதேவர் தம் உத்தமமானவனை அழைத்து
செல்கிறார் ஓர் இடம் வந்ததும் அங்கு பனைமரத்தை ஒத்த ஓர்
பெரும் தூணைக் காட்டுகிறார் ஸ்ரீ குருதேவர். அம்மரத்தைக் காட்டி
குழந்தாய் இம்மரத்தைப்பற்றி ஏறி "மேல்நோக்கிச் செல்"
எக்காரணம் கொண்டும் கீழே இறங்கவும் கூடாது, கீழே பார்க்கவும்
கூடாது, அக்கம் பக்கம் பார்க்கவும் கூடாது. இத்தூணின்
முடிவிடமே (மாடியே) உன்னுடைய ஸ்தானம் எனப் பணித்தார். அக்
குழந்தையும் ஸ்ரீ குருதேவர் திருவடியை தண்டனிட்டு வணங்கி விட்டு
ஸ்ரீ சத்குரு ஸ்மரணையுடன் ஏறியது. எத்தனை காலம் ஏறினேமோ?
எத்தனை தூரம் ஏறினேமோ? எப்படி ஏறினேமோ? யாம் அறியோம்.
அந்த பருத்த தூணானது மேலே செல்லச் செல்ல பருமன் வரவரக்
குறைந்து ஓர் கம்பின் பருமனானது. மேலும் ஸ்ரீ குருநாம ஸ்மரணையுடன் ஏறினோம்.



உ

அந்நாரணது ஓர் பரும் கயிறு போல் ஆனது. மேலும் ஸ்ரீ குருநாமஸ்மரணையுடன் சற்று கவனத்துடன் ஏறினோம். நாமஸ்மரணையினால் அக்கலக்கம் சற்றுஒருசில விநாடிகளே இருந்தன அதுவும் மறைந்து ஆனந்தம் தோன்ற அதையும் ஏறிக் கடந்தோம். சிறிது காலத்தில் அம்மரம் "**ஓர் நூல்**" மருமமாகி விட்டது. இங்கு கலக்கத்துடன் "பயமும்" ஏற்பட்டுவிட்டது. அப்பயம்,

"முடியுமா? முடியாதா? என்ற சந்தேக பயம் இல்லை"

"முடிந்துவிட்டதே நம் ஸ்வய அனுபவம் என்ன என்ற பயம்!!

அதைபயம் என்றும் சொல்லமுடியாது "ஓர் உணர்வு" எனச்சொல்லலாம்

அருந்தவிநாடி "**குரு**" (ஒலியும் ஒளியுமாக) எம் பதாஸ்தானம் ஏதுவோ அங்கே அமர்ந்து எம்மோடு கலந்துவிட்டது.

எனச்சொல்லிய குழந்தை "மாணிக்க ஸ்படிகமாக" இருந்தது!

அதைஅப்படியே வாரியெடுத்தோம். ஆரத்தழுவினோம். முத்தமிட்டோம்.

அம்மா:– குழந்தாய்! எம் செல்வமே! இதுவே எம் ஸ்வய அனுபவம் அதை அப்படியே சித்தரித்துவிட்டாயே! இதற்கு மேல் விளக்கம் சொல்ல என்ன இருக்கிறது?

குழந்தை:– அம்மா! அப்படியே நம் விடாதீர்கள் எம்மை முடிந்த முடிவாக்கிவிட்டால் எம்மோடு இருந்துவிடுங்கள். எம்மை விட்டு எப்படி தாங்கள் பிரிய முடியும்? போகமுடியும்?

அம்மா:– நீதான் முடித்துக்கொண்டாயே! முடிந்துவிட்டாயே! இனிஉன்னுடன் வாக்கு வழக்காட என்ன இருக்கிறது?

குழந்தை:– இத்தனையும் எம்முள் இருந்து தாங்களே பேசினீர்கள் இதன் முடிவான உண்மைப் பொருளையும் விளக்காமல் தாங்கள் எப்படிச் செல்லலாம்? கதை சொல்ல வைத்தீர்கள்; அதன் காரணத்தை (கருத்தை) உணர்த்த வேண்டாமா?

அம்மா:– எம் ஆர்வமுள்ள குழந்தாய்! கதையோடு திருப்தி ஆகிவிடுவாய் என எண்ணினோம். நீ கதை கேட்கும் குழந்தையல்ல கருத்துடன் ஒன்றும் குழந்தையென தெரிந்துகொண்டோம்.

குழந்தை:– இது தாங்கள் குழந்தையல்லவா? "கடுகு சிறுத்தாலும் காரம் சிறுக்குமோ?



உ

அப்பா:- எம் செல்வக்குழந்தாய்! என்ன தான் ஆத்ம ஞானபாடம் கேட்டாலும் "சுயானுபவம் பொருந்தும்" பரியந்தம் "தற்கவன சக்தி" அவஸ்யம் வேண்டும். அது இல்லாமல் யாம் என்ன தான் ஆத்மஞானபாடம் அனுபவ போதனையாக இருந்தாலும் "நான், என்னால், எனது, ஆக இந்த மூன்றும் வாக்கில் வராமல், உள்ளத்தில் பதிவாகி" அழியாமல் இருந்தால் அது பிரயோஜனம் இல்லை தான்!

குழந்தை:- அப்பா! அது எப்படி எம் உள்ளத்தில் பதிவாகி அழியாமல் இருக்கிறது என எப்படி உணர முடியும்?

அப்பா:- குழந்தாய் இதை அடிக்கடி நீ சுய சோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். அதாவது உலக இச்சைகளிலோ, உடல் அசைவுகளிலோ அதிர்ச்சியுறாமல், அதை கொள்ளாமல், விபரீத கற்பனை பண்ணாமல், கோர குணங்களுக்கு அடிமையாகாமல் அந்த இருநிலைகளிலும் "நாம் இறைவன் குழந்தை என்றே; நாம் அது என்றே"

**"தற்கவன சக்தியோடு"!!!**

இருந்தால் அங்கு உள்ள அடி ஆழத்திலும் அம் மூன்றும் அழிந்துவிட்டதை உணர்வாயாக.

குழந்தை:- இந்நிலை பெற எத்தனை காலம் செல்லுமோ? என சோர்ந்து எம் பாதங்களில் விழுந்து விட்டது அக்குழந்தை!

அப்பா:- அப்போதும் யாம் அன்பான குரலில் அரவணைத்துத் தூக்கி அதன் சோர்வை நீக்கி!

உன்னால் முடியும் குழந்தாய்! நீ எம் குழந்தை!!

என்றோம்!

குழந்தை:- அப்பா! அப்பா! அப்பா! இத்தெளிவு ஒன்றே போதும் இனி அக்கதையின் கருத்துக்கு வாருங்கள் என துரிதப் படுத்தியது அந்த உண்மைக் குழந்தை!

அப்பா வாக்கியம்!

எம் குழந்தாய்! ஸ்ரீ குருதேவர் முதல் உபதேசமே தத் த்வம் அஸி (அதுவாக நீ இருக்கிறாய்) இவ்வாசகத்தை கேட்டதும் அந்த உண்மையான மாணவன் திகைத்திருந்தான். அதை தம் குருதேவரிடம் வெளிப்படையாக சொல்லவும் முடியாமல் "குருவாக்கு வேதவாக்கு" என உணர்ந்து கொண்டு ஸ்ரீ குருதேவர் ஸத்ய ஸங்கல்பன், அவர் ஸத்ய சொரூபி, அவர் ஸத்ய ஸம்பன்னன்!



உ

அவர் உடல் உலகம் இல்லாதவர். ஆனால் நிலைகண்டு பொருள்கொண்டு தெய்வமும் ஆவார். எனை உறுதிபூண்டு குருதேவா! யாம் என்ன செய்ய வேண்டும் எதை ஸ்மரிக்க வேண்டும் என வினவ. ஸ்ரீ குருதேவரும் "அகம் பிரம்மம் பிரம்மம் அகம்" இதுவே உன் அடிஆழத்தில் யாம் விதைக்கும் ஞானவித்து. ஆனால் தற்காலிகமாக உன் உள்ளத்தில் காடுமேடாக செடிகொடிகள் (மண், பொன், பெண் முதலிய உறவுகள்) வளர்ந்திருப்பதை பிடுங்கி எறி என சிலகாலம் பாடம் கொடுக்கிறார். அன்பினாலும் கருணையினாலும் அவன் உள்ளத்தை பண்படுத்தி ஓர் உபாசனாமூர்த்தியை அவன் விரும்பும் வகையில் அவனுக்கு ஸ்தாபனம் செய்கிறார். அந்த உபாசனா மூர்த்தியின் கிருபையினால் நிஷ்காமிய கர்மாவை இயக்கி, அதன் மூலம் நிஷ்காமிய பக்தியை வளர்த்து அதனால் உள்ள உருக்கமும், உண்மையின் ஏக்கமும் ஸ்தாபித்து, அந்த பக்தி வளரும் காலமெல்லாம் இறைவனை அவன் உள்ளத்திலேயே உணர்ந்துவழிக்காட்சியை மற எனப்போதித்து இடைவிடாமல் அந்த இறைவனும் நீயும் ஒன்றே என சர்வசதா போதித்து அவனுக்கு சாட்சிபாவனையை அவன் சாதனையால் தோன்றச் செய்து. அவனும் இறைவனும் ஒன்றென்ற அகண்டபாவனையில் நிலைநிறுத்தும்போது. அந்த உத்தமமானவன் இதுவரை அவர் போதனையில் சந்தேகமின்றி தெளிந்த நிலையில் வந்தவன் இங்கே திகைக்கிறான். எப்படி என்றால்???

இறைசொரூபம் நம் கற்பனை வடிவமே. அவனும் நானும் ஒன்றென்றால் அதையும் நம் கற்பனையின் மூலம் ஒன்றாக்கி விடலாம். ஒன்றாக்கி விட்டோம்!!! ஆனால் நாம, ரூப, குணம், குறி, கற்பனை கடந்த அந்த காலாதீத ஒன்றை எப்படி உணர்வது? எப்படி சேர்வது? என திகைக்கிறான் அந்த அன்பானவன்!!!

குழந்தாய் இதைக் கவனிக்கவும்:- சாட்சிபாவனை யென்பது நான் என்கிற என்னுடையது என்ற அஹங்கார அபிமானம் (ஜே, சாதி, வட்டம், வெட்கம் முதலிய துர்க்குணங்கள்) இவைகளை கொஞ்சம் கொஞ்சமாக கெடுத்து குறைத்துக்குறைத்து (குறுக்கி குறுக்கி) அதாவது எல்லாம் நீ என்ற சர்வார்ப்பணத்தில் தம்மையே அழித்து விட்டால் நாம் இல்லாமல் போய் விடுகிறோம். அங்கு இறைவனே இருக்கிறான். இந்நிலையே "சாட்சிபாவனை" இது முதிர்ந்து ஒருமித்த பாவனை. இதிலிருந்து அகண்ட பாவனையை உணரும்போது சாட்சி. சர்வசாட்சியாக மாற வேண்டும்.



உ

மேலும் இம்மகற்பனைமனமும். மேலும் எதையும் சிந்திக்கும் எண்ணமும், இல்லாமல் ஒழிந்து விட்டதால் அடுத்து என்ன செய்ய வேண்டும்? என்ன நடக்கும்? எதுவாக இருக்கிறோம் என ஓர் திகைப்பு ஏற்படுவது சகஜமே.

அந்நிலை ஓர் பக்குவ ஆன்மாவுக்கு ஏற்பட்ட மறுகணமே "அகண்டபாவனை" யாகிய "சர்வ சாட்சி" பாவனை உடனே கூடிவிடும்.

"இங்கு மனம் இல்லை ஆனாலும் ஓர் இயக்கம் உண்டு"!!

**"அதுவே பரகருணை"!!!**

ஆகவே தான் ஓர் கம்பம் அசலமாக இருந்தது என்பது;
நிஷ்காமிய கர்மா!
அதுவே குறுகி குறுகி ஓர் கயிறு போல் முடிவில் ஆனது;
நிஷ்காமிய பக்தி!!
அதில் முதிர்ச்சி ஆகி முழுமையான சாட்சி பாவனை பெற்றது;
தெய்வம் நாமானநிலை!!!

நூலின் தன்மைக்கு வரும்போது அந்த சுத்தாத்மா! இதுதான் முடிந்தமுடிவா, ஒன்றும் உரைமுடியவில்லையே என்று ஏங்கும் போது, எம்பிரான் கருணையே ஓர் ஸத்குருவாக வந்ததோ அதுவே அண்டாண்ட பிண்ட பிரம்மாண்டங்கள் அனைத்தையும் தாங்கக்கூடிய, ஊடுருவி நிற்கக்கூடிய, சர்வவியாபகமாயிருக்கும் **"சர்வசாட்சியான அகண்டபாவனை"**! ஆகி அந்த சுத்தாத்மாவின் கலக்கத்தை நீக்கி நிலைபெறும்படி "தாம்தாமாய் ஆக்கிக் கொண்டது"!!
இதுவே முடிந்தமுடிவாகும்! இதுவே அப்பாடலின் உட்கருத்தாகும் எனசொல்லி முடித்தார் அப்பா!

குழந்தை:- அப்பா! "எம்கவலைக்கும் நீக்கி தாங்கி வைத்தாய் நிலை பொருந்தவே" எனஅப்பாடல் முடிகிறதே! மனமே இல்லாமலும், அனுபவம் பெறும் நிலையிலும் கவலைப்படுவது அப்பக்குவம் இல்லாத குழந்தையென்றும் அஞ்ஞானி என்றும் உணர்ந்து கொண்டோம்!



உ

அந்நிலை கண்டு தூக்கி வைப்பது "இறைவரு"
"ஸத்குருவோ" இந்த ஒன்றைமட்டும் விளக்கவும்.

அப்பா:- ஓஎம் செல்வக்குழந்தாய்! பாடலின் உட்கருத்தே
ஞானம் எனப்புரிய வில்லையா உனக்கு? ஞானநிலை
யில் பொருள் சொல்லிவரும் போது இறைவனெப்படி
அங்கு இருக்கக்கூடும்? இறைவனுக்கும் அந்நிலை
தானே ஸத்குரு? ஸத்குருவின் போதனை தானே இப்படி
அமைய முடியும்? அவர்பரத்தைநோக்கி தம் இதய
னை தாம் கீழ் இருந்து அவனை மேலே ஏற்றுகிறார்
எனப்பொருள்கொள்ள வேண்டும்!

குழந்தை:- இது ஒரளவு எனக்குப்புரிகிறது. இருந்தாலும் பரு
மனை (பனைமரம் போன்ற) தாண் குறுகிக் குறுகி
நூலின் தரம் போல்இருந்துவிட்டது என்றால் அதன்
உட்கருத்து சற்று விளங்கவில்லை? அதற்கு மட்டும்
சற்று விளக்கம் கொடுத்தால் போதும்?

அப்பா:- நல்லது! சற்று உணர்வை கூட்டி இதை உணர்வாயாக.
ஓர் ஜீவன் பூர்வ புண்ணியத்தில் பக்குவப்படுகிறான்.
கர்மா சம்பந்தப்பட்டவன் குருகிருபையினால் அதை
நிஷ்காமியமாக செய்துபழகி வருகிறான். அது விரி
வடைந்த கர்மாவாக இருப்பதால் அதை பனைமரம்
என்றோம். கர்மாவின் முதிர்ச்சி உருகும் பக்தியாக,
கதறிஅழும் பக்தியாக, போதம் இறந்த வாழ்வு என நிறை
வுறும் பக்தியாக, உறையும் பக்தியாக, அதுவும் நிஷ்
காமிய பக்தியாக அநுபவம் கூடும் போது அதன்
பருமன் குறைந்து குறைந்து ஓர் பசும் நேர் இல் கழி
யாக குறுகி விடுகிறது. இவன் சாட்சிநிலை இங்கு
தான் பெறுகிறான். சாட்சிநிலை பெறும் போது இவன்
தெய்வநிலை பெற்று விடுகிறான். அதாவது இதய வாஸி
யாகிய அந்தர்யாமித்துவம் அதாவது கூடஸ்தமாம்
மமமாகிய பந்தமில்லாத ஆத்மா ஆகிவிடுகிறான்.
மேலும் இங்கு ஒருமையின் அநுபவம் அதிகமாகு
ம் போது "சர்வசாட்சிநிலை" "அகண்டபாவனை"யாக
இவனுக்கு கைவரப்படுகிறது. இதுகாவ பரியந்தம்

இங்கு ஓர் கயிறின் நிலை ஏற்படுகிறேன்.



உ

மனம் உண்டு; இங்கு மனம் அறிவாகி வருகிறது.
அறிவு அகண்டமாக பிரகாசிக்கும்போது, இது காலப்ரி
யந்தம் மனமாக செயல்பட்ட ஒன்று இங்கு நிலை
மாறும் போது அந்த மனம்,

1 நாம் எப்படி இருந்தோம்? (பிரிவடைந்த நிலையில்
அனைத்து போகங்களையும் அனுபவித்து (தூல) இன்பத்தில்
திளைத்திருந்தோமே?)

2 நாம் எப்படி இப்படி ஆனோம்? (நம் கற்பனையின்
இன்பம் ஒன்றையும் காணோமே அது என்ன ஆயிற்று)?

3 நாம் இனி என்ன ஆகப்போகிறோம்? (நம் இருப்பை
யே காணோமே? அந்த இனிமைமாறி ஏதோ ஓர் சொல்லவொண்
ணா தோற்றுகிறதே? இது எப்படி வந்தது?)

எம் குழந்தாய்! பிள்ளைக்குளவி எப்படி அதற்கு தந்த புழுவை எடு
த்து தம் கூட்டில் வைத்து அதை குத்தி குத்தி அப்புழுவை தம் உரு
வாக மாற்றியதோ அந்நிலையில் உலக நிலையில் செயல்பட்ட
இந்த மனமானது பக்தி நிலையில் கூர்ந்த புத்தியாகி அகண்ட
பாவனையாகிய ஞான நிலையில் அறிவாகி விட்டது. இதன் உட்
கருத்து என்னவென்றால் மேலே சொன்னபடி பஞ்சு ஓர் நிலையில்
கதிராகி, அது குறுகி ஓர் கயிறாகி, அது குறுகி ஓர் நூலின் நிலை
பெற்று விடுகிறது.

குழந்தாய்!
சாட்சி நிலை பெறும் போதும், (தெய்வ நிலை
அதாவது சாட்சி பாவனை) சர்வ சாட்சி நிலை பெறும் போதும் (அகண்ட
பாவனை). மனம் அறிவாகி அதுவே மறைந்தாலும்
நிலை பெறுவதால், முதலில் தனிக்கும் நிலை. இரண்டாவது
தவிக்கும் நிலை. மூன்றாவது ஒன்றும் இயலாத்தன்மை பெறுவதால்
இங்கு ஓர் பயம் ஏற்படுவது உண்மையே! ஆனால் அதை பயம் என்று
சொல்லக்கூடாது. நம் நிலை என்ற ஓர் கேள்விக்குறி (நூலின் நிலை)
ஏற்படுவது சகஜமே!
என்ன?
ஆனால்???
அடுத்த விடை ஸ்ரீ சத்குருநாதரகம் ஒலியும் ஒளியுமாக



உ

இருந்து அகண்டபாவனை (சர்வசாட்சிநிலை) கூட்டிவைத்து
விடும்! 1. தனித்தும் நிலை. ஜீவநிலை. அது கர்மாவாகும்!
2. தவித்தும் நிலை. தெய்வநிலை. அது பக்தியாகும்!!
3. ஒன்றும் இயலாத நிலை. வைராக்யம் ஆகும். அது
அகண்டபாவனையாகும்.

குழந்தை:- அப்பா! பண்டரியில் அந்த மாயக்கண்ணன் முன் நின்று
ஆனந்தமாக உருகி கதறிய வண்ணம் பாடினீர்களே அந்த
வருவாயா ஸ்ரீரங்கா பாடலில் ஓர் அடியை எடுத்து
அதற்கு விளக்கம் கேட்டோம் அது முடியவில்லையே
அதை அப்படியே "அம்போ" என விட்டுவிட்டீர்களோ!
யாம் என்ன அத்தனை ஏமாளியா? அதைச் சற்று விளக்கி
விட்டு எம்மை அது ஆக்கி விடுங்கள் எம் ஐயாவே.
இந்த வினைக்கூட்டை அமைந்து அலைந்த தெய்வமாம் போதும்
ஐயனே! கொஞ்சம் கருணை காட்டுங்கள் என எம் திருவடி
யைப் பற்றி கெஞ்சி, கொஞ்சி, கசிந்து கேட்டது அந்த
பரிசுத்தமான குழந்தை!

அம்மா:- குழந்தாய்! சாதுவாகவும் இருக்கிறாய்! அதே சமயம்
சாதுர்யமாகவும் இருக்கிறாய். பலே ஜோர். அதை எந்த
இடத்தில் விட்டோம்? அதைச் சற்று எடுத்துக் கொடுப்பாய்ப்
போம் உன் திறத்தை!

குழந்தை:- அப்பா! இது அசட்டுக் குழந்தையல்ல! அதாவது அந்த
பாடலாவது மனதின் நிலையும், மதியின் சத்தியம்,
உணராதவனா நீ?
மனதற்ற நிலையும், உணர்வற்ற செயலும்,
தந்தருள் புரிவாய் நீ??
இதுவே அப்பாடலும், எம் கேள்வியும்?

அப்பா:- வெகு சிரத்தை உள்ள குழந்தையாக இருக்கிறாயே! இப்படி
கேள்வியை உணர்ந்து கேட்கும் குழந்தையையே யாம் உ
பெரிதும் விரும்புகிறோம். இந்த கேள்வி மட்டும் போதுமா
இன்னமும் ஏதேனும் கேள்வி வைத்திருக்கிறாயா?

குழந்தை:- இந்த கேள்விக்கு மட்டும் பதில் கூறினால் போதும்? அடுத்து
என்ன என தாங்கள் உணர்த்தினால் அது கேள்வியாக வரும்
தற்சமயம் இது ஒன்றே போதும்!!!



உ

அம்மா :- குழந்தாய்! அதுதான் அப்போதே சொன்னேனே!
மனதின் நிறை நான் என்ற அஹங்காரம் என்றும்,
வினையின் நிறை என்னுடையது என்ற அபிமானம் என்றும்
விளக்கினேன். நீ அதை அந்த மட்டில் அதைவிட்டு விட்டு
வள்ளலார் பாடலுக்குச் சென்று விட்டாய். அதை அப்படியே
விட்டு விட்டாயென எண்ணினேன். அதை ஞாபகத்தில்
வைத்திருந்து கேட்கிறாய் போலும்? அதில் தான் ஸ்பஷ்
டமாக அறியும்படி கருத்திருக்கிறதே இன்னும் என்ன
விளக்கம் வேண்டும் என்கிறாய்?

குழந்தை :- அம்மா! அதில் தான் மனதற்ற நிலையும், வினையற்ற
செயலும், தந்தருள் புரிவாய் எனக் கேட்டிருக்கிறோ
அதை முடிக்க வேண்டாமா?

அம்மா :- குழந்தாய் மனதற்ற நிலையென்றால் சென்ற காலக் கற்பனையும்
வரும் காலக் கற்பனையும் அற்று, நடப்பது அனைத்தும் இறைவன்
செயலென்றும், அது நலமே என்றும், அங்கு நாம் துன்பமும்
இல்லையென்றும் மனதை முடிக்க வேண்டும். என்ப
வினை புண்ணிய பாப சம்பந்த செயலாகும். வினை எண்ணமில்லை
அதாவது இங்கு எந்த எண்ணமும் தேவை இல்லை. முன்சொன்ன
படி அனைத்தும் இறைவன் செயலென்றும் அது நலமே என்றும்
அங்கு துன்பத்திற்கு இடமே இல்லை என்றும் உன்
"மனதில் நிறைவு செய்து கொண்டால்" மனதால்
தூல வினை செய்து முடிக்கப்படுகிறது ஆகவே இங்கு எந்த
கற்பனைக்கும் இடமில்லையென்று சர்வ சதா சாந்தி
சமாதானம் (எல்லாம் நீயே என்று) செய்து வந்தால்
அங்கு இறை நிலையில் மனம் பழகி விடும். தூல வினைச்
செயல் படிப்படியாக மறந்து விடும். அது செல் காலங்களில்
"மன எண்ணமும், வினைச் செயலும்" கனவில் கண்டது போல் அவ
ஸ்யம் மறைந்து விடும். தூல வினையை எண்ணி எண்ணிப்
பார்ப்பதே பந்தம். கனவில் தோன்றும் ஓர் சர்ப்பமோ
கொல்வதாக உணர்ந்து அலறி எழுகிறாய். அதை நீக்க
கலக்கம் நிவர்த்தியானதும் அது கனவென தூங்கி விடுவா
யே தவிர வைத்தியரைத் தேடி அலைய மாட்டாய் அதே போல்



2

நடைபெறும் நிகழ்ச்சிகளும் காணும் காட்சிகளும், கேட்கும் ஓசைகளும் வினையின்படி திட்டமிட்டு நடைபெறும் ஓர் மாயா ஜாலம் என உணர்வை சர்வ சதா பெருக்கிக் கொண்டே வந்தால் சாதனை முற்றுப் பெறும் போது நாம உலக இன்பதுன்பம் தோன்றவே தோன்றாது. அங்கு ஆனந்தம் ஒன்றே தோன்றும்.

குழந்தை:- மனமும் வினையும் உணர்ந்தவன் நீ ஒருவன் தானே அதை அகற்ற என கேள்வியை ஏன் கேட்கவேண்டும்?

அப்பா:- கேள்வியை கேட்காமல் இந்த சந்தேகம் தெரிய முடியுமா? கேட்கும் கேள்வியை மட்டும் கேட்க வேண்டும். கேட்காதிருக்கவும் பழக வேண்டும். கேள்வியே அசைவுதானே? சர்வார்ப்பணத்தில் சகலமும் அடங்கிவிடும்.

குழந்தை:- அப்படியானால் அப்பா! இனி கேள்வி கேட்கா நிலைக்கு எம்மை ஆட்படுத்தி விடுங்கள். அது ஒன்றே போதும்.

அப்பா:- இங்கேயும் கேள்வி தோன்றுகிறதே?

குழந்தை:- எம்மை மன்னிக்கவும் !!!

**எல்லாம் நீயே !!!** (சர்வார்ப்பணம்.)

அப்பா:- இது போதும் உனக்கு. சர்வார்ப்பணமாக எல்லாம் நீயே என விட்டுவிட்டால் **உனக்கு இருப்பு ஏது? எனக்கு ஒலி ஒளி ஏது?**

**யாமே நீ. நீயே யாம் !!!**

**அனைத்தும் நலமே! அது சுகமே!! அது ஒன்றே!**

அப்பா குழந்தை இருவரையும் காணோம்.

[signature] **பாபா**



உ

ஓம்

ஸ்ரீ சத்குரு திருவடி துணை!

ஸ்ரீ ரகுபதி உந்தன் திருமலரடிகளை,
சிந்தித்திருப்பது எப்போ? எப்போ??

கோர ஹீர சம்சாரக் கடலை யாம்,
தாண்டி கரையேறுவது எப்போ? எப்போ??

காம, குரோத, லோப, மோஹத்தை வெறுத்து யாம்
கடைத்தேறுவதும் எப்போ? எப்போ??

எவர் என்ன சொன்னாலும் எதிர்த்து பேசாமலே
மௌனமாகிருப்பதும் எப்போ? எப்போ??
(ஸ்ரீ ரகுபதி).

ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நாராயணாய;
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நமோ!
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நாராயணாய;
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நமோ!
படியெலாம் கடந்த சுத்த பிரம்ம வஸ்துவாயிருந்தும்;

பஜனையால் மகிழ்ந்து தோன்றும் திவ்யமூர்த்தியே;

ஒருகணத்தில் எமது உளத்தை உருகவைத்த உமது நாமம்;

ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நமோ!
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நாராயணாய;
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நமோ!
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நாராயணாய;
ஓம் நமோ நாராயணாய; ஓம் நமோ நமோ!



உ

ஓம் அன்புக்குழந்தாய்!

அடக்கம்

அமரருள் உய்க்கும் என்றான் எம் வள்ளுவன். குற்றம் செய்தவர்களையும், நமக்கு தீங்கு செய்தவர்களையும் மன்னியுங்கள்; அவர்களுக்கு அபராதமாக ஓர் நன்மையைச் செய்யுங்கள் என்றான் எம் வள்ளுவன். அந்த அளவுக்கு அவர்களுக்கு நன்மை செய்ய இயலவில்லையானாலும், மறக்கப்பழகுங்கள்; விட்டுக் கொடுக்க பழகுங்கள். அதுவும் சற்று சிரம சாத்தியமானால் சிறிது நேரம் விலகி இருந்து அக்காரியம் மறந்தவுடன் நடந்ததை மறந்து விடுங்கள். இப்படி மறக்கவும் மன்னிக்கவும் பழகும் போது நாமரூபாவத்தின்

"குணநிசயங்கள்" அவசியம் மறையும்.

குணநிசயங்கள் பலனற்றுப் போகும் போது, நாமரூபங்கள் பயனற்றுப் போகும். நாமரூபம் பயனில் வாமல் போனால் அந்த நாமரூபங்களின் பதிவேடுகள் அழிந்து விடும். அதாவது அதைப்பற்றிய சிந்தனை வரவே வராது. பொதுவாக ஓர் இடத்தில் களவு, கொலை, தாங்க முடியாத வார்த்தைகள், தாங்கமுடியாத செயல்கள் நடக்கிறதென வைத்துக் கொள்ளுங்கள். "அதை வார்த்தையால்" விவகரித்தால் நாளை அது உயிர் பெறும். வாக்கை மௌனமாக்கி எண்ணத்தை அமைதிபடுத்தினால் காட்சிகள் வலுவிழந்து போகுமே! வாக்கு மௌனமும், எண்ண அமைதியும் எப்படி ஏற்படும் என்றால் அனைத்தும்

"திட்டமிட்டு நடைபெறும்" காட்சி



உ

அதற்கு இறைவனே சாட்சி நாம் ஒரு விளையாட்டுப்பதுமை என்றும் உணர்வைக் கொடுத்துவிட்டால் வார்த்தைகளும், செயல்களும் அவஸ்யம் பலனற்றும் போகும், பயனில்லாமலும் அழிந்துவிடும்! இதை கவனி:—
எம் பரமபிதாவின் வாக்யம் எப்படி அமைந்திருக்கிறது என்றால்;

1. "கேளுங்கள் கொடுக்கப்படும்"
2. "தட்டுங்கள் திறக்கப்படும்"
3. "தேடுங்கள் கிடைக்கும்" என்றார்.

கேளுங்கள் கொடுக்கப்படும்!

1. எதைக் கேட்கச்சொன்னார்? பொன்னையா? பெண்ணையா? மண்ணையா? இல்லையே!!

பொன்னும் மண்ணும் ஒன்றுதானே! மண்ணுக்கு பொன்னென மதிப்பு கொடுத்தது நீயா? அந்த மண்ணா? நீயே மண்ணை பொன்னென மதிப்பு கொடுத்தாய். இப்போது அந்த மதிப்பின் மயக்கம் உன்னை மிதிக்கிறது. அதாவது அது இல்லாமல் வாழ முடியாது என்ற நிலை பெற்றுவிட்டாய். மண்ணை என் காணி, உன் காணி எனக் கூறிக்கொண்டு சண்டை போடுகிறாய்! அந்த மண் முடிவில் உன்னையே சாப்பிட்டு ஏப்பம் விடுகிறது. விளக்கை பழமென மயங்கி விழுந்து அதிலேயே கருகி மரணம் அடையும் விட்டில் பூச்சி போன்று பெண்பதுமையாகிய மண் பொம்மையின் வசீகரம், கவர்ச்சி, அழகு, ரூபலாவண்யம், என மோஹித்து, உன் சக்தியையும் இழந்து "தன்னாலே தான் கெட்டால் அண்ணாவி (இறைவன்) என் செய்வான்" என்ற நிலையில் விழுந்து மண்ணோடு மண்ணாக ஆகி விடுகிறாயே!

"இந்த மூன்றுமே மண்தானே"!!



உ

இந்த மண்ணையா எமதய்யன் கேளுங்கள் எனச்சொன்னார். இதைத்தான் எம்பட்டினத்து அடிகளும் சொன்னார்.

மண்ணாசை பட்டேனே மண்
உண்டு போட்டதடா!!!
பொன்னாசை பெண்ணாசை
போகேனே என்குதே!!! மக்கள்
சுற்றத்தாசை மறக்கேனே
என்குதே!!! என்று அழுகின்றார்!

ஆகவே இந்த மண்ணையும், பொன்னையும், பெண்ணையுமா உங்களை கேட்கச்சொன்னார்???

ஆகவே எம் செல்வமே!

அது கேட்கும் வஸ்துவும் இல்லை! அது கொடுக்கும் வஸ்துவும் இல்லை! அது பார்க்கும் வஸ்துவும் இல்லை! அது கேட்கும் (அதாவது காதுகளால் கேட்கும்) ஒலியின் சப்தார்த்தமும் இல்லை!

ஆனால் !!!

உள்ளதை (உண்மையை) கேட்டால்
உள்ளம் (எண்ணம்) சுத்தமாகும்!!!
இல்லாததைக் (பொய்யை) கேட்டால்
உண்மை (ஸத்யம்) மறைக்கப்படும்!!

பொய்க்கு அத்தனை வலு உண்டா எனக் கேட்கலாம். சூரியனை மேகம் மறைக்கவில்லையா? அதுபோல் உண்மை மறைக்கப்படும். இதன் அர்த்தமாவது



உள் + அது = உள்ளது. அது அகப்பொருள்.
அக உணர்வே புற உறவை தூய்மையாக்கும்.
அதாவது அக உணர்வைப் பெருக்கினால்
புற உறவுகள் தாமே அகலும். அந்த அக
உணர்வு "அதுவே நாம் நாமே அது"
இங்கு!
கேட்பவன், கேட்கும் பொருள், கொடுப்பவன்
என மூன்று பிரிவுகள் உண்டாகும். இதன்
உள் கருத்தாவது
கலகம் பிறந்தால் நியாயம் கிடைக்கும்!
இதன் முடிவு!
மௌனம் கலக நாஸ்தி என்கிறேன்!
அதாவது!
கேட்க வேண்டும்:- இல்லாத ஒன்றுக்கு
இருப்புத் தன்மையை (இறை சொரூபத்தை) கொடு
த்து உண்மையை கேட்டு பொய்யை விட வேண்டும்!

அதாவது!

"இல்லாத பொருளுக்கும் இல்லாத இறைவனுக்கும்
இருப்புத் தன்மையை கொடுத்து ஓர் கலகத்தை
உண்டுபண்ணி, களங்கத்தை உண்டுபண்ணி
பின் கலங்கத்தை விசாரணையினால் சரி செய்து
சுத்தமாக்கி மௌனமாக இருந்தால்
மௌனம் கலக நாஸ்தியினால் மௌனானந்தமும்
அதன் முடிவு முன் பேரானந்தமும் பின் முடிவில்
பிரம்மானந்தமும் சித்திக்கும்!
ஆகவே!
கேளுங்கள் கொடுக்கப்படும் என்றால்
"வியவஹார ஸத்யத்திற்காக"
முள்ளை முள்ளால் எடுத்து பின் இருமுள்ளையும்
தூக்கி எறிவது போல விவகாரத்திற்காக,
வாக்கியார்த்தத்திற்காக, நம்முள் மறைந்த
உண்மையை கேட்க வேண்டும் என சொன்னேன்.



உ

ஆனல்!

உலக இனிமையின் பகட்டு, படோடோபம்,
பதவி, பட்டம், பணம் இவற்றின் மோகம்
நம்மை மறைக்கும். இது இல்லாத உலக இயல்பு.
கேட்பவன் :- இவன் ஜீவன். இவன் மேலே சொன்ன
இனிமையில் மயங்கி இருப்பதனல் இந்த மயக்கம்
தீர கேட்டுத்தான் ஆகவேண்டும்!
கேட்கும் பொருள் :- இது ஸத்யம். இது நித்ய
சொரூபம். இதைக் கேட்டால்தான் அந்த இனி
மைமறையும். நாம் அது வாக இருந்தாலும்
இன்று நாய் வேஷம் போட்டு விட்டோமே.
ஆகவே விவகாரத்திற்காக கேட்க (குறைக்க)
தான் வேண்டும் (வேறு கதி இல்லை)
கொடுப்பவன் :- இவன் நம்மால் நாம ரூபம்
தாங்கி இருக்கும் இறைவன். இவன் உண்மை
என்னவென்றல்

"விஷயத்தின் உலகை உண்டுபண்ணினன்"

"விபரத்தினல் இறைவனை உண்டுபண்ணினன்"

இந்த இரண்டின் "விவகாரத்தினல் தான்"

முன் "இரண்டையும் அழிக்க வேண்டும்"

அதாவது

இலந்தை முள் செடியில் நம் துணியைப் போட்டது
போன்று விஷய ஆசையினல் உலக வியாபாரத்தில்
மாட்டிக் கொண்டோம். அதன் (குரு) கிருபையினல்
விபரம் அறிந்து விஷயத்தை உண்டுபண்ணிய
இறைவனையும் உணர்ந்தோம்.

"நாம் அவனே என தெளிந்தோம்"

கேட்கும் பாவனையில் அவனிடமே கேட்டு
கொடுக்கும் பாவனையில் அவனிடமே கொடுத்து
இப்போது சும்மா சுகமாக இருக்கிறோம்
என உணர்வாயாக!

உ



## ௨. தட்டுங்கள் திறக்கப்படும்!

தட்டுங்கள் என்று வீட்டுக் கதவை தட்டச் சொல்லவில்லை.

"உள்ளத்தை தட்டு என்றார்"!!!

எம்பிரானின் உள்ளத்தை சிற்ப சித்திர வடிவில் நாம் காணும் போது இரும்பு முள் கம்பியினால் இருகப் பிணைக்கப்பட்டு குருதி கொட்டிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இதன் உண்மை என்னவென்றால் கொடூரமான குணங்கள் - கொடூரமான செயல்கள், மதுமாது சூதினால் விளையும் கண்மிஷய (விஷம்) ஆசைகளினால்

"எம் குமாரனே! உன் உள்ளத்தை (உண்மை) உள்ளதுநுழையவொட்டாமல் பின்னிப் பிணைந்திருக்கிறாயே",

இந்த கொடூர பிணைப்புகளை என்று அகற்றுவாய் போகிறாய்? யாம் என்று உன் உள்ளத்தில் குடிபுகுவது என நம்மைப் பார்த்துக் கேட்பது போல அமைந்திருக்கிறது! அங்கு அவர் தம் உள்ளத்தைக் காட்டவில்லை. நம் "உள்ளத்தை சுட்டிக்காட்டுகிறார்."

<u>அவர் சொல்வதாவது</u>

குழந்தைகளே!

உங்கள் உள்ளத்தில் யாம் வசிக்க நினைத்து வந்தால் <u>உங்கள் உள்ளம்</u> இருக்கப்பட்டு <u>முள் கம்பி வேலியால்</u> அதாவது காமம், குரோதம், வஞ்சினம், லோபம் மோகம் மதம், (நான் எனது என்ற குல கும்ப விகார விவகாரங்களான அகங்கார அபிமானத்தால் சந்தேகம் என்ற பெரும் அசை வடனும்,

சஞ்சலப்பேய் மூட்டைகள்" அடைத்து



உ

வைத்திருக்கிறீர்களோ, அவைகளை நீங்களாக
காலி செய்ய முடியாது ஆகவே நீங்கள்

"எம் இதயத்தை தட்டுங்கள்"

அது திறக்கப்படும் என்றார். அவருக்கு இதயம்
ஏதுனை சந்தேகமாக இருக்கிறதா?
அற்ப மானிடனே! உனக்கு இதயம்
ஏது? உடைமைகள் ஏது?? அதை
தாங்கும் எண்ணம் தான் ஏது??
அனைத்தும் அவர் உடைமையே! எண்ணம்,
சொல், செயல் அனைத்தும் அவரே! என
சர்வார்ப்பண நிலையில் சொல்லி, சொல்லி
கதறி, கதறி அழுவதல்லாது உனக்கு வேறு
தொழில் ஏது? இப்படி நீ அழுதால்
அவர் இதயமாகிய,

"உன் இதயம் தட்டப்படும்"

அங்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்
மலங்களும்; காமம், வெகுளி, மயக்கம்,
என்ற பாதக குணங்களும், நீ தட்டும் தட்டில்
(உருகி அழுவதில்) முள்வேலிக் கம்பிகள்
எல்லாம் சுக்குநூறாக தெறித்தோடிவிடும்!
அங்கு உன் இதயம் அவன் அமரும் ஆலய
மாகிவிடும். அவர் கருணையினால்

"அவர் இதயம் திறக்கப்படும்"!

"இங்கு அவரும், அங்கு நீயும்"
அமரும் (கலக்கும்) நிலை பெற்று விடுவாய்!
தட்டுவது என்பது கதறி அழ வேண்டும்!

"அழுதால் வினை மாயும்"

"உணர்ந்தால் மனம் மாயும்"

இரண்டும் அற்றால் பிறவிப்பிணி அறுபடும்!



உ

# ௩. தேடுங்கள் கிடைக்கும்!!!

குழந்தாய்!

எம்பிரான் மண் பொன் பெண்ணைத் தேடச் சொல்லவில்லை! பட்டம், பதவி, புகழைத் தேடச் சொல்லவில்லை! அழியும் எந்த பொருளையும் தேடச் சொல்லவில்லை! வேதம், சாஸ்திரம், புராண இதிகாசங்களாலும் புகழப்படும் தேவதெய்வங்களை தேடச் சொல்லவில்லை! அவர்களின் சிருஷ்டிகளான பதமுக்தியை தேடச் சொல்லவில்லை!

வேதசாஸ்திர புராண இதிகாசங்களால் புகழப்படும் இறைவனின் கிருபை பெற்று, அவன் அருளால் அவன் தாள் வணங்கி என்றபடி

"அவன் மாயா சிருஷ்டியை

"அவனிடமே விட்டுவிட்டு"

"அவன் (இறைவன்) உண்மை சொரூபத்துடனும்"

"அதன் (பரம்) உண்மை சொரூபத்துடனும்"

"நம் யதார்த்த சொரூபத்தை"

இணைந்து இரண்டற கலந்து,

"தாம் தாமாகும் தேட்டத்தை"

தேடவேண்டும். இந்த தேட்டமே அழியாத தேட்டமாகும். ஆகவே இங்கு தேடுங்கள் கிடைக்கும் என சொன்னது உபசார வசனமே அந்த அனுபவம் கிடைப்பதற்காக கிரா ரூபமாக சொல்லிய ஓர் உபகரணமாகும்.

உ



ஆனால்!!!

அது தேடும் வஸ்துவும் இல்லை! பொறி புலன்களுக்கு அகப்படும் வஸ்துவும் இல்லை!

"அதுவே நாம், நாமே அது" அப்படி இருந்தாலும் பொன்னை ஆபரணமாகக் காணும் ஆவரண மயக்கமும், அதை தேடி நாடி ஓடும் ஆசையால் வரும் விவகாரமும், அந்த விவகாரத்தில் தோன்றும் கோடானு கோடி எண்ணங்களும், அது கிடைக்கவில்லையே என துக்கம், அது கிடைத்துவிட்டால் அதைப் பாதுகாக்கவேண்டுமே என்ற பயம், அது இன்னொருவன் கைகளில் அகப்பட்டுக் கொண்டால் பொருந்த ஏமாற்றமும் ஏக்கமும்.

இதனால்

களங்கம், கலக்கம், கலகம்,

இவைகளினால்

"விட்சேப மயக்கமும்"

பின் இவை சம்பந்த மோஹத்தில் சிக்குண்டு, அந்த சொந்தத்தால் பந்தமும், பந்தத்தால் பாசமும், பாசத்தினால் புண்ணிய பாப பற்று வரவும், அதனால் ஜனன மரணமும் ஏற்பட்டு காலச் சக்கரத்தில் மாட்டிக் கொள்கிறோம்

இவை நீங்க!!!

"அந்த ஒன்றை (பரம்) தேடவேண்டும்"

"இந்த ஒன்றை (உலகை) விடவேண்டும்"

ஆனால்!

தேடுவதும் சிரமமே! விடுவதும் சிரமமே!!

இதை மஹான்கள் எப்படிச் சொல்வார்கள் என்றால்

விடுவதை விட்டால் படுவது/படும் என்றும்

தொடுவதை தொட்டால் நடுவன் (காலன்) நாடான்!!



உ

என்பார்கள். ஆனால் இக் கலியுகத்தில்
பொய்மை விடுவது சாத்தியமாகாது. இது
பொய்க்கே உரிய காலம். ஆகவே

"சர்வார்ப்பண நிலையில் எல்லாம்
நீயே என சரண்புகுந்தால்"
"மாயையின் தோற்றத்தை
அதை உண்டுபண்ணிய மாயை
யே கவனித்துக்கொள்ளும்."

அதாவது கற்பனை சூட்சும சொரூபமான இறைவ
னே கவனித்துக் கொள்வான். எப்படி என்றால்
நாமுள்ள உலகமும் அதன் பொருள்களும்
தூலமாகத் தோன்றினாலும் அது இயங்கும்
குணம் சூட்சுமமாக இருப்பதனாலும், நாம்
சர்வார்ப்பணம் செய்யும் இறைவனும்
சூட்சுமமாக இருப்பதனாலும்

"சூட்சுமத்தை சூட்சுமத்தால் தான்"

அழிக்க முடியும். இதை கவனி
மனமாகிய குணமே வினை! உடல் உலக
மாகிய தூலமே (இடம்) ஓர் கருவியே!!
அதாவது மனதைக் கொண்டு குணத்தை ஏற்று
அக் குணமாகிய வினையை இந்த அப்பாவி
உடலை வைத்து இயங்கப்பண்ணுகிறது
மாயை! இதைத் தான் இப்படி சொல்வார்கள்

"ஓர் ராஜ்யத்திற்குள்ளிருந்து
ராஜ்யத்தை ஆளுகின்றான் இறைவன்!"



உ

"அதன் சூட்சுமத்தை (தம் மெய் அறிவால்) உணர்ந்தவன் தான் தலைவன்" எனச் சொல்லி வைத்தார்கள். ஆகவே அந்த மெய்அறிவு நமக்குள்ளேயே மறைந்திருக்கிறது. அதைவிகாரமான கற்பனையான, புத்தி மறைத்திருக்கிறது. அந்தவிகார எண்ணத்தை விட்டு விவகாரமான புத்தியை கெடுத்து நம் "யதார்த்த அறிவு சொரூபத்தை தேடத்தான் வேண்டும்".

இதைத்தான் ஏசுபரமபிதா சொன்னார்.
1. கேளுங்கள் கொடுக்கப்படும் என்றும்,
2. தட்டுங்கள் திறக்கப்படும் என்றும்,
3. தேடுங்கள் கிடைக்கும் எனச் சொன்னார்.

எம் குழந்தாய்!

தப்பு என்பது தெரிந்து செய்வது!
தவறு என்பது மறந்து செய்வது!

தப்பு செய்தவன் திருந்தியே ஆகணும்!

தவறு செய்தவன் வருந்தியே ஆகணும்!!

அதாவது

தப்பு எனச் சொல்வது இதனால் இன்னது விளையும் என தெரிந்தே செய்வதாகும்!
தவறு எனச் சொல்வது கவனக்குறைவினால் நிகழும் ஓர் நிகழ்ச்சியாகும்!

ஆகவே!

தப்பிதமாகச் செய்யும் ஒருவன் ஓர் காரியம் செய்வானாயின் அதைஅவன் வேணும் என்றே அதன் விளைவுகளை தெரிந்தே செய்கிறான். அவன் தப்பிதத்தை இனி செய்யக் கூடாது. இங்கு இவன் முழுமையாக பாதிக்கப்படுகிறான்.

உ



அவன் திருந்த முயற்சி செய்வானாயின் பின் அந்த தப்பான காரியம் நடைபெறாது. இதற்கு பிறர் உதவி தேவை இல்லை.

"தன் முயற்சியே நமக்குதவி!!"

இங்கு ஈஸ்வரார்ப்பணமாக இவன் எக்காரியத்தைச் செய்ய முயலுவானாகில் அவன் காரியம் தப்பிதமாக வராது. அதனால் பிற ஜீவர்களும் பாதிக்கப்பட மாட்டார்கள். அவனும் தப்பிதத்திலிருந்தும் மீட்கப்படுவான்!

ஆனால்

தவறு செய்பவன் தன் கவனக்குறைவினால் செய்து தான் மாட்டிக்கொள்கிறான். ஆனால் இது பிறரைப் பாதிக்காது. தப்பு செய்தவனால் பிறர் பாதிக்கப்படுவர். தவறு செய்ததனால் தான் மட்டும் பாதிக்கப்படுகிறான். தவறு என்பது விபரம் தெரியாமல் செய்ததால் தான் முதலில் பாதிக்கப் படுவான். சில சமயம் பிறரையும் பாதிப்பவையச் செய்யலாம். அப்படி பிறரைபாதிப்பதனால் தாம் செய்யும் காரியத்தை அதை செய்யத் தெரிந்தவன் சகாயம் பெற்று செய்வானாயின் அந்த தவறு நடைபெறாது நிறுத்தப் படும்! ஆகவே இங்கு

"பிறர் உதவியும் நமக்குத் தேவை!!"

இங்கும்

இவன் எந்த காரியத்திலும் இறை நாம உணர்வுடன் ஈஸ்வரார்ப்பணமாக செய்வானாயின் அந்த பிறர் உதவி என சொல்லும் இடத்தில் இறைநாமம் உனக்கு உதவியாக இருக்கும்!

"தப்பு என்பதற்கு உதாரணம்"

"பொறாமை" = பொறுக்கயியலாமையாகும்.



உ

"தவறு என்பதற்கு உதாரணம்"

"சந்தேகம்":- ஒன்றை மற்றொன்றாக பார்ப்பது இதனை உணர்வது.

பொறுமை:- கர்வம் சினம்! காமம்! வஞ்சகம்! பொறாமை! குலம், பதவி, பணம், டம்பம், இவற்றின் அகங்காரமும், தெய்வத்தின் பெயரால் உண்டாகும் மதம் என்ற வெறி, குரோதம் என்ற இவ்வகைகளில் ஏற்படும் குறைநிசயங்களாகும்!

"சந்தேகம்":- எதைக் கண்டாலும், எதைக் கேட்டாலும், எதைக் கொடுத்தாலும், எதை வாங்கினாலும் என்ன நிகழ்ச்சிகள் காட்சிகள் நடந்தாலும் அங்கு அமைதி, சாந்தி, நிம்மதி, திருப்தி, ஆனந்தம் அடையாமல் இரண்டுபட்டு குற்றமாக உணர்வதாகும்! அதனால் இங்கு காங்கம், கலக்கம், அதனால் கலகம் அதனால் துக்கமும் பயமும் நீங்காது இவைகளை அனுசரித்து யாம் பரமபிதாவாக இருந்த சமயம் நடந்த நிகழ்ச்சியை இங்கு குறிப்பிடுகிறேன் உணர்வால் உணர்க!

நம் பரமபிதா கல்வாரிமலையில் அடிவாரத்தில் ஓர் பாறையில் மோனத்தில் அமர்ந்திருக்கிறார். அது சமயம் இவ்யூதர்கள் ஓர் விஷமாதினால் பாதிக்கப்பட்டு அவரால் தானே நாம் கெட்டுப் போகிறோம், அவரை அடித்துக் கொன்றுவிட்டால் நாம் அமைதி அடைவோம், எனக்கருதி அவரை கல்லால் அடித்துக் கொல்ல, ஆளுக்கு ஒரு பெரிய கல்லாக எடுத்துக் கொண்டு அவரை துரத்தி வருகிறார்கள்.

சற்று பொறுக்கவும்! இங்கு ஒன்றை கவனிக்கவும்!



உ

## தப்புக்கு அவர்கள் காரணம்!!
## தவறுக்கு அவள் காரணம்!!

அவர்கள்:- நாம் செய்வது தப்புதான் என உணர்கிறார்கள். தம்முடலும் கெட்டு உள்ளமும் கெட்டு <u>அழிகிறோம்</u> <u>என</u> <u>தெரிந்தே</u> <u>செய்கிறார்கள்</u> <u>அரிப்பெடுக்கும்</u> <u>படையை</u> <u>சொறிவது</u> போன்று அவர்கள் நிலை. இதனால் நம் காலே துண்டிக்கப்படுமே என உணர்வற்ற நிலை. அதுவும் <u>தப்பான</u> <u>ஆசையின்</u> காரணமாக <u>தம்மை</u> <u>திருத்த</u> அவர்கள் முயற்சி செய்யவில்லை. ஆனாலும்

அவர்கள் தவறை செய்ய முயல்கிறார்கள். அவளை கொல்ல எத்தனிக்கிறார்கள்!

<u>இங்கு அவள் நிலை!</u>

அவள்:- <u>அவள்</u> <u>ஜீவனத்திற்கு</u> வேறுவழி தெரியவில்லை (வழி இல்லை) நாம் எப்படி எதனால் பாதிக்கப்படுகிறோம் என்றும், பிறரின் பாதிப்பையும் உணர முடியாமலும்

"தவறு என்ற உணர்வால்" அவள் உந்தப்படுகிறாள். <u>அவளுக்கு</u> <u>வேறு கதியில்லை</u> <u>அவர்களுக்கு</u> <u>வேறு</u> <u>கதி உண்டு!</u>
(அவர்களுக்கு அவரவர் மனைவி இருக்கிறார்களே!)
<u>இந்நிலையில்</u>

அந்த அபலை மாது மரணத்திற்கு பயந்து தமக்கு அபயம் தர எவர் இருக்கிறார்கள் என அலைமோதி <u>மரண பயத்துடன்</u> கல்வாரி மலைச் சாரலுக்கே வந்துவிட்டாள். எம்பிதாவைக் கண்டு கொண்டாள்!

உ



சரேவென எம்பிதாவின் சரண கமலங்களை பற்றினாள். ஒரு கொம்பை ஓர் கொடி எப்படி சுற்றிப்பற்றிக் கொள்ளுமோ அப்படி எம் பிதாவின் பாத கமலங்களைப்பற்றி தம் கண்ணீரால் அவர் பாதங்களை கழுவி தம் பாதக மலங்களை நோக்கிக் கொண்டிருந்தாள்.

அவர்கள் எம்பிதாவைப் பார்த்துக் கேட்கிறார்கள்

ஓ தேவ தூதுவரான கிறிஸ்துவே! இவள் மஹாபாபி. இவளால் இளைஞர்களாகிய நாங்கள் கெட்டழிகின்றோம்! இவள் உயிருடன் இருந்தால் நாங்கள் அனைவரும் அழிந்து போவோம். ஆகவே நாங்கள் இவளை எங்கள் வசம் ஒப்படைத்துவிடுங்கள். இவளை நாங்கள் கல்லால் அடித்துக் கொல்லப்போகிறோம். இனி இவள் இப்பூமியில் இருக்கக் கூடாது. இவளுக்காக தாங்கள் பரிந்துரைக்க வேண்டாம். இவளுக்கு தாங்கள் அடைக்கலம் கொடுக்கக் கூடாது என வேகத்துடன் ஆர்ப்பரித்துக் கேட்டனர். எம்பரமபிதா அவர்களையும் இவளையும் சற்று கூர்ந்து நோக்கினார். புன்முறுவல் பூத்தார்; அவளின் தலையை தம் அபய கரத்தால் வருடிக் கொண்டே அமைதியாக கேட்கிறார்.

எமதன்புக் குமாரர்களே!

இவள் ஏதோ தகாத தவறு செய்தாள் என்றும், அவளைத் தண்டிக்கவேண்டுமென்றும் ஆளுக்கொரு கல் கரங்களில் தாங்கி நிற்கிறீர்கள்

"தப்பு செய்தவன் திருந்தியாகணும்!"

"தவறு செய்தவன் வருந்தியாகணும்!"



உ

"அப்புறம் நிலை கண்டு தண்டனை"
கொடுக்கணும். இதுவே தர்மம், இதுவே நீதி.
அவர் வருந்தி பாப மன்னிப்புக்காக தம்மையே
அர்ப்பணித்து உருகிப்போனாள்.

ஆனால் நீங்கள் உங்கள் பக்கம்
நீதி இருப்பதாக கருதி இவளை கொல்ல முற்
படுகிறீர்கள் யாவரும் உங்கள் பக்கமே
சேர்ந்து கொள்கிறோம் எனச் சொல்லி தாமும்
தம் கையில் ஓர் கல்லை எடுத்துக்கொண்டார்!
எம்பிரான் அன்பாக ஒரு வார்த்தை சொன்னார்.
அதாவது!

"உங்களில் எவனொருவன்"
"இந்த தவறை செய்
யாதிருக்கிறானோ"

அவன் முதலில் கல்
வீசட்டும், யாமும் கல்
வீசுகிறோம்; இவளுக்கு
தண்டனை அளிப்போம்!!!

என அமைதியாக கூறினார் எம்பிரான்!
அனைவரும் திகைத்தனர். அக்கூட்டத்தில்
ஒருவனாவது அந்த தவறு செய்யாதவனில்லை.
என உறுதியாகிவிட்டது. ஒருவன் முகத்தை
ஒருவன் பார்க்கிறான், ஒவ்வொருவனும் தம்
தலையை அசைத்த வண்ணம் "உம் கூம்"
கொட்டிக் கொண்டே தம் கைக் கல்லை
கீழே போட்டுவிட்டு தம் வழி ஏகினர்.

உ



எம்பிதா கீழே குனிந்து தம் திருவடியை
பற்றிய குழந்தையை நோக்குகிறார்.

"தம் தவறுக்கு வருந்தி கண்ணீ
ரால் பிதாவின் பாதங்கள்
கழுவி, தம் அடர்ந்து நீண்ட
கேசத்தால் துடைத்து,
அதனால் தம் பாவத்தைத்
துடைத்துக் கொண்டாள்."

அவளுடைய பிரதிக்ஞை!

எம்பரமபிதாவே!
இந்த பாவம் அறிந்தா
லும் பரவாயில்லை இனி இத்தவறை செய்யேன்
என உறுதி பிரமாணம் எடுத்துக்கொண்டாள்
அந்த கருணாகர இறைவன் கருணையினால்
அவள் பாவத்தை போக்க ஓர் ஆடவன்
அந்த க்ஷணமே வந்தான்.

"இது அவன் கருணை!"
"அவளும் தவறு செய்யவில்லை!!"
"அவர்களும் தப்பு செய்யவில்லை!!!"

இதில் ஓர் உண்மை என்னவென்றால்!
மஹான்கள் தம் திருவடியை அலம்பினால்
பக்தர்களோ, சிஷ்யர்களோ (அணுக்க தொண்டர்)
அவர் பாதங்களை தம் வஸ்திரத்தாலோ,
பிறிதொரு வஸ்திரத்தாலோ அவசியம்
துடைப்பார்கள். காரணம்
இதில் ஓர் சாஸ்திர சம்பிரதாயம் உண்டு.
அது அவர்களுக்கில்லை. சேவையின் நிமித்தம் செய்தார்கள்.



இதைமுற்காலங்களில் அனுசரித்தார்கள்
இவர்கள் (பக்தாள் சிஷ்யால்) அபிமானத்தால்
கொஞ்சம் கொஞ்சமாக மறந்தார்கள்
இவர்கள் மறந்தார்களா? அதுமறைத்துக் கொண்டதா? அது ரகஸ்யம்
அவர்கள் (குரு சத்குரு) பற்றற்ற
தன்மையினால் கொஞ்சம் கொஞ்சமாக
தாம் விலகிக் கொண்டார்கள்.
இதன் ரகஸ்யமாவது!

குரு :- தர்மத்தையும் ஸத்யத்தையும் போதிப்பவர்கள். தெய்வநிலையை சுட்டிக்காட்டி தெய்வநிலைக்கு தம் சிஷ்யாளை உயர்த்தி தெய்வ சாகித்யத்தை பெற ஓர் கருவியாக இருப்பவர்கள். இவர்கள் ஒழுக்க சீலர்களாகவும், உடல், உலக, உறவு, பொருள் பற்றற்றவர்களாகவும் இருப்பவர்கள். இவர்கள் தெய்வத்தோடு சம்பந்தம் கொண்டவர்கள். தாம் தெய்வமாகவும் இருக்கலாம், குருவாகவும் இருக்கலாம். ஆனால் இவர் தம் பக்தியினால் சத்குருவை உணரலாம். சத்குரு ஆகமுடியாது.

“இவர்களுக்கு தெய்வ மயக்கம்” உண்டு
“அது தாம் என தெரிந்தவர்கள்”
“அது தாம் என உணர்ந்தவரில்லை.”

தெய்வத்தினிடத்தில் மயக்கம் இருக்கும் தன்மையினால் ஓர் பயமும் உண்டு. ஆனாலும் பேரானந்தத்தில் திளைப்பவர்கள் அதாவது பேரானந்தத்தில் மூழ்கி இருப்பார்கள்
“விஷயானந்தம் இவர்களிடம்” இராது. இவர்கள் லௌகீகத்தை முழுமையாக விட்டவர்களே.



உ

மயக்கம் என்றால் நாமரூப சூட்சும
இறைவனிடத்தில் ரூப லாவண்யம்,
(அழகு) மஹிமைப்ரபாவம்,
(அபார ஆற்றல்) இவைகளில் மயக்கம்.

பயம் என்றால் ஆண்டான் அடிமை
என்றும் தாய் சேய் என்றும் பகவான்
பக்தன் என்று துவைத பாவனையில்
(இங்கு சேர்வது இல்லவே இல்லை) ஓர் பயம்.
ஆகவே இங்கு!

"அவன் நிலை பெறலாம்"
"அவன் ஆக முடியாது"
இப்படி ஓர் பேதம் இவர்கள் "அது நாம்"
என்று நிலை அவஸ்யம் பெற முடியும்.,
ஆனாலும் பெற மாட்டார்கள்.
காரணம்!

"பேரானந்தம் **தனியாக**"
அனுபவிக்கலாம்!
"பிரம்மானந்தம் **நாம் தாமாக**"
இருக்கலாம்!!
இவர்கள் எண்ணம் :— அங்கு ஒன்றும் இல்லை
இல்லாத இடத்தில் இல்லையென ஆகிவிட்டால்

**நம் சுவை ஏது** ???

அங்கு நாம், அவன் என இரண்டுபட்டாலும்
(சேர்வது இல்லை) சேர்வது சுவை என தனி
யாக இல்லை. காரணம்

"நீயே நாம்" ஆகாமல் ஒன்றை ஒன்று
காண்பதிலும், கேட்பதிலும், சூட்சும ஸ்பரிசத்திலும்,
நம் மனம் அவனிடம் இருப்ப



உ

"தனல் அவன் நம்மைச்
சுவைக்கிறான்" எனும் பொருள் பாடம்!
இங்கு காண்பான் காட்சி ஆகி விடுகிறது!
இங்கு காட்சி காண்பான் ஆகி விடுகிறது!!
ஏன் என்றால்!
உன் மலின மனம் நீ அவனிடம் அர்ப்பணம்
பண்ணிய தன்மையினால் அவனிடம் அது
சுத்த மனம் (சுத்தமாயை) ஆகிவிடுகிறது.
இங்கு!
நீ தேடிய புண்ணியம் திரும்பரிய நீ தகம்
அவனிடம் இருந்து வயித்துவிட்டு
(குறைந்து கவக்காமல்) மறு ஜன்மாவிற்கு
வரும்போது எங்கு இந்த மனதை விட்
டாயோ அங்கு மலின மனமாகவே ஆனால்
உயர்ந்த பிறவியாகவே அடைய முடியும்.
"பின் வரவு செலவு உன் சாமர்த்தியம்."

இதுவே குருதேவரின் வரலாறாகும்.
இனி ஸத்குருவின் வரலாறை கேளாய்!

ஸத்குரு :— மேலே கூறிய குருதேவரின்
அம்ஸம் அனைத்தும் பொருந்தியிருக்
கும். ஆனால் இவர்களுக்கு தெய்வ
மயக்கமும், பயமும் அவஸ்யம்
இராது. இவர்கள் நிலை கண்டு
தெய்வ நிலைக்கு இறங்கி வருவதன்றே
தெய்வநிலை என்பது சாட்சி நிலை.
இவர்கள் தெய்வநிலைக்கு வந்தாலும்
அத்தெய்வத்தின் மாயை அணுவ
ளவும் தொடுவதில்லை. சாட்சியாக
இருந்துகொண்டு உலகை நடத்தி
வரும் தெய்வத்திடமே ஒப்புக்
கொடுத்துவிட்டு
"அத்தெய்வத்தையும் அச்ஜீவனையும்"



உ

தான் சாட்சியாக உணர்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களை பற்றி தாம் விசாரித்து அறிவதில்லை.

உணர்வது:— புண்ணிய பாப செயற்கையின்றி எந்த விகாரமுமின்றி இச் ஜீவனும் இத்தெய்வமும் பாரபட்ச தோஷமின்றி தாங்கமில்லாமல் விபரமறியாச் சிறுவர்கள் போல விளையாடுகிறார்கள் என சாந்தியும் அமைதியும் கொண்டிருக்கும் நிலை.

அறிவது:— புண்ணிய பாப பேதம் தெரியும். விகார விவகாரத்தின் தன்மையினால் அவரவர் கணக்கு தீர்த்துக் கொள்கிறார்கள் என நிலைகண்டு சத்யம் போதிக்கும் நிலை இதுவும். தேவையில்லையென்றால் தாம் தெரிந்தாலும் தெய்வ நாமாவோடு ஒன்றி தாம் அமைதிகாக்கும் நிலை.

"இவர்கள் மாயையை தொடுவதில்லை."
"மாயையும் இவர்களை அண்டுவதில்லை."

ஜீவநிலைகளை கண்டு காமம், வெகுளி, மயக்கம் கொள்வதில்லை. இவர்களிடம் தெய்வ நாமஸ்மரணையும் உண்டு. அதனால் வேறு எந்த வினைகளோ வேறு குணதோஷங்களோ இவர்களைப் பற்றாது. இவர்கள் தேவ தெய்வங்களின் நிலையை ஒரு போதும் பொருந்தி இருக்க மாட்டார்கள். அவைகளுக்கு அதீதமாகவே இவர்கள் இருப்பார்கள். இவர்களிடம் எந்த வல்லப சக்திகளும் மகிமைப் பிரபாவங்களும் தோன்றுவதில்லை. இவர்கள் சிரிப்பினிலேயே அனைத்தையும் மறைத்து தானும் அதனுள் மறைந்திருப்பார்கள். ஆகவே இவர்களை கண்டு கொள்வது மிக மிக மிக கடினம். இவர்கள் நிலையை சொல்லப் போவது என்பதே

உ



இவன் பக்தனும் அல்ல, சித்தனும் அல்ல,
முக்தனும் அல்ல, மஹான்களும் அல்ல,
தபஸ்விகளும் அல்ல, பிரம்மரிஷி, ராஜரிஷி
களும் அல்ல, யோகியும் அல்ல, வல்லமை
உள்ள எந்தசக்திகளும் அல்ல, பக்த
கர்த்தாக்களும் அல்ல
ஆனால்???

அனைத்திலும் நிறைந்து அவை
தம்முள் மறைந்து ஒன்றும்
இல்லையென்பதான காலாதீத
"அதுவே நாம்"
"அதுவே ஸாது"
அதுவே வைத்தியம்.

குழந்தாய்!
மேலே கூறிய இரண்டு நிலைகளில்
கூறிய குருதேவரும், சத்குருதேவரும் ஆக
இவர்களை மஹான்கள் என்றே அழைக்கலாம்...
"இவர்கள் அனைத்தையும் விட்டமையால்"
இவர்கள் பாதங்களும் மற்றும் அனைவரின் பாத
ங்களும் மண்ணையும் தண்ணீரும் சேர்ந்தே
அமையும். மண்ணும் தண்ணீரும் சேர்ந்தாலே
மண்மயவாஸனை அவஸ்யம் பற்றும்.
ஆகவே இந்த மஹான்கள் நடக்கும்போது
"மண்வொட்டாமல் பாதுகை
யை விடாமல் அணிகிறார்கள்."
"ஜலம்பட்டால் உடனே அதை
துடைக்க வேண்டும்."

உ



அவரே அதை அடைக்க வேண்டும் அல்லது
சிஷ்யர்களுக்காக சேவையின் நிமித்தமும்
திருவடியை அடைக்கக் கொடுக்கலாம்
இந்நிலையிலே தான்
"எம் பரமபிதாவின் திரு
மலரடிகளை அந்த அமலி
வெண்பாவை தம் கண்ணீரால்
அலம்பி தம் கேசத்தால்
துடைத்து தம் பாதக
மலங்களை போக்கிக் கொண்
டாள்" என மஹான்கள் சொல்லக் கேள்வி

இப்போது அப்படிப்பட்ட மஹான்களையும்
காணோம்! உத்தம சிஷ்யர்களையும்
காணோம்! அந்த திருவடி சேவையையும்
காணோம்! கலி தோஷம் அந்த அளவுக்கு
அனைவரையும் கொண்டு போய் விட்டது
போலும்? இந்த கலிபுருஷனும் உடல் உலக
பொருள் பற்று அனுபவமாயினும் இருந்
தால் அவர்களை விடுவதில்லை. நான் செய்கி
றேன் என்றல்கூடியும் என்று இல்லாததை
உடைமையாக்கி அந்த மயக்கத்திலே என்
னுடையது என கருதும் அபாக்யவான்
களையும் இந்த கலிபுருஷன் விடுவதில்லை.
மஹான்களை தம் ஊகத்தால் எடைபோட்டு
சற்று அலக்ஷியப்படுத்திய
வர்களையும் இந்த கலிபுருஷன்
விடுவதில்லை! பேத உணர்வு எங்கெங்கு
தோன்றுகிறதோ அங்கங்கெல்லாம்
கலி தோஷ விளையாட்டு உண்டு!

உ



குழந்தாய்!

இந்த துணை தோஷங்களை விடமுடியாமலும், உடைமைகளை விடமுடியாமலும் இருப்பவர்களுக்கு எம் பரமபிதாவின் வாக்யம் அறிவுறுத்துகிறது.

"வருத்தப்பட்டு பாரம் (வினைகளை) சுமப்பவர்களே நீங்கள் அனைவரும் எம்மிடத்தில் வாருங்கள். யாம் உங்களுக்கு இளைப்பாறுதல் (அபயம்) தருகிறேம் என்றார்"!!!

எம் அன்புச் செல்வமே!

ஓர் சமயம் எம் பரமபிதா கல்வாரிமலையின் நின்றுகொண்டு ஓர் அன்புத்தாய் தம் குழந்தைகளை பரிவுடன் கூப்பிடுவது போன்று, தம் இருகரங்களையும் அகல விரித்துக் கொண்டு, மேலே சொல்லிய வசனத்தை கூறிக்கொண்டு நிற்கிறார். அவர் கைகளில் எந்த பொருளையும் வைத்திருக்கவில்லை. நம் தெய்வங்கள் போன்று எந்த ஆயுதங்களையும் தாங்கவில்லை. வெறுமனே பராரியாய் கனிந்த உள்ளத்துடன் குற்றம் குறைகள், வேற்றுமைகள் பாராவண்ணம் அரவணைப்புடன் நிற்கிறார்.

இதை கீழே இருக்கும் ஜீவர்கள் அவர் அன்புக்குரலை கேட்டு அண்ணாந்து பார்க்கிறார்கள். எம் பிதாவையும் காண்கிறார்கள்



உ

சிலர் அக்குரலைக் கேட்டு நம் பிதா நம்மை கூப்பிடுகிறார். இங்கு நம் சிரமங்களை விட்டுவிட்டு அவரிடம் சென்று சற்று இளைப்பாறுவோம் எனக் கருதி புறப்படுகிறார்கள். இதில் விசேஷம் என்னவென்றால் ஒவ்வொருவரும் ஓர் மூட்டையை தம் தலை மேல்வைத்து சுமந்து கொண்டிருக்கிறார்கள்

"அது அவரவர் பிராரப்த புண்ணியபாப வினை மூட்டையாகும்."

அவைகளை சுமந்த வண்ணம் மலை மீது ஏறுகிறார்கள். அவர்கள் செல்லும் பாதை அடியில் அகலமாக இருக்கிறது. ஆனாலும் இருபுறமும் சுவர் உண்டு. அந்த சுவர்

"அவரவர் ஒழுக்கம் கட்டுப்பாட்டு விதிமுறை"

அதில் தாண்டவும் முடியாது. விலகி வேறு வழியில் செல்லவும் முடியாது. அதில் ஒரு பாதைமட்டும் கர்த்தரை நோக்கிச் செல்கிறது அது சன்மார்க்கமாகும். அந்தபாதையிலும் இருபுறமும் உயர்ந்த சுவர் இருக்கிறது. அந்தபாதையானது அடிவாரத்தில் சற்று அகலமாக இருந்து மேலே போகப்போக குறுகி குறுகி கர்த்தரிடம் செல்லும் போது ஒவ்வொருவராகத்தான் செல்லமுடியும். சற்று தூரத்திலேயே சுவரின் நெருக்கமானது அதிகமாக குறுகிய தன்மையினால் ஓர் மனிதன் மட்டும் செல்லலாம்.



உ

நம் மூட்டையை கொண்டு செல்ல இயலாது. ஒவ்வொருவரும் அவரிடம் செல்லும் போது நம் மூட்டையை கொண்டு செல்ல முடியவில்லையே என நினைக்கின்றோம்

"இத்தனை காலமும் நாம் கஷ்டப்பட்டு தேடிய பொருளை (புண்ணிய பாவங்களை) எப்படி விடுவது?"

எனத் திகைத்து எம்பிரானை நோக்குகிறார்கள் இதை போட்டு விட்டு அவரிடம் போனால் அவரிடம் ஏதேனும் வாங்கிக் கொள்ளலாமா என நோக்கினால்

"அவரிடம் (அதனிடம்) ஒன்றுமே இல்லை"

இருப்பதையும் விட்டு விட்டால் அவரிடம் நமக்கு கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே!! என திகைக்கிறார்கள்.

"காத்து இருந்தவன் பெண்டாட்டியை நேத்து வந்தவன் கொண்டது போல்"

நாம் நம் மூட்டையை இவ்வளவு காலமும் பாடுபட்டு தேடியதை இங்கே போட்டுவிட்டு அவரிடம் போனால் அடுத்தவன் நம் மூட்டையை கொண்டு போய் விடுவானோ என சந்தேகம், கலக்கம், பயம் உண்டாகிறது.

ஏ கெடு கெட்ட மானிடனே!

நீ எதைக் கொண்டு வந்தாய்? இங்கு அதை தொலைத்து விட்டாய்? நீ பிறக்கும் போது உன் கைகளை மூடிக் கொண்டு,



உ

அதை பார்க்கணும், இதை பார்க்கணும்,
அதை தேடணும், இதை தேடணும்,
அதை புசிக்கணும், இதை புசிக்கணும்,
அதை அனுபவிக்கணும், இதை அனுபவிக்கணும்

என கோடானு கோடி ஆசைகளுடன் பிறக்கிறோம்.
ஆனால்!

இறக்கும் போது பரிதாபமாக
ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை!! ஒன்றுமில்லை!!!
என கைவிரல்களை விரித்தவண்ணம்
இறந்து போகிறோமே! இது உனக்கு கேவலமாக தோன்றவில்லை.

இதைத்தான் எம்பட்டினத்தடிகள் தம்
நெஞ்சறிவிளக்கத்தில் சொன்னார்

"பிறக்கும்போது கொடுவந்ததில்லை
பிறந்து மண்மேல் இறக்கும்போதும்
கொடுபோவதில்லை - இடை
நடுவில் குறுகுமிழி செல்வம்
சிவன் தந்ததென்று கொடுக்
கறியாதிருக்கும் இக்
குலமாந்தர்க்கு என்சொல்
வேன் கச்சியேகம்பனே" என்றார்.



உ

உணர்ந்த பக்தியினாலும் உணர்ந்த ஞானத்தினாலும்
பயிற்சியினாலும் சாதனையாலும்

"இவர்களைப் போல ஏதேனும்
ஓர் பலனை விரும்புகிறார்கள்"!!

அல்லது

"ஏதேனும் ஓர் சுகத்தைத் தேடி
நாடுகின்றனர்"!!!

சுக சொரூபமாகவே ஆனந்த சொரூபமாகவே
நீ இருக்க வேறு சுகத்தை தேடுவானேன்?
வேறு ஆனந்தத்தை நீ நாடுவானேன்??
விட்டால் சுகம் தானே அது ஆனந்தம் தானே!
தொட்டால் துக்கம், வலி, பயம் தானே!!

ஆகவே இங்கு விடுவதற்கும் ஒன்றுமில்லை
இங்கு தொடுவதற்கும் ஒன்றுமில்லையே??
உண்மைப் பிரேமையை வைத்துக் கொண்டு
ஏன் இப்படி அல்லல்பட வேண்டும்!

ஆகவே!!

"பிரேமையை உண்டு பண்ணிக்கொள்"

அந்தப் பிரேமையில் உன் பிரமைகளை விட்டுவிடு.
பிரமை:– இது மனப் பிராந்தி மயக்கம். இல்
லாததை உண்மை என நம்புவது. தேவையற்ற கற்பனை
களை வளர்ப்பது. சர்வ சதாவும் உடல் உலகத்தின்
சந்தேகம், துக்கம், பயம் இவைகளையே எண்ணி
எண்ணி மரண பயத்தை ஏற்படுத்திக் கொள்வது.
பிரேமை:– இது நாமரூபமற்ற ஓர் இறைவன்
மீது வைக்கும் பற்று. சகல கர்மாக்களையும் நிர்
மூலமாக விடுவதற்கு ஓர் இறைவனின் பிம்ப
ரூபம். இறைவனை எண்ணி எண்ணி உணர்ந்து



உ

உணர்ந்து நம் வினைகளை அவனிடம் விடுவதற்கு ஏற்படும் ஓர் சாதனைக் கூடம். வினை முடியும்பரியந்தம் நமக்கு அன்னியமாகத் தோன்றுபவன் வினை முடிந்தால் அவனே நாமாகத் தோன்றும் தற்காலிக சாதனை சொரூபம். இதில் இறைவனும் நாமும் அந்த ஒன்றில் முடிவுற்றால் அங்கே விரோதமையும் முடிவுபெறும்!

எம்பிதாவின் கதை முடிவின்படி எவரும் தம் மூட்டையை போடவும் முயலவில்லை என்பதை விட முடியவில்லை. அப்படியே தம் மூட்டைகளுடன் கீழே இறங்கிவிடுகின்றனர். அந்த மூட்டையின் வியாபாரம் தொடர்ந்து நடைபெறுகிறது. ஊர் ஊராகச் சென்று பற்பல சட்டைகளை (ஜன்மங்களை) எடுத்து எடுத்து வியாபாரம் செய்து கொண்டு தான் இருக்கிறோம் நம் வியாபாரத்திலும் சலிப்பு ஏற்படவில்லை! நாம் போடும் சட்டையிலும் சலிப்பு ஏற்படவில்லை!!



உ

ஓம் ஞானம்சமழலைகளே!

கர்த்தரின் வாசகம் ஒன்று

"யாமே சத்யமும், வழியும், ஜீவனுமாக இருக்கிறோம்!" இதை சற்று உண்மை உணர்வுடன் உரை வேண்டும்!

1. சத்யம் :- இதற்கு விளக்கம் அதிகம் தேவையில்லை. சத் என்றால் இருக்கிறது ஆக உண்மை உண்மை உண்மையம் என்றால் குணதோஷங்கள், எந்த யாகவே இருக்கிறது அதற்கு குறைவு, வேற்றுமையும் இல்லை. அது பரிபூரணமே எத்தனையோ அண்டத்தார் எடுத்தெடுத்து உண்டாலும் அத்தனை பேருக்கும் "ஒன்றன் பூரணத்திலிருந்து பூரணத்தை தறிகவேன் பூரணமே என்றும் அந்த சத் எடுத்தாலும் பூரணமே மிஞ்சி இருக்கிறது என்றும் க்கு பரிபூரணத்துவம் என கூறி முடிக்கிறோம்!

2. வழியும் :- சென்னையென்ற ஓர் ஊருக்கு கோடானுகோடி மார்க்கங்கள் உண்டு, கால்நடை, சைக்கிள், ரிக்ஷா, கார், பஸ், ஆட்டோ, விமானம், கப்பல் என பல வாகனங்களில் செல்லலாம்.

ஆனால் ஒன்றை மட்டும் கவனிக்கவும்!

சென்னையை சுற்றி ரிங் ரோடு (பைபாஸ்) இருக்கிறது மற்றும் மார்கங்கள் கோடானு கோடி இருந்தாலும் அனைத்தும் சென்னைக் குள் பிரவேசிக்காமல் ரிங் ரோடு வரையிலும் வந்து

"அங்கே ஒன்றும் இல்லை"

என தம்மையே கற்பனையிறல் உணர்ந்து வேறுமார்க்கமாகச் சென்று வேறு கிராமங்களுக்கும் கற்பனையால் பெரிதான பெரிய பெரிய நகரங்களுக்கும் (நரகங்களுக்கும்) சென்றுவிடுகின்றனர் அத்வைதமார்க்கம் (வழி) ஒன்றே சென்னைக்குள் செல்லும் வேறுஅனைத்துகங்களும் மார்க்கங் (வழி) களும் சென்னைக்குள் செல்வாது இது உறுதி!

3. ஜீவனுமாக:— பரமாக இருந்து கொண்டோ தெய்வமாக இருந்து கொண்டோ பந்தப்பட்ட ஜீவர்களுக்கு மேலே சொன்ன வழி காட்டமுடியாது. தாமும் ஜீவனோடு ஜீவனாக இருந்து "வழிகாட்டுதல்" மூலமாகதான் வழிகாட்ட வேண்டும். அதாவது மனிதனாக (ஜீவனாக) பிறந்த ஓர் குருதான் மனிதனிலிருந்து மாறுபட்டு நடந்து தம் அனுபவத்தை அவர்களுக்கும் கொடுத்து தம் வழியில் நடக்கச் செய்து "பரலோக சாம்ராஜ்யத்திற்கு" அதாவது பரவெளிப் பிரதேசத்திற்கு அதாவது பிறவாநிலையாகிய கைவல்யமாகிய விதேகமுக்திக்கு இட்டுச் செல்கிறார். இதுவே அவர் சொன்ன வாசகம் மற்றவர்கள் அனுபவமும் அவர்கள் வாசகமும் எப்படி இருப்பினும் காலாதீத ஒன்றென்ற நிலைக்குச் செல்லும் நாம் இதை இப்படிதான் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால் கர்த்தரை சற்குருவாக பாவனை செய்து அவரே பரத்திலிருந்து நமக்காக இறங்கி நம் போல் வேஷமிட்டு தெரிந்த மார்க்கம் வழியாக கூட்டிச்செல்கிறார்!



உ

4.

கேள்வி :- ஐயா தாங்கள் எந்த ஊர்?

பதில் :- அவஸ்யம் தெரிந்து கொள்ள வேண்டுமா?

கேள்வி :- அப்படி ஒன்றுமில்லை இந்தப்பக்கமா வருஷக் கணக்கில் பார்க்கிறேன். யாரிடமும் பேசுவதில்லை யார் கேட்டாலும் ஏதாவது ஒர் பதில் ஒரே வார்த்தையில் சொல்லி நழுவி விடுகிறீர்கள்! நானும் இப்படி அடிக்கடி உங்களை சந்தித்திருக்கிறேன். நான் நமஸ்காரம் செய்தால் நாராயண என சொல்லி விட்டு அடுத்த பதிலுக்குக்கூட காத்திராமல் சென்றுவிடுகிறீர்கள். உங்கள் அடக்கத்தை பார்க்கும் போது என் பிதாவின் ஞாபகம் வரும். உங்கள் சாயல் நடை பாவனை எல்லாம் நான் பையனில் வாசித்த வேத ஆகமத்தை ஒத்திருக்கிறது. ஆனால் உடையில் தான் சற்று மாற்றம். ஆனால் என்னை அறியாமலே ஒர் ஈர்ப்பு என்கர்த்தரைக் காண்கின்ற உணர்வு வரும். என் கண்களில் கண்ணீர் ததும்பும் --'-- (இது இடைமறித்தது)

பதில் :- என்ன ஐயா! நீங்கள் பாட்டுக்கு பேசிக் கொண்டே போகிறீர்கள் சற்று இதன் வார்த்தையும் கேளுங்கள். இது ஒர் ஜடம், ஒன்றுக்கும் ஆகாதது. ஒர் பைத்தியம் மாதிரி, இதன் நிலைமைய சற்று கவனித்து பின் பேசுங்கள்.

கேள்வி :- ஐயா! எங்கள் பிதா தயர் செய்த புண்ணியம் தாங்கள் இங்கு நின்றது. கொஞ்சம் அவகாசம் வேண்டும் முதலில் என்னை மன்னியுங்கள் உங்களை நிற்க வைத்ததற்கு எனக்கு உங்கள் மேலாக சில விளக்கம் வேண்டியிருக்கிறது

பதில் :- ஓஹோ உங்கள் பிதா தயர் புண்ணியம் தானா? தாங்கள் எந்த புண்ணியமும் பண்ணவில்லையா?

கேள்வி :- அது எப்படி ஐயா நான் புண்ணியம் பண்ணவில்லை என்று சொல்ல முடியும்? அவர்கள் புண்ணியம் செய்தவர்கள் என்றால் நான் அவர்களை விட அதிகம் புண்ணியம் பண்ணினால் தானே நான் அவர்கள் சந்ததியில் பிறக்க முடியும்! ஒரு பாவி அப்படி புண்ணியம் செய்தவர்களிடம் பிறக்க முடியாதே! பிறக்கவும் கூடாது!

பதில் :- என்ன ஐயா! உங்கள் விளக்கம் புதிதாக இருக்கிறது! அப்படி யாரும் பாவி வீட்டில் புண்ணியவானும், புண்ணியவான் வீட்டில் பாவியும் பிறக்க முடியாது என்றும் பிறக்கக் கூடாது என்றும் இப்படி அடித்துச் சொல்கிறீர்களே நீங்கள் உண்மையில் இருஸ்துவரா அல்லது இந்துவாக இருந்து கிருஸ்துவராக மாறினீர்களா?

கேள்வி :- எப்படி புரிந்து கொண்டீர்கள் நான் ஆரம்ப இந்து வென்றும் பாதியில் கிருஷ்தவன் ஆனவன் என்றும் எப்படி தெரிந்தீர்?

பதில் :- ஐயா! அகத்தின் அழகு முகத்தில் என்று பெரியவர்கள் சொல்வார்கள் அது வாக்கின் மேலாக தம் அகத்தை காட்டிவிடும் பிறவி ரகஸ்யம் இந்துவாக இருந்து வேதம் சாஸ்திரம் கற்றவர்களுக்குத்தான் தெரியும் மற்ற மதத்தவர்களுக்கு தெரியாது.



௨

கேள்வி:— இந்த புண்ணிய பாவத்தின் செயல்தானே மேலும் மேலும் பிறவியையும் மரணத்தையும் கொடுக்கிறது. இந்த புண்ணிய பாவங்களை செய்யாமல் இருக்க முடியுமா?

பதில்:— புண்ணிய பாவங்களை செய்யாமல் இருக்க முடியாது ஆனால் புண்ணிய பாவங்களை செயல் இழக்கச் செய்யலாம்.

கேள்வி:— அது எப்படி?

பதில்:— நாமரூபமுள்ள ஓர் இறைவனிடம் சர்வார்ப்பணமாக விட்டுவிட்டால் அது செயலிழந்து போய்விடும்.

கேள்வி:— அது எந்த இறைவனிடம் விடமுடியும்?

பதில்:— (சிரித்துக்கொண்டே) இறைவன் ஒருவன்தானே இருவர் இல்லையே நீங்கள் வணங்கும் கர்த்தரிடம் விடலாம்; அல்லாவிடம் விடலாம்; புத்தரிடம் விடலாம்; இந்து தெய்வங்களாயினும் எந்த தெய்வத்திடம் யாராவது ஒருவரிடம் விடலாம் அப்படி விட்டால் புண்ணிய பாபம் இல்லாதொழியும் பிறப்பும் இறப்பும் இல்லாது போகும். ஆமாம் நீங்கள் இந்து மதத்திலிருந்து கிறிஸ்து மதத்திற்கு ஏன் சென்றீர்கள்? அதற்கு உண்மையான காரணம் சொல்லமுடியுமா?

கேள்வி:— சொல்வதற்கென்ன கர்த்தரின் இருப்பையிருவ் படிக்கப் பணம் புஸ்தகம், தொழில், சில வசதிகள் கிடைத்தது. மேலும் நானும் ராமாயணம், பாரதம் மற்றும் புராணக் கதைகளெல்லாம் நிறைய கேட்டிருக்கிறேன் படித்திருக்கிறேன். நம் இந்து மதத்தில்தான் ஆயிரக்கணக்காக சாமிகள் இருக்கிறதே எந்த சாமியை நாம் வணங்குவது தெரியவில்லை மேலும் சாமிகளின் உற்பத்தி அவர்கள் திருமணம் எனப்பார்த்தால் சொல்லமுடியாத அளவுக்கு கேவலமாக இருக்கிறது!

பதில்:— ஏன் கிருஸ்தவர்களுக்கு ஒரே தெய்வம் தானா? வேறு தெய்வம் இல்லையா என்ன? அங்கும் தான் யோசேப், சேசையப்பர், யோவான், மோஸஸ், கன்னி மரியாள். மரியன்னை ஏன் இங்கும் தான் ஆயிரக்கணக்கில் இருக்கிறதே ஏன் ஒருவன் சிலையை வணங்குகிறான் ஒருவன் சிலையை பாபச் சின்னம் என்கிறான் ஐயா! நமக்கு இந்த மதத் துவேஷமும், இனத் துவேஷமும் வேண்டாம் அவைதான் வீட்டையும் நாட்டையும் பாதிப்படுத்திக் கொண்டிருக்கிறதே, ஆகவே இந்த துவேஷமான எண்ணங்களை எண்ணுவதோ அதுபற்றி பேசுவதோ மஹா பாபம் சம்பவிக்கும் அதை விடுங்கள் நீங்கள் உடல் குடும்ப வசதிக்காக மதம் மாறினீர்களா? உள்ள நலனுக்காக மதம் மாறினீர்களா?

கேள்வி:— இதை கவனித்தால் புறச் செயலாகிய உடல் குடும்ப வசதி கௌரவத்திற்காகத் தான் மாறினேன் என சொல்லமுடியும். இங்கும் மன அமைதியில்லை அங்கும் மன அமைதியில்லை அமைதியைத் தான் தேடுகிறேன் அது கிடைக்கவில்லை.



பதில்:— ஐயா அமைதி, நிம்மதி, திருப்தி, சாந்தி உங்களிடமே இருக்க அதை வெளி உலகிலும் குடும்பத்திலும் தேடுகிறீர்களே அது எப்படி கிடைக்கும்? உங்களை ஒன்று கேட்கிறது கோபியாதீர்கள் நீங்கள் கிறிஸ்தவன் தானே?

கேள்வி:— ஆமாம் இந்தியாவில் நான் கிறிஸ்தவன் தான்.

பதில்:— அதை சற்று பிரித்து அதன் விளக்கத்தை பாருங்களேன் அப்போது புரியும் நீங்கள் யார் என்று!

கேள்வி:— புரிய வில்லையே கிறிஸ்தவன் என்ற வார்த்தையை பிரிக்கச் சொல்கிறீர்களா? அல்லது கிறிஸ்துவைப் பிரிக்கச் சொல்கிறீர்களா?

பதில்:— கிறிஸ்து என்றால் அவர் தனிப்பட்டவர். அவரைப் பிரிக்க எவராலும் இயலாது உங்கள் இனத்தை (ஜாதியை) பிரிக்கச் சொன்னது. கிறிஸ்தவன் என்றால் ஓர் இனம். முகம்மதியன் என்றால் ஓர் இனம், இந்து என்றால் இனமும் இல்லை தனிமனிதனும் இல்லை இந்து என்றால் ஓர்மை எனப் பொருள்.

கேள்வி:— ஐயா சற்று பொறுங்கள் இந்து என்றால் ஓர்மை என உங்களுக்கு எவர் சொன்னது அல்லது இது உங்கள் கற்பனையா?

பதில்:— ஐயா! இந்த பாரத தேசமே உலகின் முதல் சிருஷ்டி மற்றும் கண்டங்களும் தேசங்களும் பின் வந்தவை. பரதன் என்ற ஒரே பேர்கொண்ட மூவர் (ஜடபரதன், ராமன் தம்பி பரதன், சகுந்தலையின் மகன் பரதன்) என புகழ் பெற்றவர்கள் இந்த பூமியை ஆண்ட தன்மை சிறப்பித்து அவர்கள் பெயரால் பரதகண்டம் என்றும் பின் அனுபவத்தியில் பாரத தேசம் எனவும் வழங்கலாயிற்று. ஆகவே முந்திய மூன்று யுகங்களிலும் தோன்றிய மஹான்கள் இந்து என மூன்றெழுத்தைத் தான் இப்பூமிக்கு வைத்தார்கள். அது இந்த கலியுகத்தில் இந்தியா என மருவி வழங்கி வந்தது. மஹான்களின் அனுபவபூர்வமான வாசகம் இந்து என்றால் ஓர்மை என்ற மூன்றெழுத்தே யாகும்!

கேள்வி:— ஐயா இந்த விளக்கம் இதற்கு முன் இப்படி கேட்டதேயில்லை இதை இன்று தான் உங்கள் வாய் மூலமாக கேட்கிறேன். இதன் விளக்கம் வேறு எதிலும் படித்தீர்களா? இது கேள்விப்படாத ஒன்றாக இருக்கிறதே! அபூர்வ விளக்கம்

பதில்:— இது மஹான்களின் அனுபவ வாசக (வசக) மாக இருந்ததால் இதன் விளக்கம் எந்த நூலிலும் இல்லை தான். அவர்களின் தொடர்பு கொண்டால் இதன் ரகஸ்யம் புரியும். இது கலியுகம் மேலும் பேச நேரம் இல்லை நேரமாகிறது அங்கே இதன் சூத்திரத்தை தேடுவார்கள்! (அவர் இடைமறித்தார் கட்டி அணைத்துக்கொண்டு)



2

கேள்வி;— ஐயா! ஐயா!! சற்று பொறுங்கள் எப்படியோ இன்று
தான் தாங்களுடன் பேச வாய்ப்பு கிடைத்தது அதையும் அரை
குறையில் விடுவதா? நட்டாற்றில் விடுவது போல் விட்டுச்
சென்றால் என் கதி என்னவது? தாங்கள் கிறிஸ்தவன் என்றும்
முகமதியன் என்றும் சொல்லும் வார்த்தைகளுக்கு விளக்கம்
அளிக்காமல் செல்கிறீர்களா? அது எப்படி முடியும் அடியே
னும் தாங்கள் குழந்தை தானே! அந்த குழந்தைகள் தேடி
னால் இந்தக் குழந்தையை நடுத்தெருவில் விட்டுவிடுவது தான
முறை? ஒரு வருஷமாக அடிக்கொருதரம் தாங்களை பார்க்கிறேன்
நான் காணும் போதெல்லாம் என் கர்த்தராகவும் காணவும் முடிகி
றது ஓர் அவதாரமாககவும் காணமுடிகிறது ----(இடைமறித்து)

பதில்:— சற்று பொறும், பொறும்! நீர் காணும் காட்சி உம் மனதின்
தெய்வீக பிரேமையாகும். இதை ஒன்றை மட்டும் வளர்த்துக்
கொண்டே வந்தால் பக்தி முதிர்ச்சியாகி ஞானத்திற்கு அது
வழி வகுத்துக் கொடுக்கும் அது இருக்கட்டும் தாங்கள் தாங்
களை கிறிஸ்தவன் என்று சொன்னீர்கள் இதை பிரித்து பார்த்
தால் கிறிஸ்து + அவன் = கிறிஸ்தவன் என்றாகும்!
அப்படியானால் அவன் தான் கிறிஸ்து நீ கிறிஸ்து ஆகவில்லையே
நீ கிறிஸ்து ஆக முயற்சியும் பண்ணவில்லையே. உமக்கோ
வயது 60 இருக்கலாம் 10 வயது பால்யத்தில் போய்விட்டது
மீதி 50ல் 25 வயது தூங்கி கழித்துவிட்டாய் மீதி 25
வயதில் படிப்பு, கல்யாணம், பிள்ளை, சொத்து, தொழில் என
அநித்யத்தைத் தானே தேடி இருக்கிறாய் உன்னைத் தேட
வில்லையே. உன்னைத் தான் சம்சாரம் என்ற புதைச் சேற்றில்
புதைத்துவிட்டாயே. ஆனால் நீ சாகவில்லை உயிருடன்
தான் இருக்கிறாய். உன்னை நீ தேடி மீட்டினால் நீ அவசியம்
கிறிஸ்து ஆக முடியும். நீ கிறிஸ்து ஆகாமல் கிறிஸ்து
அவன் என்றே கத்திக் கொண்டிருந்தால் என்ன பிரயோ
ஜனம்? இங்கு இனத்தை (ஜாதியை) வளர்க்கிறாய்! மதத்
தை வளர்க்கிறாய்! வெறியான துவேஷத்தை வளர்க்கிறாய்!
இங்கு சாந்தி, அமைதி, நிம்மதி எங்கே கிடைக்கும்? நீ கிறிஸ்து
ஆகு! நீ இறைவன் ஆகு! உன்னால் முடியும். அடங்கி வாழ்ந்தால்
அமரவாழ்வு பெறலாம் பணத்தாலும், பதவியாலும், இனத்தாலும்
மதத்தாலும் அடக்க நினைத்தால் அழிந்து போவாய்!
(இதை சொல்லும் போது யாம் யாமாக இல்லை அதுவாக இருந்தோம்) (அவகை)



உ

கேள்வி:— அவர் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்
போதும் ஐயனே போதும் மதம் இனி வேண்டாம் என
தெரிந்து கொண்டேன். தெய்வம் ஒன்றுண்டு அதை எப்படியும்
அன்பாக அழைக்கலாம் என தெரிந்து கொண்டேன். ஆனால்
முகமதியனுக்கு ஓர் வரி கோடிட்டு காட்டி விட்டால் போதும்
அதையும் இனமாகத் தான் கொள்கிறார்கள் அவ்வாறாக எவரும்
காணவில்லையே அதையும் சற்று விளக்கி விடுங்கள்.

பதில்:— அது சிரித்துக் கொண்டே சொல்லியது! ஐயா! இந்த முகமதியன்
என்ற வார்த்தையையும் பிரித்துப் பார்த்தால்
முகம் + மதி + அவன் = முகம் மதியன் என பொருள் படும்
குளிர்ந்த பூரண சந்திரன் போல் முகத்தை உடைய அவ்வா என
பொருள்படும். அப்படியானால் அந்த மஹானுடைய அல்லா
இன்முகமாக, சாந்த சொரூபியாக எந்த விஷயம் அதுவாக
(இறைவனாக) இருந்தார் ஆனால் இன்றைய முகமதியர்கள்
அப்படியா இருக்கிறார்கள்? கடுமை, கொடுமை, விகாரம்,
விபரீதபுத்தி உடையவர்களாக இறைவன் பெயரையே
கெடுத்துக் கொண்டிருக்கிறார்களே என்ன செய்வது? இது
கலிகாலத்தின் கொடுமை என உண்மையை உணர்ந்தவர்
கள் இறைநாமத்தைச் சொல்லி அடங்கி இருக்க வேண்டியதுதான்

கேள்வி:— ஐயா தாங்கள் விளக்கம் புதிதாகவும், புதுமையாகவும்
பூரண நிறைவாகவும் இருக்கிறது. இதுகாலவரை எங்கும் கேட்
டதும் இல்லை; படித்ததும் இல்லை ஆனாலும் வெகு பொருத்தமாக
இருக்கிறது. இதை இப்படியே அறிவுபூர்வமாக ஒவ்வொருவனும்
உணர்ந்து விட்டால் அங்கு ஜாதி ஏது? மதம் ஏது? வன்
முறை ஏது? அமைதி நிலவும் அனைவரும் இந்து (ஒற்றுமை)
யாக இருக்கலாமே!

பதில்:— இந்த விளக்கமும் உபதேசமும் உங்களுக்கே தவிர உலகிற்
கில்லை. நாய்வாலை நிமிர்த்த முடியாது. நீங்கள் இதன்படி உணர்
ந்து நடந்தால் உங்களைப் பார்த்து உணர்ந்தவர்கள் அவசியம்
திருந்துவார்கள் உங்கள் உபதேசத்தை விட உங்கள்
வாசனை (நடத்தை) ஒன்றே போதும் விவேகம் உடையவர்களை
உஜ்ஜீவிக்க. அவிவேகிகளுக்கு ஆயிரம் முறை ஓதினாலும்
அதுபவன் இல்லை மேலும் விளக்கம் கொடுப்பவன் அவஸ்
யம் கெட்டுப் போவான்!



2

மேலே கண்ட கேள்வி பதில்களில் ஓர் சிறிய உண்மை!
அதாவது கிருஷ்ணனும் கிறிஸ்துவும் ஒன்றே அதாவது இருவரையும்
ஒன்றுபடுத்திப் பார்த்தால் வாழ்விலும் சில செயல்களிலும்
ஒற்றுமையைக் காணலாம்!
கிறிஸ்து பிறந்தது மாட்டுக்கொட்டகை.
கிருஷ்ணன் வளர்ந்தது மாட்டுக் கொட்டகை.
கிறிஸ்துவின் தகப்பனார் தொழில் தச்சு; ஆனால் சிலகாலம் ஆடுகள்
மேய்ப்பவனாக இருந்தார் (யாமே நல்ல மேய்ப்பன்)
கிருஷ்ணன் விளையாட்டு பருவம் வெண்ணை திருடல்; பின் சிலகாலம்
ஆனிரை (பசுக்களை) மேய்த்தான். ஆகவே அவனை கோவிந்தன் என்றும்
கோபாலன் என்றும் அழைப்பதுண்டு!
கோவிந்தன்:- பசுக்களை மேய்ப்பவனின் சரணத்தை அடை. ஆதி
சங்கரர் சொல்வதும் மந்திரங்களில் எளிமை இனிமை காயத்ரி என்றும்
புனித தீர்த்தத்தில் கங்கை என்றும்; எளிமையான இனிமையான ;
சுகம் தரும் நாமா கோவிந்தா என்றும் குறிப்பிடுவார். இந்த
கோவிந்தாவுக்கு இன்றென்றும் முக்யமாகச் சொல்
வார்கள் அதாவது இந்த ஜீவனின் பசுத் (ஜீவத்) தன்மையையும்,
அதனால் விளைந்த பாச (பந்தம் பற்றுத்) தன்மையையும் நீக்கி தன்
திவ்ய சரணாரவிந்தங்களில் சேர்த்துக் கொள்பவன் எனப்படுவான்.
கோபாலன்:- பசுக்களை மேய்க்கும்பாலன். அதாவது ஜீவர்களாகிய
நாம்பசு நம்மை ஒழுங்காக மேய்ப்பவன் எனப்படுவான்!
(பட்டிசாதித்தாமல்) கிறிஸ்துவும்: ஆடுகளை மேய்க்கும் காலத்தில் நொண்டி சப்பாணி
நடக்க இயலாத ஆடுகளுக்காகவும் ஆயன் காத்திருப்பது போல கிறிஸ்
துவும் ஜீவர்களாகிய நமக்காக காத்திருந்து தம் அபய கரம் இரண்
டையும் அகலவிரித்து வாருங்கள் குழந்தைகளே உங்களுக்
காக காத்திருக்கிறேன் என அன்பும் கனிவும் நிறைந்த முகத்துடன்
காத்திருக்கிறார் என்பார். ஆகவேதான் தம் கனிமொழியால்
யாமே நல்ல மேய்ப்பன் என்றும் யாமே ஸத்ய மும், வழியும்,
ஜீவனுமாக இருக்கிறோம் என்றும் அத்வைத போதனையை சொல்
லாமல் சொல்லி உண்மையை சூக்ஷமமாக உணர்த்திநிற்கிறார்.
கிருஷ்ணனும் சில அற்புதவேலைகளை செய்கிறான்.
கிறிஸ்துவும் சில அற்புதவேலைகளை செய்கிறார்.
கிருஷ்ணனை அழிக்க கம்சமன்னன் காத்திருந்தான்.
கிறிஸ்துவை அழிக்க ஏரோது மன்னன் காத்திருந்தான்.
ஆனால் இருவர் மரணமும் துர்மரணம் ஆனால் சற்று மாறுபட்டது ஒற்றுமை
யில் பார்த்தால் இருவருக்குமே இரும்பால் தான் மரணம் சம்பவித்தது.

——X——X——X——X——X——X——



உ

குழந்தாய்!

ஸ்ரீ குருதேவர் தம் சிஷ்யனின் மனோ
பக்குவத்தை உணர்ந்து இந்த நான்கு மஹா
வாக்கியங்களையும் முறையாக

௧. தத் த்வம் அஸி என்றும், அதாவது
காலாதீத அந்த ஒன்றாக நீ இருக்கிறாய் என
சொல்ல, ஜீவன், நான் சாதாரண ஜீவன்
தானே என நவில, அவர் நிமித்தம்

௨. அவனுக்கு ஸ்வய அனுபவத்தை கொடுக்கும்
அகம் ப்ரம்மாஸ்மி என ஓர்
மகா வாக்கியத்தை கொடுத்து நான் எனது
என்ற அஹங்கார மமகாரத்தை முழுமையாக
கெடுத்தால் நீ அது என ஆகுவாய் போதிக்க, அவன்
நான் எப்படி இருந்தால் அது நாம் என ஆகலாம்
என வாதிக்க, அவர் அவனுக்கு

௩ நீ ப்ரக்ஞானம் பிரம்மம் என போதித்து
நீ தெய்வ பிரக்ஞையோடு இரு உடல் உலக
பிரக்ஞையாக இராதே, உன் சாதனையை
அனுசரித்து அந்த தெய்வ பிரக்ஞையையும்
விட்டு ஆத்ம பிரக்ஞையோடு இரு, பரமாத்ம
பிரக்ஞையோடு இரு, பிரம்ம பிரக்ஞையோடு இரு
குணதோஷ சம்பந்த ஜீவப்பிரக்ஞையோடு
இராதே உன் அனுபவம் முதிர்ச்சியான பரியந்
தம் உண்மையானது

௪. "அகம் பிரம்மம், பிரம்மம் அகம்"

என்றும்,

அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்

அகமே எல்லாம்!!!

என்றும்,

சத்வாத்ம பாவனையில் இருப்பாயாக, என
அவனை அந்த ஒன்றிலேயே நிலை நிறுத்தினார்.
அவனும் இடையறாத அப்யாசத்தினால் அனைத்
தையும் விடுத்து தெய்வ இருப்பினில்



உடல் உலக இனிமையை விட்டு
குருகிருபையினால் "மனோ நலம்
பெற்று" உடல் நலத்தையும் மனோ
நலத்தையும் மறந்து, மறந்து,
"ஆத்மசுகம் பெற்றவனாய்"
"ஸ்வய அனுபவம் பெற்றவனாய்"
தம் குருதேவரிடம் பிரம்மானந்த சகிதனாய்
ஹே குருதேவா!!
"அயமாத்மா பிரம்மம்"
என்று ஸ்வய ஞானானுபவனாய் ஞான சபைக்கு
சம்மதனாய் அதுவாக பிரகாசிக்கிறோம்
என்றான்.

பின்

தனக்கு உபதேசித்த குருதேவரையும்
காணோம்; உபதேசபாடம் கேட்ட தன்னையும்
காணோம்; அமர்ந்து பாடம் கேட்ட உலகையும்
காணோம்; இந்நிலையில் அவன் சொல்லும்
வாசகம்:—
ஹே பரம குருவே!
சற்று ஒரு வினாடிக்கு
முன் இருப்புடையதைப் போல் தோன்றிய
உலகைக் காணோமே! எவராவது களவாடிச்
சென்று விட்டனரா? இதை எண்ண முடியவில்லை
ஆனாலும் பின் சந்ததியினருக்காக எம் யோ
அனுபவத்திற்கு உள்ளதை வியவஹாரத்திற்காக
புலம்புகிறோம்

இது ஆனந்த புலம்பலாகுமே தவிர
உண்மையல்ல!!!



உ

எம் ஸ்வய அனுபவத்தின் குழந்தைகளே,
யாமே விளையாட்டார்த்தமாக இவ்
வண்ட நண்ட பிரம்மாண்டங்களை உண்டு
பண்ணினோம்! யாமே நிரிகர்த்தாக்
களானோம்! யாமே அனந்த ஜீவ
கோடிகளும் ஆனோம்! யாமே அவை
அனைத்தும் அனுபவிக்கும் போக போக்ய
மானோம்! யாமே எம்மனதை உண்டா
க்கி எம்மனதை வைத்தே எம்மனமய
கற்பனையினால் இல்லாத ஜகத்தை இருப்பதாக
அடையது போல் விளையாடினோம்! நடித்தோம்
எம் பேரானந்த விளையாட்டை யாமே
மன் எம்முள் அடக்கி யாமாகவே நனைத்து
இருக்கிறோம். யாம் இப்போது பிரம்
மானந்த சுகசொரூபமாக இருக்கிறோம்.
இந்த விபரீதபுத்தியும் இல்லை, வினோத
விளையாட்டும் இல்லை!

ஒன்றென்று இருக்கிறோம் என சொல்வத
ற்கும் இல்லை. இங்கு அப்படி சொல்வது
யார்? அதை கேட்பது யார்? ஒன்றென்ற
வஸ்து தான் ஏது?

சுந்தரம்மா!

ஒரு விநாடியில் விளையாடிய
விளையாட்டு மின்னலைப் போல்
மறைந்து விட்டதே!

உலகம் வந்ததற்கோ, அது இருந்த
தற்கோ, திரிகர்த்தாக்களாக இருந்து
சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என விளை
யாடியதற்கோ ஜீவர்களாக இருந்ததற்கோ
எந்த நடயமும் இல்லையே!!



உ

யாம் எப்படி வந்தோம். எப்படி
இருந்தோம், எப்படி விளையாடினோம்;
என விளக்கிச் சொல்லும்

வாக்கும் இல்லை! அந்த எண்ண
மும் இல்லை!! அதை சார்ந்த
மனமும் இல்லையே!!!

யாம் அதுவாக இருக்கிறோம் என எவரிடம்
சொல்வது? எம்மிடமே யாம் சொல்வோம்
என்றால் எமக்கு இருப்பும் இல்லையே!!
யாம் எப்படி இப்படி வந்தோம்? எப்படி
எங்கு இருந்தோம்? எப்படி எங்கு
மறைந்தோம்? ஆனால் யாம் வந்ததும்
இல்லை! இருந்ததும் இல்லை!!
மறைந்ததும் இல்லையே!!!

ஆனால் ஓர் உண்மை!

**யாம் இருக்கிறோம்.**

எம் அன்புக் குழந்தைகளே!

இதை உங்கள்
மனதால் காணவோ அறியவோ முடியாது!
கூர்ந்த அறிவால் தான் உணரமுடியும். அந்த
அறிவும் தம்மில் மறைந்து மௌனமாக வேண்டும்.

அதன் பயிற்சி இதுவே!
இந்த பயிற்சியும் முயற்சியும் விரயமே.
"அடக்கி புலனைப் பிரித்தே"
அவன் ஆகிய மேனியில் அன்பை
வளர்த்தேன்!!!
"மடக்கிக்கொண்டான் எம்மை தன்னுள்"
சற்றும் வாய் பேசா வண்ணம் மாயம்
செய்தாண்டி!!



உ

ஆனால் இது பயிற்சியும் முயற்சியும் இல்லை
யின்

அடக்கிப் புலனை மிரி என்கிறயே எனக் கேட்கலாம். நன்கு கவனி பாடலில் அந்த அடியார் அடக்கிப் புலனைப் மிரி என்றதை

"அடங்கி இரு" எனப் பொருள்கொள்.

அடங்கியிருத்தலும் ஓர் சாதனை தானே என நீ கேட்கலாம் இங்கு அடங்குதல் என்பது நீ எந்த நிலையிலும்

"பயிற்சியும் முயற்சியும்" இல்லாமல்

"விடுவாயாக" என்பதாகும்.

"விடுவது பயிற்சியும் முயற்சியும்" ஆகாது

தொடுவது தான் பயிற்சியும் முயற்சியும் ஆகும்.

விடுவதை நீ வெறுமனே விட்டாலும் அது உன்னை விடாது. ஒப்புக் கொடுத்து விட்டால்

"அவன் பார்த்துப்பான்."

என விடுவாயாக!

அதாவது!

ஓர் நாயோ, ஆனையோ, மாடோ நீ எங்கு கொண்டு விட்டாலும் அது மோப்பம் பிடித்து உன் வீடு வந்து சேர்ந்து விடும். ஆனால் அதன் உடயஸ்தனிடம் ஒப்படைத்து விட்டால் அவன் அதை கட்டிப் போட்டு விடுவான். சில நாள் அவனிடம் பழகி விட்டால் அது உன்னை மறந்து விடும் நீயும் கவலை பயமற்று இருக்கலாம். நாம ரூப குண தோஷங்கள் எங்கு புழங்குகிறதோ அங்கேயே நின்று விடும்! நீ அதைக் கூர்ந்து நோக்கினால் அது உன்னிடம் ஒட்டும். அதாவது அந்த எண்ணமற்று இருப்பாயாக!



உ

உலகமோ பொருள்களோ அவனுடைமை. தற்காலிகமாக சிலகாலங்களுக்காக உன்னிடம் கொடுத்து வைத்தான். நீ அதை நிரந்தரமாக சொந்தம் கொண்டாடியதால் வந்த வினை தானே.

"இதைவிட்டால் நீ அவன்தானே"

"அவனைவிட்டால் அது நீதானே"

ஏன் கஷ்டப்படுகிறாய்?

"யானையைபார்க்க வெள்ளெழுத்தா?"

குழந்தாய்!

வாஸனை ஏறி மதமதத்துப் போயிருக்கும் மனதை

"விடுவதென்பது கழுவுதலாகும்"

கழுவுதலென்பது வேகத்தை குறைத்தலாகும் (நிறுத்துவதல்ல)

"வேகம் இருந்தால் குறைக்க முடியாது; விவேகம் இருந்தால் குறைக்க முடியும்."

— த

உ

ஓம்



பசு, பதி, ஈஸ்வரன்.

பசுவின் விளக்கம் :- சொந்தத்தால்
பந்தம்; பந்தத்தால் பாசம்; பாசத்தால்
உறவு; உறவால் பற்று; பற்றுவதால்
ஜனன மரண பயம்.

பதியாக இருந்த நாம் மேலே கூறிய
ஐந்தினையும் பசு ஆனோம். அதாவது
ஆத்மாவாகிய நாம் ஜீவன் ஆனோம்.
மேலே கூறிய ஐந்தும் என்று நம்மை
விட்டு அகல்கிறதோ அன்று நாம் பதியே.
அதாவது ஆத்மாவே. மறைப்பற்ற ஆத்மா
வானால் நாமே பரமாத்மா. மாயை யற்ற
பரமாத்மா நாம் ஆனால் ஸ்வயம் ஜோதி
பரம் பொருள் நாமே.

"அதுவே நீயாய்
நீயே அதுவாய்"

ஸ்வய அனுபவ நிலையில் ஆக வாழ்த்தி
ஆசி வழங்குகின்றேன்!!!



அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!